பெருமாள் - திருமொழியின் — உள்ளுறை.



திருமகள் கொழுநனான ஸர்வேச்வரன், தனக்கு அடிமை செய்து உய்தற்கு இட்டுப் பிறந்த ஆத்மாக்களையெல்லாம் ஆட்கொண்டு உய்விக்கும் பொருட்டுப் பரமபதத்தினின்று (பயிர் செய்பவன் பயிர்த்தலையிலே குடிசை வகுத்துக்கொண்டு அதில் இருந்துகொண்டு அப்பயிரைப் பாதுகாப்பதுபோல) இந்நிலவுலகத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கிற திவ்யதேசங்கள் நூற்றெட்டினுள் முதன்மை தலைமைபெற்றதுமான திருவரங்கம் பெரிய கோயிலில் எழுந்தருளியிருக்கிற அடியவர்க்கெளியனான எம்பெருமான் விஷயமாக முதல் மூன்று திருமொழிகள்; திருவேங்கடமுடையான் விஷயமாக நான்காந் திருமொழி; மலைநாட்டில் திருவித்துவக்கோட்டம்மான் விஷயமாக ஐந்தாந் திருமொழி; ஆக இப்படி அர்ச்சாவதாரங்களிலே ஈடுபட்டு பக்திபரவசமாக விண்ணப்பஞ்செய்த குலசேகராழ்வார், அர்ச்சாவதாரங்களிற் போலவே விபவாவதாரங்களுள்ளும் ராமாவதாரத்திலும் க்ருஷ்ணாவதாரத்திலும் மிக்க ஈடுபாடுடையராதலால், அவற்றிற் கருத்தைச்செலுத்தி, அவற்றுள்ளும் தம்முடைய சிறிதுகாலமே முந்தினதாதலால் சமீபித்ததான க்ருஷ்ணாவதாரத்தை நினைந்து, அதில் அப்பெருமானைத் தாம் அநுபவிக்கப்பெறுமாற் போனமைக்கு இரங்கி, அவ்விரக்கத்தை அவ்வவதாரத்திலே ஆய்ச்சியர்கள் கண்ணபிரானோடு ஊடல் கொண்டு உரைத்த பேச்சுக்களால் ஆறாந்திருமொழியையும், கண்ணபிரானுடைய குழந்தைத் திருவிளையாடல்களை யசோதை கண்டு களித்தாற்போலத் தேவகிதானுங்கண்டு களிக்கப்பெறாமல் இழந்த தேவகிப்பிராட்டி பின்பு கண்ணனைக் கண்டபொழுது வழிவிரக்கத்தோடு பேசின பேச்சுக்களால் ஏழாந்திருமொழியையும், அதன்பிறகு ஸ்ரீராமாவதாரத்தில் மனஞ்செல்லப்பெற்றவராய், அவ்வவதாரத்தில் கௌஸல்யை பெற்ற பேற்றைக்கருதி அவள் அவ்விராமபிரானைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுக்கூறின முறைதானே எட்டாந் திருமொழியையும், தாம் அக்காலத்தில் இராமபிரானை அநுபவிக்கப்பெறாமல் இழந்தமைக்கு — அப்பெருமானைப் பாலப்பிராயத்திலெல்லாம் அநுபவித்து யௌவனபருவத்தில் அநுபவிக்கப்பெறாதே இழந்த தந்தையான தசரதசக்கரவர்த்தியின் தன்மை போறலால், இராமன் வனம் புகுமளவில் அச்சக்கரவர்த்தி ஆற்றமாட்டாது புலம்பிய புலம்பல் முகமாக ஒன்பதாந்திருமொழியையும், செல்வச்செருக்காலும் அதிகாரத்தாலும் அறநெறிகளைக் கைவிடுதற்குரிய ராஜகுலத்திலே பிறந்திருந்தும் பகவானுடைய க்ருபையினாலும் ஆசார்யோபதேசத்தாலும் அந்தத் தோஷங்கள் சிறிதுமின்றி மிக்கதொரு பகவானிடத்திற் பக்தியையும் அப்பெருமானது அடியார்களிடத்திற் பிரதிபத்தியையுமே விசேஷமாகப் பெற்றவரான இவ்வாழ்வார் "கற்பார் இராமபிரானையல்லால் மற்றுங்கற்பரோ" என்றபடி ஸ்ரீராமாவதார வைபவத்தில் மிகவும் ஈடுபட்டு எப்பொழுதும் ஸ்ரீராமாயணத்தையே பாராயணஞ் செய்பவராய் எழுந்தருளியிருந்தவராதலால் அந்த ஸ்ரீராமாயண கதையைப் பின்புள்ளாரும் எளிதாக உணர்ந்து உய்யுமாறு * எல்லையில் சீர்த் தயரதன்றன் மகனாய்த் தோன்றிற்றது முதலாத் தன்னுலகம் புக்கதிறுதியாகவுள்ள சரித்திரங்களைச் சுருக்கமாக உணர்த்தவல்ல பத்தாந் திருமொழியையும் அருளிச்செய்து இத்திவ்யப்ரபந்தத்தைத் தலைக்கட்டியருளினார்.



ஸ்ரீ:

பெருமாள் திருமொழித் தனியன் உரை.

இன்னமுதமூட்டுகேனிங்கேவாபைங்கிளியே! தென்னரங்கம்பாடவல்லசீர்ப்பெருமாள்-பொன்னஞ்
சிலைசேர்நுதலியர்வேள்சேரலர்கோனெங்கள் குலசேகரனென்றேகூறு.

பைங் கிளியே	பசுமைதங்கிய கிளியே!
இன் அமுதம் ஊட்டுகேன்	(உனக்கு) இனிமையானதோர் அம்ருதம் உண்ணத்தருகிறேன்;
இங்கே வா	என்னருகே வருவாயாக;
தென் அரங்கம்	தென் திருவரங்கத்தைக்குறித்து
பாட வல்ல	(இனிய கவிகளை) அருளிச் செய்யவல்ல
சீர்	கல்யாண குணசாலியான
பெருமாள்	மஹாநுபாவர் —,

பொன் அம் சிலை சேர் நுதலியர் வேள்	விரும்பத்தக்கதாய் அழகிய தான புருவத்தை நெற்றியிலே யுடைய மாதர்கட்கு மன்மதனாயவர் —,
சேரலர் கோன்	சேரலமண்டலத்தவர்களுக்கெல்லாம் ராஜா —,
எங்கள் குலசேகரன்	ப்ரபந்நரான நம்முடைய குலத்துக்கும் நிரூபகமான குலசேகராழ்வார்
என்றே கூறு	என்று இதையே நீ வாய்விடாது சொல்லும்.

* * * ஸ்ரீராம பக்தரான குலசேகரப்பெருமாள் அஸ்ஸ்ரீராமபிரானது திருநாமங்களைக் கிளிக்குக் கற்பித்துவைத்து அதன் முகத்தினின்று அவற்றைக் கேட்க விரும்புமாபோலே, குலசேகர பக்தரானவர்கள் அக்குலசேகருடைய திருநாமங்களைக் கிளிக்குக் கற்பித்து அதன் முகமாகக்கேட்க விரும்புகிறபடி. "பொன்னஞ்சிலை சேர்" என்றவிடத்து, சிலை என்ற சொல்—வில் போன்ற புருவத்துக்கு வாசகமாதலால், உவமவாகு பெயர்.

ஆரங்கெட்டபரனன்பர்கொள்ளாரென்றவர்களுக்கே *
வாரங்கொடுகுடப்பாம்பிற்கையிட்டவன்—மாற்றலரை *
வீரங்கெடுத்தசெங்கோல்கொல்லிகாவலன் வில்லவர்கோன் *
சேரன்குலசேகரன்முடிவேந்தர்சிகாமணியே.

ஆரம் கெட	நவரத்தின மாலையொன்று கெட்டுப்போக,
(அதனை ஸ்ரீவைஷ்ணவர்கள் களவு செய்ததாகச் சொன்ன மந்திரிகள் கூற)	
அவர்களுக்கே வாரம் கொடு	அந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் விஷயத்திலே பக்ஷபாதம் பூண்டு
பரன் அன்பர் கொள்ளார் என்று	"பாகவதர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள் களவு செய்யமாட்டார்கள்" என்று சொல்லி
குடப்பாம்பில் கை இட்டவன்	பாம்புக்குடத்தில் கையிட்டருளியவர்—

மாற்றலரை	சத்துருக்களை
வீரம் கெடுத்த செங்கோல்	பரிபவப்படுத்திய செங்கோன்மையை உடையவரும்
கொல்லி காவலன்	கொல்லி என்கிற நகருக்கு நிர்வாஹகரும்
வில்லவர் கோன்	தநுர்வித்தை பயின்றவர்களில் தலைவரும்
சேரன்	சேரதேசத்தரசரும்
முடி வேந்தர் சிகாமணி	முடியுடை மன்னர்களிற் சிறந்தவருமான
குலசேகரன்	குலசேகராழ்வாராவர்.

* * * குலசேகராழ்வார்க்குள்ள ஸ்ரீவைஷ்ணவ பக்ஷபாதாதிசயத்தைக் கூறுவது இது. 'ஸ்ரீவைஷ்ணவர்கள் ஒருபோதும் கெட்டகாரியஞ்செய்யார்' என்று குடப்பாம்பிற் கையிட்டு சபதம்பண்ணின வரலாறு சரித்திரத்தில் விசதம்.

தனியன் உரை முற்றிற்று.

குலசேகரப் பெருமாள் அருளிச்செய்த

பெருமாள் திருமொழி.

[பெருமாள் கோயில் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய உரையோடு கூடியது.]

முதல் திருமொழி—இருளிரிய.

அழகிய மணவாளனுடைய நித்யாநுபவமும் அவ்விடத்துள்ள வைஷ்ணவர்களோடு செய்யும் ஸஹவாஸமும் நமக்கு விரைவில் கிடைக்குமாறு எம்பெருமான் அருள்புரிய வேணுமென்று ப்ரார்த்திப்பது இத்திருமொழி.

647

இருளிரியச்சுடர்மணிகளிமைக்கும்நெற்றி இனத்துத்தியணிபணமாயிரங்களார்ந்த *
அரவரசப்பெருஞ்சோதியனந்தனென்னும் அணிவிளங்குமுயர்வெள்ளையணையைமேவி *
திருவரங்கப்பெருநகருள்தெண்ணீர்ப்பொன்னி திரைக்கையாலடிவருடப்பள்ளிகொள்ளும் *
கருமணியைக்கோமளத்தைக்கண்டுகொண்டு என்கண்ணிணைகளென்றுகொலோகளிக்குநாளே. ()

திரு அரங்கம்	ஸ்ரீரங்கமென்னும்	மேவி	பொருந்தி
பெரு நகருள்	பெரிய நகரத்திலே	தென் நீர் பொன்னி	தெளிந்த நீர்த்தன்மையுடைய காவிரியானது
இருள் இரிய சுடர் மணிகள் இமைக்கும்	இருளானது சிதறி யோடும்படி ஒளி விடுகின்ற மணிகள் விளங்கப் பெற்ற	திரை கையால் அடி வருட	அலைகளாகிற கைகளாலே திருவடிகளைப் பிடிக்க
நெற்றி	நெற்றியையும்	பள்ளி கொள்ளும்-திருக்கண் வளர்ந்தருளாநின்ற	
இனம் துத்தி	சிறந்த புள்ளிகளையும்	கரு மணியை	நீலமணி போன்றவனாய்
அணி	அழகை யுடைய	கோமளத்தை	சௌகுமார்யமே வடிவெடுத்தவரான பெரிய பெருமாளை
ஆயிரம் பணங்கள் ஆர்ந்த	ஆயிரம் படங்களை உடையவனும்	என் கண் இணைகள்-என் கண்களானவை	
அரவு அரசன்	பாம்புகளுக்கும் தலைவனும்	கண்டு கொண்டு	சேவிக்கப் பெற்று
பெரு சோதி	மிக்க தேஜஸ்ஸை யுடையவனுமான	களிக்கும் நாள்	ஆனந்தமடையும் நாள்
அனந்தன் என்னும்-திருவனந்தாழ்வானாகிற		என்று கொல்	என்றைக்கோ!
அணி விளங்கும் உயர் வெள்ளை அணையை	அழகு மிக்கு உயர்த்தியை யுடைய வெள்ளைநிறமான திருப்படுக்கையிலே		

*** திருவரங்கம் பெரியகோயிலில் உபயகாவேரீ மத்யத்தில் திருவனந்தாழ்வான் மீது திருக்கண் வளர்ந்தருளாநின்ற அழகிய மணவாளனை அடியேன் கண்ணாரக்கண்டு களிக்கும் பாக்கியம் என்றைக்கு வாய்க்குமோ! என்கிறார். ஆயிரம் பைத்தலை அனந்தனுடையான் ஒவ்வொரு தலையிலும் ஒவ்வொரு மாணிக்கமணி உண்டாகையால் மணிகள் எனப்பட்டது. ஒரு மணியின் சுடரே இருளனைத்தையும் ஒழிக்கவற்றாயிருக்க, ஆயிரம் மணிகளின் சுடரால் இருளிரியச் சொல்லவேண்டாவே. இமைத்தல்—விழித்தல்; அதாவது இங்கு, விளங்குதல். துத்தி- படத்தின் மேலுள்ள பொறி. மேவி என்ற வினையெச்சம் பள்ளி கொள்ளும் வினையைக்கொண்டு முடியும். பொன்னி—பொன்களைக் கொழிக்கையாலே காவிரிக்குப் பொன்னியென்ற பெயராயிற்று. கநகநதீ என்றும் ஹேமாபகா என்றும் வடநூலில் வழங்கப் படுவதும் இதுவே. "பொன்னி திரைக்கையாலடிவருட" என்றது—காவிரியின் அலைகள் இனிதாக மோதிக் குளிர்ச்சி பெற்றுள்ள கரையிலே பரமாநந்தமாகக் கண் வளர்ந்தருள்கின்றமையைக் கூறியவாறு. கோமளம்—வடசொல், "கன்றால் துகைக்க வொண்ணாத சௌகுமார்ய முடையவனை" என்பது வியாக்கியானம். (க)

648 வாயோரீரைஞ்நூறுதுதங்களார்ந்த வளையுடம்பினழல்நாகமுமிழ்ந்தசெந்தீ *
வீயாதமலர்ச்சென்னிவிதானமேபோல் மேன்மேலும்மிகவெங்கும்பரந்ததன்கீழ் *
காயாம்பூமலர்ப்பிறங்கலன்னமாலைக் கடியரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும் *
மாயோனைமணத்தூணேபற்றிநின்று என்வாயாரவென்றுகொலோவாழ்த்துநாளே. (௨)

கடி அரங்கத்து	பரிமளம்மிக்க கோயிலிலே	என்றும் மேன்மே லும் பரந்து மிக	எங்கும் மென்மேலும் விஸ்தரித்து விளங்க
ஈர் ஐஞ்ஞூறு வாய்	ஆயிரம் வாய்களிலே	அதன் கீழ்	(ஆதிசேஷன் உமிழ்ந்த அக்நிஜ்வாலையாகிற) அந்தப்புஷ்ப விதானத்தின் கீழே
துதங்கள் ஆர்ந்த	ஸ்தோத்ர வாக்யங்கள் நிறைந்திருக்கப் பெற்றவனும்	அரவு அணையில்	சேஷசயனத்திலே
வளை உடம்பின்	வெளுத்த உடம்பை யுடையவனும்	பள்ளி கொள்ளும்	கண்வளர்ந்தருளா நிற்பவனும்
அழல்	(எதிரிகள் வந்து கிட்டவொண்ணாதபடி) அழலே உமிழாநிற்பவனுமான	காயா பூ மலர் பிறங்கல் அன்ன	காயாவின் அழகிய பூக்களாலே தொடுக்கப்பட்ட திருமாலை போன்றவனும்
நாகம்	ஆதிசேஷன்	மாலை	பெருமை பொருந்தியவனும்
உமிழ்ந்த	(தன் வாயினின்று) வெளிக் [illegible]	மாயோனை	ஆச்சரியனான ஸ்ரீரங்கநாதனை (அடியேன்)
செம் தீ	செக்கிறமான அக்கிநிஜ்வாலையானது	மணம் தூண் பற்றி நின்று	திருமணத் தூண்களிரண்டையும் அவலம்பமாகப் பற்றிக்கொண்டு நின்று
சென்னி	தலையின் மேலே	என் வாய் ஆர வாழ்த்தும் நாள் என்று கொல்	என் வாய்த்தினவு தீர ஸ்தோத்ரம் செய்யுங்காலம் என்றைக்கு வாய்க்குமோ?
வீயாத மலர் விதானம் போல்	அழிவில்லாத புஷ்பங்களால் அமைந்ததொரு மேற்கட்டிபோல		

* * * ஆயிரம் வாய்களாலும் ஆயிர நாமங்களைச் சொல்லி எம்பெருமானைத் துதிப்பவனும், 'சுத்த ஸத்வகுணமுடையவன்' என்பது நன்கு விளங்குமாறு பால்போல் வெளுத்த உடலையுடையவனுமான ஆதிசேஷன், எம்பெருமானிடத்துள்ள பரிவின் மிகுதியாலே அவ்விடத்திலும் பயத்தை மங்கிப்பவனாதலால் கொடிய அரக்கஅசுரர்கள் விபவாவதாரங்களிற்போல அர்ச்சையிலும் வந்து கலிவர்களோ என்றும் அதிசங்கையிலும் அவர்கள் அணுகமுடியாதபடி எப்போதும் அழலே வாயில் நின்று கக்கிக்கொண்டிருப்பதனால் செக்கிறமான அந்த அக்கிநிஜ்வாலையானது அவனுடைய தலைகளின் மேற் கிளம்பி விசேஷமாகப் பரவி 'செண்பகம் முதலிய செம்மலர்களாலே ஒரு மேற்கட்டி அமைக்கப்பட்டுளதோ' என்று உத்ப்ரேக்ஷிக்கத் தக்கதாய் விளங்க, அத்தகைய மேற்கட்டியின் கீழே அரவணையின் மீது பள்ளிகொண்டருளாநின்ற பெரியபெருமாளை சேவித்தமாத்திரத்திலேயே "காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" என்றபடி நைந்து பிறகு தரித்து நிற்கமுடியாத அவஸ்தை விளையுங்கால் அவ்வழகிய மணவாளனுடைய திருக்கண்ணோக்கத்திலே நிலைநின்ற இரண்டு திருமணத்தூண்களை அவலம்பமாகப் பற்றிக்கொண்டு தரித்துநின்று, வெகுகாலம் இழந்த இழவுதீர ஸ்தோத்ரம் பண்ணும்படியான பாக்கியம் என்றைக்கு வாய்க்குமோ? என்கிறார். [மணத்தூணே பற்றிநின்று] அழகிய மணவாளன் ஸந்நிதியில் ஸ்நபநமண்டபத்தண்டையிலிருக்கும் இரண்டு தூண்களுக்குத் "திருமணத்தூண்" என்பது ஸம்ப்ரதாயத் திருநாமம். இதனை கல்யாணஸ்தம்பமென்று வடமொழியில் வழங்குவர். மணம்—மணம். "மணத்தூணருகில் நின்றுகொண்டு" என்னாமல் "பற்றி நின்று" என்றதன் உட்கருத்தை ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் பட்டர் வெளியிட்டருளினார்;—

"[illegible]
[illegible]" என்று.

அழகிய மணவாளனுடைய திருக்கண்களுக்கமாகிற அமுதயாற்றின் பெருமையினை மாளாது அநுபவிக்க இழிந்தவர்களை ஒருமித்து நிலைநின்று அநுபவிக்க வொண்ணாதபடி அக்கொந்தளிப்பு அலைக்குமளவில், அவர்கள் அவலம்பமாகப் பற்றிக்கொண்டு நிற்பதற்காக காட்டப்பட்டுள்ளவைபோன்ற திருமணத்தூண்களைப் பற்றுவோம் என்பது இந்த ச்லோகத்தின் கருத்து. அழகிய மணவாளனது திருமேனியின் பரிமளம் இரண்டு தூணுகப் பரிணமித்து உருவெடுத்து நிற்பதால் "திருமணத்தூண்" என்று திருநாமமாயிற்று என்பர். (௨)

649 எம்மாண்பினயன்நான்குநாவினாலுமெடுத்தேத்தி ஈரிரண்டுமுகமுங்கொண்டு *
எம்மாடுமெழிற்கண்களெட்டினோடும் தொழுதேத்தியினிதிறைஞ்சநின்றசெம்பொன் *
அம்மான்றன்மலர்க்கமலக்கொப்பூழ்தோன்ற அணியரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும் *
அம்மான்றனடியிணைக்கீழலர்களிட்டு அங்கடியவரோடென்றுகொலோவணுகுநாளே. (௯)

எம்மாண்பின் அயன்	எல்லாவிதத்தாலும் முண்டான பெருமையையுடைய நான்முகன்	செம் பொன் அம்மான் தன்	செவ்விய பொன்போல் (விரும்பத்தக்க வடிவுடைய) ஸ்வாமியான தன்னுடைய
நான்கு நாவினாலும்	(தனது) நான்கு நாக்குகளாலும்		
எடுத்து	சொற்களை யெடுத்து	மலர் கமலம் கொப்பூழ்	தாமரைப் பூவையுடைய திருநாபியானது
ஏத்தி	துதித்து	தோன்ற	விளங்கும்படி
ஈர் இரண்டு முகமும் கொண்டு	நான்கு முகங்களாலும்	அணி அரங்கத்து அரவு அணையில் பள்ளிகொள்ளும்—	
இனிது ஏத்தி	இனிமையாக (வேதங்களாலே) ஸ்தோத்திரம் பண்ணி	அம்மான் தன்	பெரிய பெருமாளுடைய
எழில் கண்கள் எட்டினோடும்	அழகிய எட்டுக்கண்களினாலே.	அடி இணை கீழ்	திருவடிகளின் கீழே
எம் மாடும்	எல்லாப்பக்கங்களிலும்	அலர்கள் இட்டு	புஷ்பங்களை ஸமர்ப்பித்து
தொழுது இறைஞ்ச நின்ற	வணங்க வேண்டும்படி அமைந்த	அங்கு அடியவரோடு	அங்குள்ள கைங்கர்யபரர்களோடு கூட
		அணுகும் நாள் என்று கொல்	நெருங்கி வாழ்வது என்றைக்கோ ?

* * *—பிரமன் வாயாரவாழ்த்திக் கண்ணாரக்கண்டு களிக்கும்படியாகவும், ஸகல லோகங்களினுடையவும் ஆவிர்ப்பாவத்துக்குக் காரணமாகிய திருநாபிக்கமலம் நன்கு விளங்கும்படியாகவும் திருவனந்தாழ்வான் மீது சயனித்தருளாநின்ற பெரியபெருமாளை ஆராதிக்கின்ற அடியார்களோடுகூட நானும் ஆராதிக்கும்படி அந்த திவ்யஸந்நிதானத்திற்குப்போய்ச் சேரும் பாக்கியம் என்றைக்கு வாய்க்குமோ! என்கிறார்.

எம்மாண்பின்—துதிப்பதற்கு உறுப்பான வாக்தேவியை எப்போதும் தன்வசமாகக் கைக்கொண்டிருக்கும் அதிசயத்தையுடையவன் என்பது உட்கருத்து, பட்டர் இப்பாசுரத்தைப் பெரும்பாலும் திருவுள்ளம்பற்றியே ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தர சதகத்தில், [௭௯.]

“ [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ”

என்ற ச்லோகமருளிச்செய்தாரென்க. (௯)

650 மாவினைவாய்பிளந்துகந்தமாலை வேலைவண்ணனையென்கண்ணனைவன்குன்றமேந்தி *
ஆவினையன்றுய்யக்கொண்டவாயரேற்றை அமரர்கள்தந்தலைவனைத்தமிழினின்பப்
பாவினை * அவ்வடமொழியைப்பற்றற்றார்கள் பயிலரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும் *
கோவினைநாவுறவழுத்தியென்றன்கைகள் கொய்ம்மலர்தூயென்றுகொலோகூப்புநாளே. (௰)

மாவினை வாய் பிளந்து உகந்த மாலை	குதிரை வடிவங்கொண்டு வந்த கேசியினுடைய வாயைக் கிழித்து மகிழ்ந்த பெருமானும்
வேலை வண்ணனை	கடல்போன்ற வடிவையுடையவனும்
என் கண்ணனை	'என்னுடையவன்' என்று அபிமானிக்கக்கூடிய (ஸௌலப்யனான) கிருஷ்ணனும்
அன்று	(இந்திரன் கல் மழை பெய்வித்த) அக்காலத்திலே
வன் குன்றம் ஏந்தி	வலிய (கோவர்த்தன) மலையை (குடையாக) தூக்கி
ஆவினை உய்யக் கொண்ட	பசுக்களைக் காப்பாற்றியருளின
ஆயர் ஏற்றை	இடையர் தலைவனும்
அமரர்கள் தம் தலைவனை	நித்யஸூரிகளுக்குத் தலைவனாய்,
அம் தமிழின் இன்பப் பாவினை	அழகிய தமிழ்ப்பாஷையாலாகிய ஆனந்தமயமான அருளிச்செயல் போல் போக்யனும்
அவ்வடமொழியை	அழகிய ஸம்ஸ்க்ருத பாஷையாலாகிய ஸ்ரீராமாயணாதிகள் போல் போக்யனும்
பற்று அற்றார்கள் பயில் அரங்கத்து	ஸம்ஸார பந்தம் அற்றவர்களான விரக்தர்கள் நித்ய வாஸம் செய்கிற கோயிலிலே
அரவு அணையில் பள்ளிகொள்ளும்—	
கோவினை	ஸ்வாமியான ஸ்ரீ ரங்கநாதனை
நா உற	நாக்குத் தடிக்கும்படி
வழுத்தி	துதித்து
என் தன் கைகள்	என்னுடைய கைகளானவை
கொய் மலர் தூய்	(காலத்தில்) பறிக்கப்பட்ட புஷ்பங்களைப் பணிமாறி
கூப்பும் நாள் என்று கொலோ	அஞ்சலி பண்ணும் நாள் எதுவோ!

*** குதிரை வடிவங்கொண்டு தன்னைக் கொலைக்கொள்ளவந்த கேசியென்னு மசுரனைக் கொன்று தன்னை நித்யாநுபாவ்யனாக உபகரித்தருளினவனும, கடலைக் கண்டாற்போலே வடிவைக்கண்டபோதே தாபத்ரயமும் தீரும்படியிருப்பவனும், அரியன செய்து ஆச்ரிதரைக் காப்பாற்றினவனும் பரம போக்யனுமான ஸ்ரீரங்கநாதனை ஸ்தோத்ரம்பெறத் துதித்து நன்மலர்களைக் கொணர்ந்து ஸமர்ப்பித்து 'அடியேனை ஆட்கொள்ளவேணும்' என்கிற ப்ரார்த்தனை தோற்றக் கைகூப்பி நிற்கும்படியான பாக்கியம் என்றைக்கு வாய்க்குமோ என்கிறார். எம்பெருமானுடைய ஒப்புயர்வற்ற போக்யதைக்கு அவனுடைய திவ்ய குணங்களை ப்ரதிபாதிக்கின்ற திருவாய்மொழி முதலிய திவ்ய ப்ரபந்தங்களும் ஸ்ரீராமாயணம் முதலிய இதிஹாஸ புராணங்களும் தவிர வேறொன்றும் ஒப்புச்சொல்லத் தகாமையால் "அந்தமிழின் இன்பப்பாவினை அவ்வடமொழியை" என்றார்.

[பற்றற்றார்கள் பயிலரங்கம்.] "சிற்றெயிற்று முற்றல் மூங்கில் மூன்று தண்டர் ஒன்றினர், அற்ற பற்றர் சுற்றி வாழும் அந்தணீரரங்கமே" என்றார் திருமழிசைப்பிரானும். (ரு)

651 இணையில்லாஇன்னிசையாழ்கெழுமி இன்பத்தும்புருவுநாரதனுமிறைஞ்சியேத்த *
துணையில்லாத்தொன்மறைநூல்தோத்திரத்தால் தொன்மலர்க்கணயன்வணங்கியோவாதேத்த *
மணிமாடமாளிகைகள்மல்குசெல்வ மதிளரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும் *
மணிவண்ணனம்மானைக்கண்டுகொண்டு என்மலர்ச்சென்னியென்றுகொலோவணங்குநாளே.

இன்பம்	(வீணாகானத்தாலே) இன்பந்தருகின்ற
தும்புருவும்	தும்புரு மஹர்ஷியும்
நாரதனும்	நாரத முனிவனும்
இணை இல்லா இன் இசை	ஒப்பற்றதும் போக்யமுமான இசையை
யாழ்	வீணையிலே
கெழுமி	சேர்த்து
(வீணாகானத்தைப் பண்ணிக்கொண்டு)	
இறைஞ்சி ஏத்த	(திருவடிகளிலே விழுந்து) வணங்கித் துதிக்கவும்,
தொல் மலர்க் கண் அயன்	நித்யமான நாபிகமலத்திலுதித்த நான்முகனானவன்
வணங்கி	நமஸ்கரித்து
துணை இல்லா	ஒப்பு இல்லாததும்
தொல்	அநாதியுமான
மறை நூல் தோத்திரத்தால்	வேதசாஸ்த்ரங்களாகிற ஸ்தோத்ரங்களால்
ஓவாது ஏத்த	இடைவிடாமல் துதிக்கவும்
மணி மாடம் மாளிகைகள்	மணிமயமான மாட மாளிகைகளையும்
மல்கு செல்வம்	பூர்ணமான ஸம்பத்தையும்

மதிள்	சப்தப்ராகாரங்களையுமுடைய	கண்டுகொண்டு	சேவித்து
அரங்கத்து	கோயிலிலே	என் மலர்ச் சென்னி	என்னுடைய பூமாலை பணிந்த தலையானது
அரவு அணையில் பள்ளிகொள்ளும்—			
மாமணி வண்ணன் அம்மானை	நீலமணிபோன்ற திருமேனி நிறமுடையவனுமான பெருமானை	வணங்கும் நாள் என்று கொல்	(அவன் திருவடிகளில்) வணங்கப்பெறுவது என்றைக்கோ!

* * *—தும்புரு நாரதர் முதலிய முனிவர்கள் பகவத்குணங்களை இனிய இசையுடன் வீணையிலேயிட்டுப் பாடிக்கொண்டும், நான்முகன் நான்கு முகங்களாலும் நான்குவேதங்களை ஓதிக்கொண்டும் வணங்கப் பள்ளிகொண்டருளாநின்ற பெரியபெருமாளை நான் சேவிக்கப் பெறுவதும், அரசாட்சிக்கு ஏற்பப் பூமுடி சூடிக்கிடக்கின்ற என்தலை அவனுடைய திருவடிகளை முடிசூடப் பெறுவதும் என்றைக்கு வாய்க்குமோ! என்கிறார். இன் இசை யாழ் கெழுமி— இனிய இசையையுடைத்தான வீணையை அப்பியசித்து என்னுமாம். (3)

652 அளிமலர்மேலயனரனிந்திரனோடு ஏனையமரர்கள்தங்குழுவுமரம்பையரும்மற்றும் *
தெளிமதிசேர்முனிவர்கள்தம்குழுவுமுந்தித் திசைதிசையில்மலர்தூவிச்சென்றுசேரும் *
களிமலர்சேர்பொழிலரங்கத்துரகமேறிக் கண்வளரும்கடல்வண்ணர்கமலக்கண்ணும் *
ஒளிமதிசேர்திருமுகமும்கண்டுகொண்டு என்னுள்ளமிகவென்றுகொலோவுருகும்நாளே. (4)

அளி மலர் மேல் அயன்	(மதுபானத்துக்காக) வண்டுகள் படிந்திருக்கிற தாமரைப்பூவில் தோன்றிய பிரமனும்	சென்று சேரும்	வந்து சேர்தற்கு இடமான
அரன்	சிவனும்	களி மலர் சேர் பொழில் அரங்கத்து	தேன்மிக்க மலர்களையுடைய சோலைகளை யுடைத்தான கோயிலிலே
இந்திரனோடு ஏனை அமரர்கள் தம் குழுவும்	இந்திரனோடுகூட மற்றுமுள்ள தேவர்களின் திரளும்	உரகம் ஏறி	திருவனந்தாழ்வான்மீது பள்ளி கொண்டு
அரம்பையரும்	ரம்பை முதலிய தேவமாதரும்	கண் வளரும்	திருக்கண் வளர்ந்தருளாநின்ற
மற்றும்	மற்றுமுள்ள	கடல் வண்ணர்	கடல்போன்ற வடிவையுடையரான பெரிய பெருமாளுடைய
தெளி மதி சேர் முனிவர்கள் தம் குழுவும்	தெளிந்த ஞானத்தையுடைய (ஸநகாதி) மஹர்ஷிகளின் கூட்டமும்	கமலம் கண்ணும்	செந்தாமரை போன்ற திருக்கண்களையும்
உந்தி	ஒருவர்க்கொருவர் நெருக்கித் தள்ளி	ஒளி மதி சேர் திரு முகமும்	ஒளியையுடைய சந்திரன் போன்ற திருமுகமண்டலத்தையும்
		கண்டு கொண்டு	சேவிக்கப்பெற்று
திசை திசையில்	பார்த்த பார்த்தவிடமெங்கும்	என் உள்ளம்	என்னுடைய மனமானது
மலர் தூவி	புஷ்பங்களை இறைத்துக் [கொண்டு]	மிக உருகும் நாள் என்று கொல்	மிகவும் உருகுங்காலம் என்றைக்கோ?

* * * தேவர்களும் தேவமாதர்களும் முனிவர்களும் ஆராதனோபகரணங்களைக் கொண்டுவந்து, திரள் மிகுதியாலே ஒருவரையொருவர் நெருக்கித்தள்ளிப் புகும்படியான கோயிலிலே கண்வளர்ந்தருளாநின்ற பெரியபெருமாளுடைய செந்தாமரைக் கண்ணையும் முகசந்த்ர மண்டலத்தையும் சேவிக்கப்பெற்று, 'பாவியேனுக்கும் இப்பேறு வாய்த்த அதிசயம் என்கொல்' என்று நெஞ்சுருகும்படியான நாளும் வரப்பெறுமோ? என்கிறார். (4)

653
மறந்திகழும்மனமொழித்துவஞ்சமாற்றி ஐம்புலன்களடக்கியிடர்ப்பாரத்துன்பம்
துறந்து * இருமுப்பொழுதேத்தியெல்லையில்லாத்தொன்னெறிக்கண் நிலைநின்றதொண்டரான *
அறந்திகழும்மனத்தவர்தம்கதியைப்பொன்னி அணியரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும் *
நிறந்திகழும்மாயோனைக்கண்டென்கண்கள் நீர்மல்கவென்றுகொலோநிற்கும்நாளே. (5)

மறம் திகழும் மனம் ஒழித்து	கொடுமையால் விளங்காநின்ற மனத்தை ஒழித்து
வஞ்சம் மாற்றி	வஞ்சனைகளைப் போக்கி
ஐம் புலன்கள் அடக்கி	கொடிய இந்திரியங்களை அடக்கி
	[பட்டி மேய்கிறபடி தவிர்த்து]
இடர் பாரம் துன்பம் துறந்து	(மென்மேலும்) துக்கத்தை விளைப்பனவாய் பெருஞ்சுமையாய் கிடக்கிற பழவினைகளை வேரறுத்து
இருமுப்பொழுது ஏத்தி	பஞ்சகாலங்களிலும் துதித்து
எல்லை இல்லா தொல் நெறிக் கண் நிலை நின்ற	அளவிறந்த பழைய ஸம்ப்ரதாய நெறியில் நிலைநின்ற
தொண்டர் ஆன	தாஸபூதர்களான
அறம் திகழும் மனத்தவர் தம்	தர்மமென்றதுவே விளங்கும் மனமுடையரான ஸ்ரீவைஷ்ணவர்க்கு
கதியை	ப்ராப்யப்ராபகனும்,
பொன்னி அணி அரங்கத்து	காவேரியால் அழகுபெற்ற கோயிலிலே
	அரவு அணையில் பள்ளிகொள்ளும்—
நிறம் திகழும்	அழகு விளங்காநின்றுள்ள
மாயோனை	ஆச்சர்யனான எம்பெருமானை
என் கண்கள்	எனது கண்களானவை
கண்டு	சேவிக்கப்பெற்று
நீர் மல்க நிற்கும் நாள் என்று கொல்	ஆனந்தக் கண்ணீர் ததும்பும்படி நிற்பது என்றைக்கோ!

* * * முன்னடிகளிரண்டும் ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணங்கூறுவன. "திகழும் மனம் மறம் ஒழித்து" என்று அந்வயித்து, விளங்குகின்ற மனத்தில் நின்றும் கொடுமையை நீக்கி என்றுரைத்தலுமாம். மறம்—கொலை, கோபம், கொடுமை. இடர்ப்பாரத் துன்பம் துறந்து—"பாரமாய பழவினை பற்றறுத்து" என்கை. மறுத்தால் துக்கத்தை விளைக்கக்கூடியதும், மலைபோலக் கிடந்து அமுக்குவதும் நீக்கவொண்ணாதுமான பழவினையை வேரோடு களைந்து என்றபடி.

[இருமுப் பொழுதேத்தி.] இரண்டும் மூன்றும் ஆறு; பஞ்சகாலபராயணர்களை என்றபடி. இதனைச் சிறிது விவரிப்போம்;—ஒரு தினத்தின் பகற்பொழுதை ப்ராத:காலம், ஸங்கவகாலம், மத்யாஹ்நகாலம், அபராஹ்நகாலம், ஸாயங்காலம் என்று ஐந்தாகப்பகுத்து, ஸூர்யோதயம் முதல் அவ்வாறு நாழிகை இவற்றிற்கு முறையே உரியவை என்று வரையறுத்து, அபிகமநம், உபாதாநம், இஜ்யை, ஸ்வாத்யாயம், யோகம் என்ற ஐந்து ஒழுக்கங்களையும் முறையே அந்த (ப்ராத:காலம் முதலிய) ஐந்து சிறுபொழுதிலும் அநுஷ்டிக்கும்படி ஸ்ரீபாஞ்சராத்ரம் முதலிய ஆகமங்கள் கூறும். இவையே ஆசரிக்கவேண்டுவதும் போகாநுஷ்டானமே; இவற்றின் விவரம் வருமாறு:—முதலாவது காழிகையாகிய ப்ராத:காலத்திலே, ஸ்நாநம் ஸந்த்யாவந்தனம் ஜபம் முதலிய காலைக்கடன்களைச் செய்துமுடித்துத் தாம் ஆராதிக்கவேண்டிய எம்பெருமானுடைய ஸந்நிதிக்குச்சென்று ப்ரதக்ஷிண நமஸ்கார ஸ்தோத்ரம் முதலியவற்றால் எம்பெருமானை உபாஸிக்கவேண்டும்; இஃது அபிகமநகாலமெனப்படும். அதற்கு அடுத்த ஸங்கவகாலத்திலே, பகவதாராதநத்துக்கு வேண்டிய சுத்தநீர்த்தம் சந்தனம் புஷ்பம் தூபதீபத்ரவ்யங்கள் முதலியவற்றையும், திருமஞ்சனத்துக்கு வேண்டிய பால் தயிர் நெய் தேன் முதலியவற்றையும் எம்பெருமானுக்கு அமுது செய்விப்பதற்கு வேண்டிய அரிசி பருப்பு கறியமுது சர்க்கரை நெய் தயிர் பழம் முதலிய போஜ்யோபகரணங்களையும் ஸம்பாதித்துத் தொகுத்து வைத்திருக்கவேண்டும். இஃது உபாதாநகாலமெனப்படும். மூன்றாவதான மத்யாஹ்நகாலத்திலே, மாத்யாஹ்நிகஸ்நாநமும் மாத்யாஹ்நிகச் சடங்கும்செய்து விதிமுறை வழுவாது பகவானுக்குத் திருவாராதநம் பண்ணிப் பக்குவமான உணவுகளை அமுது செய்வித்து அந்நிவேதித்த உணவுகளை அதிதிகளோடும் பந்துக்களோடும் புசிக்கவேண்டும். இஃது இஜ்யாகாலமெனப்படும். அதற்கு அடுத்ததான அபராஹ்ந காலத்திலே, மோக்ஷமார்க்கத்துக்கு உரிய வேத வேதாந்த வேதாங்கங்களையும் இதிஹாஸ புராணங்களையும் மற்றும் உரிய நூல்களையும் தாம் கற்றலும் பிறர்க்குக் கற்பித்தலும் வேண்டும். இது ஸ்வாத்யாயகாலமெனப்படும்.

சற்றுதான ஸாயங்காலத்திலே, மாலைக்கடனுமியாஸக்தபாவந்தனைத்தைச் செய்யத் தொடங்கி ஸர்வாஸ்தமனமான பின்பு ஜபத்தைப் பூர்த்திசெய்து இரவு போஜனாந்தரம் யதார்த்தமாக இருந்து ஐம்பொறிகளை அடக்கி ப்ராணாயாமஞ்செய்து மனத்தைப் பரமாத்மாவினிடத்தே நிலைநிறுத்தி பகவத்குணாநுஸந்தானத்தோடு பள்ளிகொள்ளவேண்டும். இது யோககாலநிய மம். இவ்வாறு அநுஷ்டிக்கும் பாகவதர் பஞ்சகாலபராயணர் எனப்படுவர். (எ)

654

கோலார்ந்தநெடுஞ்சார்ங்கம்கூனற்சங்கம் கொலையாழிகொடுந்தண்டுகொற்றவொள்வாள் *
காலார்ந்தகதிக்கருடனென்னும் வென்றிக்கடும்பறவையிவையனைத்தும்புறஞ்சூழ்காப்ப *
சேலார்ந்தநெடுங்கழனிசோலைசூழ்ந்த திருவரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும் *
மாலோனைக்கண்டின்பக்கலவியெய்தி வல்வினையேனென்றுகொலோவாழுநாளே. (அ)

கோல் ஆர்ந்த	அம்புகளோடு கூடிய	வென்றி பறவை இவை அனைத்தும்	ஜயசீலமான பக்ஷி ராஜனும் (ஆகிய) இவையெல்லாம்
நெடு சார்ங்கம்	பெரியதான ஸ்ரீ சார்ங்க மென்னும் வில்லும்	புறம் சூழ் காப்ப	சுற்றுப்புறமும் சூழ்ந்துகொண்டு ரக்ஷிக்க
கூன் நல் சங்கம்	வளைந்து விலக்ஷணமான ஸ்ரீ பாஞ்சஜந்யமென்னும் சங்கமும்	சேல் ஆர்ந்த நெடு கழனி	(சேலெனப்படும்) மீன்கள் நிரம்பிய விசாலமான கழனிகளாலும்
கொலை ஆழி	(எதிரிகளைக்) கொலைசெய்ய வல்ல சக்கரமும்	சோலை சூழ்ந்த	சோலைகளாலும் சூழப்பட்ட
கொடு தண்டு	(பகைவர்களுக்குக்) கொடுந் தொழில்புரிகின்ற கௌமோதகி யென்னும் கதையும்	திரு அரங்கத்து அரவு அணையில் பள்ளிகொள்ளும்—	
கொற்றம் ஒள் வாள்	வெற்றிபெற்று ஒளிமிக்க நந்தகமென்னும் வாளும்	மாலோனை	ஸர்வஜ்ஞனான எம்பெருமானை
கால் ஆர்ந்த கதி	வாயுவேகம் போன்ற மிகவும் விரைந்த நடையையுடைய	வல் வினையேன்	மஹாபாபியான அடியேன்
கருடன் என்னும்	பெரியதிருவடி யென்னும் பெயருடைய	கண்டு	ஸேவிக்கப்பெற்று
		இன்பம் கலவி எய்தி	ஆநந்தமயமான ஸம்ச்லேஷத்தையும் பெற்று
		வாழும் நாள் என்று கொல்	வாழ்வது என்றைக்கோ ?.

* * * பஞ்சாயுதங்களும், திருவடி விஷ்வக்ஸேனர் முதலிய நித்யஸூரிகள்களும் 'அழகிய மணவாளனுக்கு எந்த ஸமயத்தில் என்னாகுமோ!' என்று அதி ஸங்கை பண்ணி எப்போதும் சுற்றுப்புறமும் சூழ்ந்து காவலாயிருக்கத் திருவனந்தாழ்வான் மீது திருக்கண் வளர்ந்தருளாநின்ற பெரிய பெருமாளை, ஸாம்ஸாரிக வ்யாபாரங்களிலேயே ஊன்றியிருக்கும்படி மஹாபாபத்தைப் பண்ணி நித்ய கைங்கர்யத்தை இழந்து கிடக்கிற அடியேன் என்றைக்கு ஸேவித்து வாழப்பெறுகிறேன் என்கிறார்.

இப்பாசுரத்தை அடியொற்றியே ஆழ்வான் ஸ்ரீவைகுண்ட ஸ்தவத்தில்
[illegible]
[illegible] ।
[illegible] ஸ்ரீ [illegible]
[illegible]" ॥
என்ற ச்லோகமருளிச் செய்தாரென்க. (அ)

655

தூராதமனக்காதல்தொண்டர்தங்கள் குழாங்குழுமித் திருப்புகழ்கள்பலவும்பாடி *
ஆராதமனக்களிப்போடழுதகண்ணீர்மழைசோர நினைந்துருகியேத்தி * நாளும்
சீரார்ந்தமுழவோசைபரவைகாட்டும் திருவரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும் *
போராழியம்மானைக்கண்டுதுள்ளிப் பூதலத்திலென்றுகொலோபுரளுநாளே. (௯)

தூராத மனக் காதல்	ஒருகாலும் திருப்தி பெறாத ஆசையோடு கூடின மனத்தையுடையரான	நாளும்	எப்போதும்
தொண்டர் தங்கள் குழாம்	ஸ்ரீ வைஷ்ணவர்களின் கோஷ்டியிலே	சீர் ஆர்ந்த முழவு ஓசை	நல்ல வாத்தியங்களின் கோஷமானது
குழுமி	கூடி	பரவை காட்டும்	கடலோசைபோல் முழங்கப் பெற்ற
திரு புகழ்கள் பலவும் பாடி	(எம்பெருமானது) கீர்த்திகளை யெல்லாம் (வாயாரப்) பாடி	திரு அரங்கத்து	ஸ்ரீரங்கத்திலே
		அரவு அணையில் பள்ளிகொள்ளும்—	
ஆராத மனம் களிப்போடு	(அவ்வளவிலும்) திருப்தி பெறாத மனக்களிப்புடனே ஆனந்தத்தோடே	போர் ஆழி	(பகைவரோடு) யுத்தஞ்செய்ய வல்ல தொழிலையுடைய திருவாழியாழ்வானை யுடையரான
அழுத கண்ணீர்	அழுத கண்ணீர்துளிகளாகிய கண்ணீர்	அம்மானை	எம்பெருமானை
மழை சோர	மழைபோல் பெருகவோ	கண்டு	ஸேவிக்கப்பெற்று
நினைந்து உருகி ஏத்தி	(எம்பெருமானை) நினைந்து (அதனாலே) மனமுருகி ஸ்தோத்திரம் பண்ணி,—	துள்ளி	(ஆனந்தத்தாலே) நிலைகொள்ளாமல் கூத்தாடி
		பூதலத்தில்	பூமியிலே
		புரளும் நாள் என்றுகொலோ	(உடம்பு தெரியாமல்) புரள்வது என்றைக்கோ!

*** "இன்கனிதனியருந்தான்" [நல்லபொருள்களைத் தனியே அநுபவிக்கலாகாது] என்றபடியே, பகவத்குணங்களைத் தனியே அநுபவிக்கக்கூடாதாகையால், அக்குணங்களை வாய்விட்டுக் கதறினாலன்றி திருப்திபெற முடியாதபடி ஆசைபூண்ட காதலையுடைய பாகவதர்களின் கோஷ்டியிலே கலந்து அவர்களுடன் எம்பெருமானது கீர்த்தியை வாயாரப்பாடி, அதனால் ஆனந்தக்கண்ணீர் பெருகப்பெற்று 'எனக்குமன்றே இவ்வநுபவம் கிடைத்தது!', என்கிற உள்ளடங்காத பேரின்பப் பெருமையாலே "மொய்ம்பினால் பூம்பொழிற் பொய்கை" என்கிற திருவாய்மொழிப்படி தன்னைத் தெரியாமல் துள்ளிக்கூத்தாடி, இப்போது ஸிம்ஹாஸனத்திலே மார்பு நெறித்திருக்கிற இருப்புத் தவிர்ந்து ஆனந்த மிகுதியாலே நிலத்தில் வீழ்ந்து புரளும்படியான பாக்கியம் வாய்ப்பது என்றைக்கோ! என்கிறார்.

தூராதமனக்காதலென்பதற்கு விஷயங்களை எவ்வளவு அநுபவித்தாலும் எத்தனைநாள் அநுபவித்தாலும் சிறிதும் திருப்தியடையாத இந்திரியங்களையுடையவர்களின் கோஷ்டியில் சேர்ந்தும் கிடைக்கும், எம்பெருமானை எவ்வளவு அநுபவித்தாலும் பர்யாப்தி பெறாத மெய்யடியார்களை திரளிலே புக விரும்புகிறபடி. பரவை காட்டும் என்றது—கடலின் அலைகளின் கோஷத்துக்கு ஒப்பு இல்லாதாற்போலே கேள்விக்கும் வாத்தியங்களின் முழக்கத்துக்கு ஒப்பு இல்லாமை பார் கடலை ஒத்திருக்கின்றது என்றவாறு. பரவை—கடல்; பரவியது; ஐ—கர்த்தாப் பொருள் விகுதி. (௯)

656 வன்பெருவானகமுய்ய அமரருய்ய மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்ய *
துன்பமிகு துயரகல அயர்வொன்றில்லாச் சுகம்வளர அகமகிழும் தொண்டர்வாழ *
அன்பொடு தென்திசைநோக்கிப் பள்ளிகொள்ளும் அணியரங்கன் திருமுற்றத் தடியார் தங்கள் *
இன்பமிகு பெருங்குழுவு கண்டு யானும் இசைந்துடனே என்றுகொலோ இருக்கும் நாளே. (௰)

வன்	(அழித்தலரிய பாபங்களால்) அழியாதிருக்கக் கடவதும்	மண் உலகில் மனிசர் உய்ய	பூமண்டலத்திலுள்ள மனிதர்கள் எல்லாரும் உஜ்ஜீவிக்கவும்
பெரு	பெருமையுடையதுமான	மிகு துன்பம் துயர் அகல	மிகவும் துக்கத்தை விளைப்பதான பாவங்கள் நீங்கவும்
வானகம்	ஸ்வர்க்கம் முதலிய மேலுலகங்கள்	அயர்வு ஒன்றும் இல்லா சுகம் வளர	துக்கம் கலசாத சுகம் வளரவும்
உய்ய	உஜ்ஜீவிக்கவும்		
அமரர்	தேவர்கள்		
உய்ய	உஜ்ஜீவிக்கவும்	அகம் மகிழும்	(எப்போதும்) மனதில் ஆனந்திக்கும் தன்மையுடையரான
மண் உய்ய	பூலோகம் உஜ்ஜீவிக்கவும்		

தொண்டர் — ஸ்ரீவைஷ்ணவர்கள்
வாழ — உஜ்ஜீவிக்கும்
அன்போடு — திருவுள்ளத்தில் உகப்போடு
தென் திசை நோக்கி — தெற்குத் திக்குக்கு அபிமுகமாக
பள்ளி கொள்ளும்—பள்ளிகொண்டருளுகின்ற
அணி அரங்கன் — ஸ்ரீரங்கநாதனுடைய
திரு முற்றத்து — வைகிருதமான திருமுற்றத்திலே

அடியார் தங்கள் — ஸ்ரீவைஷ்ணவர்களுடைய
இன்பம் மிகு பெருங் குழுவு கண்டு — ஆநந்தம் மிக்க பெரிய கோஷ்டியை சேவித்து
யானும் — அடியேனும்
இசைந்து — (அவர்களுள் ஒருவனாக) மனம் பொருந்தி
உடனே — அவர்களோடுகூட
இருக்கும் நாள் என்று கொல் — வாழ்ந்திருக்கக்கடவ நாள் எப்போது (வாய்க்குமோ?).

* * உ—தேவர்களும் மநுஷ்யர்களும் விரும்பும் ஸ்ரீவைஷ்ணவர்களும் வாழவும், பாவங்கள் நீங்கிப் புண்ணியங்கள் செழிக்கவுமாகக் குடதிசைமுடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி வட திசை பின்புகாட்டித் தென்திசை இலங்கை நோக்கிப் பள்ளிகொண்டருளுகின்ற பெரியபெருமாள் ஸந்நிதித் திருமுற்றத்திலே நிலைநின்ற பாகவதர்களுடைய கோஷ்டியிலே சேர்ந்து அடியேனும் அவர்களைப்போலே இசைந்து வாழ்வது என்றோ! என்கிறார். (௰)

திடர்விளங்குகரைப்பொன்னிநடுவுபாட்டுத் திருவரங்கத்தரவணையிற்பள்ளிகொள்ளும் *
கடல்விளங்குகருமேனியம்மான்றன்னைக் கண்ணாரக்கண்டுகக்குங்காதல்தன்னால் *
குடைவிளங்குவிறல்தானைக்கொற்றவொள்வாள் கூடலர்கோன்கொடைக்குலசேகரன்சொற்செய்த
நடைவிளங்குதமிழ்மாலைபத்தும்வல்லார் நலந்திகழ்நாரணனடிக்கீழ்நண்ணுவாரே. (கக)

திடர் விளங்கு கரை — மணற்குன்றுகள் விளங்கும் கரைகளையுடைத்தான
பொன்னி நடுவு பாட்டு — காவேரியின் நடுவிடத்து
திரு அரங்கத்து அரவு அணையில் பள்ளிகொள்ளும்—;
கடல் விளங்கு — கடல்போல் விளங்குகின்ற
கரு மேனி — கரிய திருமேனியையுடைய
அம்மான் தன்னை - பெரிய பெருமாளை
கண் ஆர கண்டு உகக்கும் காதல் தன்னால் — கண்கள் திருப்தியடையும்படி சேவித்து ஆநந்திக்கவேணும் என்று உண்டான ஆசையினால்
குடை விளங்கு — (அரசாட்சிக்கு அறி) வெண் கொற்றக்குடையுடன் விளங்கா நிற்பவனும்
விறல் தானை — பராக்கிரமம் மிக்க சேனைகளையுடையவனும்

கொற்றம் ஒள் வாள் — வெற்றியும், ஒளியும் பொருந்திய வாளை உடையவனும்
கூடலர் கோன் — மதுரையிலுள்ளவர்களுக்கும் தலைவனும்
கொடை — ஔதார்யத்தை ஸ்வபாவமாக உடையவனுமான
குலசேகரன் — குலசேகரப்பெருமாள்
சொல்செய்த — அருளிச்செய்த
நடை விளங்கு — தமிழ் நடையழகு நன்கு விளங்காநிற்கிற
தமிழ் மாலை பத்தும் — தமிழ்ப்பிரபந்தரூபமான இப் பத்துப்பாசுரங்களையும்
வல்லார் — ஓதவல்லவர்கள்
நலம் திகழ் நாரணன் — கல்யாண குணசாலியான ஸ்ரீமந்நாராயணனுடைய
அடி கீழ் நண்ணுவார் — திருவடிகளில் சேரப்பெறுவர்.

அடிவரவு:—இருள் வாயெம்மாண் மாவினை மீனை ஆனி மறம் வேல் ஊர வன் திடர் தேட்டரு.

இரண்டாந் திருமொழி—தேட்டருந்திறல்.

பகவத்விஷயத்தோடு நின்று தரிக்கமாட்டாமல் பாகவத விஷயத்திலே தாம் ஈடுபட்டுக் கிடக்கின்றமையை வெளியிடுகிறார் இத்திருமொழியில். பகவத் விஷயத்திலே மெய்யன்பு பூண்டவர்கள் பாகவத விஷயத்திலே ப்ரவணராகாமலிருக்கமுடியாது. பாகவத ப்ராவண்யம் அதிசயித்தாலன்றி பகவத்விஷய ப்ராவண்யம் வந்ததாகாது. இவ்வாழ்வார்க்கு பகவத்விஷய

ப்ராவண்யத்திற் காட்டில் பாகவதவிஷய ப்ராவண்யமே பன்ன மடையாயிருக்கும்; ஆர் கெடப்பரனன்பர் கொள்ளாரென்றவர்களுக்கே வாசக்கொடு ருடப்பாய்ப்பிற் கைபிட்டவரிறே.

658 தேட்டருந்திறல்தேனினைத் தென்னரங்கனை * திருமாதுவாழ்
வாட்டமில்வனமாலைமார்வனை வாழ்த்திமால்கொள்சிந்தையராய் *
ஆட்டமேவியலந்தழைத்து அயர்வெய்தும்மெய்யடியார்கள் தம் *
ஈட்டம்கண்டிடக்கூடுமேல் அதுகாணும்கண்பயனாவதே. (க)

தேட்டரும்	(தன்முயற்சியால்) தேடிப்பெறுதற்கு அருமையானவனும்	மால் கொள் சிந்தையர் ஆய்	(அவன் திறத்தில்) மோஹங்கொண்ட மனமுடையவராய்
திறல்	(தன்னை முற்ற அநுபவிப்பதற்கு உதவுமான) வலிமையைக் கொடுப்பவனும்	ஆட்டம் மேவி	(அந்த மோஹத்தாலே நின்ற விடத்தில் நிற்கமாட்டாமல்) ஆடுதலில் இழிந்து
தேனினை	தேன்போல் பரமபோக்யனும்	அலந்து அழைத்து	(பகவந்நாமங்களை) வாய்விட்டுக் கதறிக் கூப்பிட்டு
தென் அரங்கனை	தென் திருவரங்கத்திலே வாழ்பவனும்	அயர்வு எய்தும்	இளைப்படைகின்ற
		மெய் அடியார்கள் தம்	உண்மையான அன்புடைய பாகவதர்களின்
திரு மாது வாழ் வாட்டம் இல் வனமாலை மார்வினை	பெரிய பிராட்டியார் நித்யவாஸம் செய்தருளப்பெற்றதும் வாடாமல் செவ்வி பெற்றிருக்கிறவனமாலையை அணிந்துள்ளதுமான திருமார்பை யுடையவனுமான ஸ்ரீரங்கநாதனை	ஈட்டம்	கோஷ்டியை
		கண்டிட கூடும் ஏல்	ஸேவிக்கப் பெறுவோமாகில்
வாழ்த்தி	மங்களாசாஸனம் பண்ணி	அது காணும் கண் பயன் ஆவது	கண் படைத்ததற்குப் பயன் அதுவேயன்றோ.

*** "பூணாரமார்பனைப் புள்ளூரும் பொன்மலையைக் காணார் கண்ணென்றும் கண்ணல்ல கண்டாமே" என்று எம்பெருமானைக் காண்பதே கண்படைத்ததற்கு ப்ரயோஜனம்' என்கிற ஸித்தாந்தம் ஸாமான்யமானதென்றும் 'பாகவதர்களுடைய கோஷ்டியை ஸேவித்தாலன்றிக் கண்களுக்கு ஸாபல்யம் கிடையாது' என்பதே விசேஷஸித்தாந்தமென்றும் ஸாரமாகக் கண்டறிந்தவர்களுள் இவ்வாழ்வார் தலைவர் என்னுமிடம் இப்பாட்டில் விளங்கும். அடியவர்கட்கும் பரமபோக்யனான ஸ்ரீரங்கநாதனை வாயாரத்துதித்து அவனிடத்திலே மிக மோஹங்கொண்டு அதனால் உடம்பு நின்றவிடத்தில் நில்லாது கூத்தாடி, 'ஸ்ரீரங்கநாதனே! ஸ்ரீமந் நாராயணனே!' என்றிப்படி பல திருநாமங்களைக் கூறி யழைத்து, அவ்வளவில் எம்பெருமான் கண்ணெதிரே வந்து ஸேவைதந்தருளக் காணாமையாலே வருந்தி இளைக்கின்ற பரமைகாந்திகளான பாகவதர்களின் கோஷ்டியை ஸேவிக்கப்பெறுவதே கண்களுக்கு ப்ரயோஜனமாமென்கிறார்.

மேவி = பொருந்துதல்—விரும்புதல்; "கம்பம் மேவும் கலைகளும்போல்." "கண்டிடக்கூடுமேல்" என்றது — இத்தகைய மெய்யடியார்களை இவ்வுலகத்தில் காணப்பெறுவதின் அருமையை விளக்கும். (க)

659 தோடுலாமலர்மங்கைதோளிணைதோய்ந்ததும் சுடர்வாளியால் *
நீடுமாமரம்செற்றதும் நிரைமேய்த்ததும் இவையேநினைந்து *
ஆடிப்பாடியரங்கவோவென்றழைக்கும் தொண்டரடிப்பொடி
ஆடநாம்பெறில் * கங்கைநீர்குடைந்தாடும்வேட்கை என்னாவதே. (உ)

தோடு உலாம் மலர் மங்கை	இதழ்கள் மிக்கிருக்கின்ற தாமரைப்பூவில் பிறந்த பிராட்டியினுடைய	தோள் இணை தோய்ந்ததும்	இருதோள்களோடும் அணைய நெருக்கிக் கட்டிக்கொண்டதும்

சுடர் வாளியால்	ஒளியையுடைய அம்பினால்	அரங்க ஓ என்று	'ஓ அரங்கனே!' என்று (அவன் திருநாமங்களைச் சொல்லி)
நீடு மா மரம் செற்றதும்	நீண்ட பெரிய மராமரங்களைத் துளைசெய்து தள்ளியதும்	அழைக்கும்	கூப்பிடுகிற
நிரை மேய்த்ததும்	பசுக்கூட்டங்களை மேய்த்ததும் (ஆகிய)	தொண்டர்	கைங்கர்யத்தையே நிரூபகமாக உடைய பாகவதர்களின்
இவையே நினைந்து	இப்படிப்பட்ட சரித்ரங்களையே அநுஸந்தித்து	அடி பொடி	திருவடித்துகள்களிலே
ஆடி	[illegible]	ஆட நாம் பெறில்	நாம் அவகாஹிக்கப்பெற்றால் (பிறகு)
பாடி	(வாயாலும் பெருமையை வாய்விட்டுப்) பாடி	கங்கை நீர்	கங்கா ஜலத்திலே
		குடைந்து ஆடும் வேட்கை	அவகாஹித்து நீராடவேணும் என்கிற ஆசையானது
		என் ஆவது	எதற்கு?

* * * — [illegible] எம்பெருமானுடைய திவ்யசரித்ரங்களையே மாறி மாறி அநுஸந்தித்து, ஆனந்தப்ரவாஹத்தால் [illegible] வாய்விட்டுக் கதறுகின்ற ஸ்ரீவைஷ்ணவர்களின் ஸ்ரீபாதரேணுக்களில் அவகாஹிக்கப்பெற்றால், பிறகு 'கங்கையில் நீராடவேணும்' என்கிற விருப்பமும் கிடைத்தற்கரியதாம் என்கிறார். (௨)

660 ஏறடர்த்ததுமேனமாய்நிலங்கீண்டதும் முன்னிராமனாய் *
மாறடர்த்ததும்மண்ணளந்ததும் சொல்லிப்பாடி * வண்பொன்னிப்பே
ராறுபோல்வருங்கண்ணநீர்கொண்டு அரங்கன்கோயில்திருமுற்றம் *
சேறுசெய்தொண்டர்சேவடிச் செழுஞ்சேறென்சென்னிக்கணிவனே. (௩)

ஏறு அடர்த்ததும்	(நப்பின்னைக்காக) எருது ஏழையும் வலியடக்கியதும்	வண் பொன் பேர் ஆறு போல வரும் கண்ண நீர் கொண்டு	தாரைதாரையாய்ப் பெருகும் காவிரியாறு போலே பெருகுகின்ற ஆனந்த பாஷ்பங்களாலே
ஏனம் ஆய் நிலம் கீண்டதும்	வராஹரூபியாய்ப் பூமியைக் கோட்டால் குத்தியெடுத்ததும்	அரங்கன் கோயில் திருமுற்றம்	ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியின் திருமுற்றத்தை
முன் இராமன் ஆய்	முன்பு சக்ரவர்த்தி திருமகனாய்ப் பிறந்து	சேறு செய் தொண்டர்	சேறாக்குகிற பாகவதர்களின்
மாறு அடர்த்ததும்	சத்ரு ராவணனை முடித்ததும்	சே அடி செழு சேறு	திருவடிகளால் துகைபட்ட அழகிய சேற்றை
மண் அளந்ததும்	(த்ரிவிக்ரமனாய்) உலகளந்ததும் (ஆகிய இந்த சரித்ரங்களை)	என் சென்னிக்கு அணிவன்	என்னுடைய தலைக்கு அலங்காரமாகக் கொள்வேன்.
சொல்லி பாடி	வாயாரச்சொல்லி வாய்விட்டுப் பாடி		

* * * — எம்பெருமானுடைய பல அவதார சரித்திரங்களையே அனவரதம் வாயாரப் பாடிக்கொண்டு அன்பு மிகுதியால் கண்களினின்று பெருகுகின்ற ஜலமே காவேரி போலப் பெருகுகின்ற ஆனந்த பாஷ்பங்களாலே ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதித் திருமுற்றத்தைச் சேறாக்குகின்ற ஸ்ரீவைஷ்ணவர்களின் திருவடிகளால் துகைபட்ட சேற்றை எனது தலைக்கு அலங்காரமாகக்கொள்வேன் என்கிறார். கண்ணநீர் [illegible] பெருகுமென்ற மிகுதிக்குப் பொருத்தமான த்ருஷ்டாந்தம் காவிரியாறு. கண்ணநீர் = (கண் அ) அ — ஆறாம் வேற்றுமை உருபு; கண்களினுடைய நீர் என்றபடி. (௩)

661 தோய்த்ததண்தயிர்வெண்ணெய்பாலுடனுண்டலும் உடன்றாய்ச்சிகண்டு *
ஆர்த்ததோளுடையெம்பிரான் என்னரங்கனுக்கடியார்களாய் *
நாத்தழும்பெழநாரணாவென்றழைத்து மெய்தழும்பத்தொழு
தேத்தி* இன்புறும்தொண்டர்சேவடி யேத்திவாழ்த்துமென்னெஞ்சமே. (௪)

தோய்த்த தண் தயிர்	தோய்த்துக் குளிர்ந்த தயிரை யும்	என் அரங்கனுக்கு	என் தலைவனுக்கு
வெண்ணெய்	வெண்ணெயையும்	அடியார்களாய்	ஆட்பட்டவர்களாய்
பால்	பாலையும்	நா தழும்பு எழ	நாக்குத் தழும்பேறும்படி
உடன் உண்டலும்	ஒரே காலத்திலே அமுது செய்தவளவில்	நாரணா என்று அழைத்து	நாராயணா என்று கூப்பிட்டு
ஆய்ச்சி	யசோதைப்பிராட்டியானவள்	மெய் தழும்ப தொழுது	சரீரம் காய்ப்பேறும்படி சேவித்து
கண்டு	(அக்களவைத் தன்னிலே) பார்த்து	ஏத்தி	தோத்திரம் பண்ணி
உடன்று	கோபித்து	இன்புறும்	ஆநந்தமடைகின்ற
ஆர்த்த	(பிறரு அவனைநோவ) பிடித்துக் கட்டப்பட்ட	தொண்டர்	ஸ்ரீவைஷ்ணவர்களுடைய
தோள் உடை	தோள்களையுடைய	சேவடி	திருவடிகளை
எம்பிரான்	எமக்குத்தலைவனான	என் நெஞ்சம்	என் மனமானது
		ஏத்தி வாழ்த்தும்	துதித்து (அவர்களுக்கே) மங்களம் பாடும்

* * *—"எத்திறம்! உரலினோடிணைந்திருந்தேங்கிய எளிவே!" என்று நம்மாழ்வார் மோஹித்துக் கிடக்கும்படி யசோதையால் கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ட அபதாநத்தை அநுஸந்தித்து, "தொண்டர் கல்லனைக் கோவையும் வெண்ணெயுண்டவன்—அடியார்கள்" என்றபடி ஸ்ரீரங்கநாதனை அத்தன்மையிலாநுப் பரவிப் பணிசெய்யும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் மங்களம் பாடுவதையே தொழிலாகக் கொண்டிருப்பேன் நான் என்கிறார். (௪)

662 பொய்சிலைக்குரலேற்றெருத்தமிறுத்துப் போரரவீர்த்தகோன் *
செய்சிலைச்சுடர்சூழொளித் திண்ணமாமதிற்றென்னரங்கனாம் *
மெய்சிலைக்கருமேகமொன்று தந்நெஞ்சில்நின்றுதிகழப்போய் *
மெய்சிலிர்ப்பவர்தம்மையேநினைந்து என்மனம்மெய்சிலிர்க்குமே. (௫)

பொய்	க்ருத்ரிமமாய்	தென் அரங்கன் ஆம்	தென்னரங்கத்தில் எழுந்தருளியிருப்பவனான ஸ்ரீரங்கநாதனாகிற
சிலை குரல்	கோபத்தை வெளியிடுகின்ற கோஷத்தை யுடைத்தான	மெய் சிலை கரு மேகம் ஒன்று	சரீரத்தில் வில்லோடு கூடின ஒரு காளமேகமானது
ஏறு	(ஏழு) ரிஷபங்களின்	தம் நெஞ்சில் நின்று திகழப் போய்	தங்கள் மனதில் நின்று விளங்கப்பெற்று
எருத்தம் இறுத்த	முசுப்புகளை முறித்தவனும்	மெய் சிலிர்ப்பவர் தம்மையே	மயிர்க்கூச் செறியும் சரீரமுடைய ஸ்ரீவைஷ்ணவர்களையே
போர் அரவு ஈர்த்த கோன்	போர் செய்வதற்கு வந்த காளிய நாகத்தை இழுத்துத் தள்ளினவனும்	என் மனம் நினைந்து	என் நெஞ்சானது அநுஸந்தித்து
செய் சிலை	கல்லினால் செய்யப்பட்டதும்	மெய் சிலிர்க்கும்	மயிர்க்கூச்செறியப் பெற்றது.
சுடர் சூழ் ஒளி	மிக்க தேஜஸ்ஸையுடைத்தானதும்		
திண்ணம்	திருடமாய் உறுதியானதுமான		
மா	பெரிதான		
மதிள் சூழ்	மதிளாலே சூழப்பட்ட		

* * *—அடியார்களை ஆட்கொள்வதற்காக அருமையான வேஷங்களைச் செய்தருளின எம்பெருமானாகிற காளமேகத்தை நெஞ்சகத்திலே வைக்கப்பெற்று எப்போதும் மயிர்க்கூச்செறியும் திருமேனியையுடையராயிருக்கின்ற ஸ்ரீவைஷ்ணவர்களை அநுஸந்தித்து, அவர்கள் பக்கம் பட்டபாடு என்னெஞ்சு படுகின்றதென்கிறார்.

"திகழப்போய்" என்ற விடத்து, போய்—வாய்த்தெனப்பொருள்.

"மனம் மெய்சிலிர்க்கும்" என்றது—மனம் விகாரப்படுகின்றதென்றபடி. (௫)

663 ஆதியந்தமனந்தமற்புதமான வானவர்தம்பிரான் *
பாதமாமலர்சூடும்பத்தியிலாத பாவிகளுய்ந்திட *
தீதில்நன்னெறிகாட்டி யெங்குந்திரிந்தரங்கனெம்மானுக்கே *
காதல்செய்தொண்டர்க்கெப்பிறப்பிலும் காதல்செய்யுமென்னெஞ்சமே. (௬)

ஆதி	ஜகத்காரணபூதனும்	தீது இல்	குற்றமற்ற
அந்தம்	ப்ரளயகாலத்திலும் ஸம்ஹாரனும்	நல் நெறி	நல்வழியை
அனந்தம்	ஸர்வவ்யாபியாய்	காட்டி	(தமது அநுஷ்டானமுகத்தாலே) வெளிப்படுத்திக்கொண்டு
அற்புதம் ஆன	ஆச்சர்ய பூதனும்		
வானவர் தம் பிரான்	அமரர்களுக்கதிபதியானவனுமான ஸர்வேச்வர [illegible]ப	எம்மான்	ஸ்வாமியான
பாத மா மலர்	சிறந்த மலர்போன்ற திருவடிகளை	அரங்கனுக்கே	ஸ்ரீரங்கநாதனுக்கே
சூடும் பத்தி இலாத	சிரஸா வஹிப்பதற் குறுப்பான அன்பு இல்லாத	காதல் செய்	பக்தி பூண்டிருக்கின்ற
		தொண்டர்க்கு	பாகவதர்கள் விஷயத்தில்
பாவிகள் உய்ந்திட	பாவிகளும் உஜ்ஜீவிக்கும்படி	என் நெஞ்சம்	எனது மனமானது
எங்கும் திரிந்து	எவ்விடங்களிலும் ஸஞ்சாரஞ் செய்து	எப் பிறப்பிலும்	எந்த ஜன்மத்திலும்
		காதல் செய்யும்	அன்பு பூண்டிருக்கும்.

* * * —ஜகத்காரணபூதனும் ஸர்வஸ்வாமியுமான எம்பெருமானிடத்து அன்பு இல்லாதவர்களான பாவிகளும் அவ்வன்பைப் பெற்று உஜ்ஜீவிக்கும்படி நேர் நேர்வழியைச் சொல்லும் ஸஞ்சரித்து ஸ்வானுஷ்டானமான அர்த்த விசேஷங்களை தங்களுக்கு உபதேசமாகவே உபதேசித்துவரும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கே என் நெஞ்சு எப்போதும் அன்பு பாராட்டுமென்கிறார். "எப்பிறப்பிலும்" என்ற சொற்போக்கால், அப்படிப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்கள் பக்கல் பக்தி பண்ணுவதற்காக இன்னும் பல ஜன்மங்களெடுத்தாலும் விரும்பியிருக்கிறாரென்று விளங்கும்.

664 காரினம்புரைமேனிநற்கதிர் முத்தவெண்ணகைச்செய்யவாய் *
ஆரமார்வனரங்கனென்னும் அரும்பெருஞ்சுடரொன்றினை *
சேரும்நெஞ்சினராகிச் சேர்ந்துகசிந்திழிந்தகண்ணீர்களால் *
வாரநிற்பவர்தாளிணைக்கு ஒருவாரமாகுமென்னெஞ்சமே. (௩)

கார் இனம் புரை மேனி	மேகங்களின் திரளை ஒத்த திருமேனியையும்	சேரும் நெஞ்சினர் ஆகி	கிட்டி அநுபவிக்கவேணுமென்கிற நெஞ்சையுடையராய்
நல் கதிர்	அழகிய ஒளியையுடைத்தான	சேர்ந்து	(அவனையே) சேர்ந்து
முத்தம் வெண் நகை செய்ய வாய்	முத்துகள் போல வெளுத்த புன் சிரிப்பையுடைய சிவந்த திருப்பவளத்தையும்	கசிந்து இழிந்த	(பக்தி பாரவச்யத்தாலே) சுரந்து பெருகிய
		கண்ணீர்கள்	ஆனந்த பாஷ்பங்கள்
ஆரம் மார்வன்	முத்தாரங்களணிந்த மார்வையுடையனான	வார நிற்பவர்	வெள்ளமிட்டொழுகும்படி நிற்கும் அடியார்களுடைய
அரங்கன் என்னும்	ஸ்ரீரங்கநாதனென்கிற	தாள் இணைக்கு	இரண்டு திருவடிகள் விஷயத்தில்
அரும் பெரும் சுடர் ஒன்றினை	அருமை பெருமைகளையுடைய ஒப்பற்றதொரு தேஜஸ்ஸை	என் நெஞ்சம்	என் மனமானது
		ஒரு வாரம் ஆகும்	ஒப்பற்ற அன்பையுடையதாகும்.

* * —மேகங்களின் திரள்போன்று விளங்குகின்ற திருமேனியையும், அத்திருமேனியில் தோன்றுகிற விலக்ஷணமான ஸௌந்தர்யத்தையும், முத்துகளைப் போன்ற புன் முறுவலையுடைய திருவதரத்தையும், முத்தாரமணிந்த திருமார்பையுமுடையவனான ஸ்ரீரங்கநாதனென்கிற ஒரு பரஞ்சோதியை அநுபவித்து கண்ணும் கண்ணீருமாய் நிற்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கே என் நெஞ்சானது அடிமைப்பட்டதென்கிறார். (௩)

665 மாலையுற்றகடல்கிடந்தவன் வண்டுகிண்டுநறுந்துழாய் *
மாலையுற்றவரைப்பெருந்திருமார்வனை மலர்க்கண்ணனை *
மாலையுற்றெழுந்தாடிப்பாடித் திரிந்தரங்கனெம்மானுக்கே *
மாலையுற்றிடுந்தொண்டர்வாழ்வுக்கு மாலையுற்றதென்னெஞ்சமே. (௪)

மாலை உற்ற கடல்	(தன் திருமேனி ஸ்பர்சத்தாலே) அபிநிவேசிக்கிற திருப்பாற்கடலில்	வண்டு கிண்டு நறுந்துழாய் மாலை உற்ற	(தேனுக்காக) வண்டுகள் குடைகிற பரிமளமுள்ள திருத்துழாய் மாலையை அணிந்த
கிடந்தவன்	பள்ளிகொள்பவனும்	வரை பெரு திரு மார்வனை	மலைபோற் பெருமை தங்கிய திருமார்பையுடையவனும்

மலர் கண்ணவனை — செந்தாமரை மலர்போன்ற திருக்கண்களையுடையவனான ஸ்ரீரங்கநாதன் விஷயத்தில்
மாலை உற்று — வ்யாமோஹத்தை அடைந்து
எழுந்து ஆடி — (இருந்தவிடத்திலிராமல்) எழுந்து கூத்தாடி
பாடி — (வாயாரப்) பாடி
திரிந்து — (திவ்ய தேசங்கள்தோறும் சஞ்சரித்து
அரங்கன் எம்மானுக்கே — எமக்கு ஸ்வாமியான ஸ்ரீரங்கநாதன் விஷயத்திலேயே
மால் உற்றிடும் — பித்தேறித் திரிகின்ற
தொண்டர் — ஸ்ரீவைஷ்ணவர்களுடைய
வாழ்வுக்கு — ஸ்ரீவைஷ்ணவ ஸம்பத்துக்கு
என் நெஞ்சம் மாலை உற்றது — என் மனம் மயங்கிக்கிடக்கின்றது

* * *—திருப்பாற்கடலில் பள்ளிகொள்பவனும் சுருங்கோம் மிக்க செவ்வித் தாமரைக் கண்ணையுடைய பெருந் திருமார்பையுடையவனும் புண்டரீகாக்ஷனுமாகிய ஸ்ரீரங்கநாதன் விஷயத்திலே வ்யாமோஹங்கொண்டு இருந்தவிடத்திலிருக்க வொட்டாமையாலே எழுந்து ஆடுவது பாடுவதாய் திரியப்படுகின்ற ஸ்ரீவைஷ்ணவர்களுடைய அந்த ஸ்ரீவைஷ்ணவஸம்பத்திலே என் நெஞ்சு பித்தேறி நின்றது என்கிறார். அப்படிப்பட்ட ஸம்பத்து எமக்கு வாய்க்குமோ? என்று ஆசைகொள்ளாநின்றது என்றபடி. இரண்டாமடியில் மாத்திரம் மாலை என்பது மாலா என்ற வடசொல் விகாரம். மற்ற மூன்றடிகளிலுள்ள மாலை—மோஹம் என்னும் பொருளதான மால் என்னுஞ் சொல் இரண்டாம் வேற்றுமை புணர்ந்தது. (௯)

666 மொய்த்துக்கண்பனிசோரமெய்கள்சிலிர்ப்ப ஏங்கியிளைத்துநின்று *
எய்த்துக்கும்பிட்டுநட்டமிட்டெழுந்து ஆடிப்பாடியிறைஞ்சி * என்
அத்தனச்சனரங்கனுக்கடியார்களாகி அவனுக்கே
பித்தராமவர் * பித்தரல்லர்கள் மற்றையார்முற்றும்பித்தரே. (௯)

கண் பனி — ஆநந்த பாஷ்பமானது
மொய்த்து சோர — இடைவிடாமல் சொரியவும்
மெய்கள் சிலிர்ப்ப — மயிர்க்கூச்செறியவும் உடல்
ஏங்கி இளைத்து நின்று — நெஞ்சு தளர்ந்து இளைத்துப்போய்
எய்த்து — மிக தளர்ந்து
கும்பிட்டு நட்டம் இட்டு — மநோஹரமான கூத்தாகிய நர்த்தனத்தைப் பண்ணி
எழுந்து ஆடி பாடி இறைஞ்சி — நின்றவிடத்து நில்லாமல் (பரவித்து) ஆட்டங்களாடிப் பாடுதல் பாடி வணங்கி,
என் அத்தன் — எனக்குத் தந்தையாய்
அச்சன் — [illegible]யான
அரங்கனுக்கு — ஸ்ரீரங்கநாதனுக்கு
அடியார்கள் ஆகி — அடியார்களாய்
அவனுக்கே — அந்த ரங்கநாதன் விஷயத்திலேயே
பித்து ஆமவர் — பித்தேறித் திரிபவர்கள்
பித்தர் அல்லர்கள் — பைத்தியக்காரர்களல்லர்;
மற்றையார் முற்றும் — (பகவத் விஷயமான இந்த வ்யாமோஹமில்லாத) மற்றவர்களெல்லாம்
பித்தரே — பைத்தியக்காரர்கள் தான்.

667 அல்லிமாமலர்மங்கைநாதன் அரங்கன்மெய்யடியார்கள்தம் *
எல்லையிலடிமைத்திறத்தினில் என்றுமேவுமனத்தனாம் *
கொல்லிகாவலன்கூடல்நாயகன் கோழிக்கோன்குலசேகரன் *
சொல்லினின்தமிழ்மாலைவல்லவர் தொண்டர்தொண்டர்களாவரே. (௰)

அல்லி மா மலர் மங்கை நாதன் — அகவிதழ்களையுடைய சிறந்த (தாமரை) மலரில் பிறந்த பிராட்டிக்குக் கணவனான
அரங்கன் — ஸ்ரீரங்கநாதனுடைய
மெய் அடியார்கள் தம் — உண்மையான பக்தர்களுடைய
எல்லை இல் அடிமை திறத்தினில் — எல்லையிலே உள்ள சேஷத்வத்திலே
என்றும் மேவு மனத்தன் ஆம் — எப்போதும் பொருந்திய திருவுள்ளத்தை யுடையவனும்
கொல்லி காவலன் — கொல்லிநகர்க்கு அரசனும்
கூடல் நாயகன் — மதுரைக்கு அரசனும்
கோழி கோன் — உறையூருக்கு அரசனுமான
குலசேகரன் — குலசேகராழ்வாருடைய
சொல்லின் — ஸ்ரீஸூக்திகளாலே அமைந்த
இன் தமிழ் மாலை வல்லவர் — இனிய தமிழ்ப்பாசுரங்களை ஓதவல்லவர்கள்
தொண்டர் தொண்டர்கள் ஆவர் — தாஸாநுதாஸராகப் பெறுவர்.

* * *—எல்லையிலடிமைத்திறமாவது—"அடியார் தம் அடியார் தம் அடியார் தம் அடியார் தம் அடியோங்களே" என்கிற சேஷத்வகாஷ்டை. (௰)

அடிவரவு:—தேட்டு தோடு தோய்த்த பொய் ஆதி காரிகை மாலை மொய்த்து அல்லி மெய்.

ஸம்ஸாரிகள் படியில் மிக்க வெறுப்பு உண்டாகி, அவர்களைக் காண்பதும் அவர்களோடு ஸஹவாஸம் செய்வதும் அஸஹ்யமான நிலைமை தமக்குப் பிறந்தபடியை அருளிச்செய்கிறார்.

668
மெய்யில்வாழ்க்கையை மெய்யெனக்கொள்ளும் * இவ்வையந்தன்னொடும் கூடுவதில்லையான் *
ஐயனே! அரங்கா! வென்றழைக்கின்றேன் * மையல்கொண்டொழிந்தேன் என்றன்மாலுக்கே. (க)

மெய்யில் வாழ்க்கையை	ப்ரக்ருதி ப்ராக்ருதங்களோடு பொருந்தி வாழுமவையே	அரங்கா	'ஸ்ரீரங்கநாதனே!'
மெய் என கொள்ளும்	பரமார்த்தமென்று கருதுகின்ற	என்று அழைக்கின்றேன்	என்று (பகவந்நாமங்களைச் சொல்லி) அழையா நின்றேன்,
இ வையம் தன்னொடும்	இவ்வுலகத்தாரோடு	என் தன் மாலுக்கே	என்னிடத்தில் வ்யாமோஹமுடைய எம்பெருமான் பக்கலிலேயே
யான் கூடுவது இல்லை	(இனி) நான் சேர்வதில்லை	மையல் கொண்டொழிந்தேன்	வ்யாமோஹமடைந்திட்டேன்.
ஐயனே	'ஸ்வாமீ!'		

மெய்யில் வாழ்க்கையை—மெய் இல் என்று பிரித்து, பொய்யான வாழ்வை என்றபடியாம். (க)

669 நூலினேரிடையார் திறத்தேநிற்கும் * ஞாலந்தன்னொடும் கூடுவதில்லையான் *
ஆலியாவழையா அரங்காவென்று * மால்எழுந்தொழிந்தேன் என்றன்மாலுக்கே. (உ)

நூலின் நேர் இடையார் திறத்தே நிற்கும்	நூல் போன்று (ஸூக்ஷ்மமான) இடையையுடைய பெண்களின் விஷயத்திலேயே பொருந்தி யிருக்கிற	ஆலியா	(வாய்விட்டுக் கூப்பிட்டுக்) கூத்தாடி
ஞாலம் தன்னொடும்	(இந்த) ப்ராக்ருத மனிதரோடு	அரங்கா என்று அழையா	'ஸ்ரீரங்கநாதனே!' என்று கூப்பிட்டு
யான் கூடுவது இல்லை—		என் தன் மாலுக்கே	என்மேல் வ்யாமோஹமுடைய எம்பெருமான் திறத்திலேயே
		மால் எழுந்தொழிந்தேன்	—வ்யாமோஹமுற்றேன்.

* * * ஆலியா, அழையா—'செய்யா' என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம்; ஆலித்து அழைத்து என்றபடி. (உ)

670 மாரனார் வரிவெஞ்சிலைக்கு ஆட்செய்யும் * பாரினாரொடும் கூடுவதில்லையான் *
ஆரமார்வன் அரங்கனனந்தன் * நல் நாரணன் நரகாந்தகன்பித்தனே. (ங)

மாரனார்	மன்மதனுடைய	அனந்தன்	அளவிடமுடியாத ஸ்வரூபங்களையுடையவனும்
வரி வெம் சிலைக்கு	அழகிய கொடிய வில்லுக்கு	நல் நாரணன்	நல்ல நாராயணனும்
ஆள் செய்யும்	ஆட்பட்டு (விஷய ப்ரவணராய்) நிற்கிற	நரக அந்தகன்	நரகாஸுரனைக் கொன்றவனுமான
பாரினாரொடும்	(இப்) பூமியிலுள்ள ப்ராக்ருதரோடு	அரங்கன்	ஸ்ரீரங்கநாதன் விஷயத்திலே
யான் கூடுவது இல்லை—		பித்தன்	பித்தனாயிருக்கின்றேன்.
ஆரம் மார்வன்	முக்தாஹாரத்தைத் திருமார்பிலே அணிந்தவனும்		

* * * நரகாந்தகன்—நரகாஸுரனைக் கொன்றவன் என்றபடி. (ங)

671 உண்டியே உடையே உகந்தோடும் * இம் மண்டலத்தொடும் கூடுவதில்லையான் *
அண்டவாணன் அரங்கன்வன்பேய்முலை * உண்டவாயன்தன் உன்மத்தன்காண்மினே (ச)

உண்டியே — ஆஹாரத்தையும்
உடையே — வஸ்த்ரத்தையுமே
உகந்து ஓடும் — விரும்பி(க் கண்டவிடமெல்லாம்) ஓடித்திரிகிற
இம் மண்டலத்தொடும் — இந்தப் பூமண்டலத்திலுள்ள பிராணிகளோடு
யான் கூடுவது இல்லை—
அண்டம் வாணன் — பரமபதத்திலே வாழ்பவனும்
வன் பேய் முலை உண்ட வாயன் — வலிய நெஞ்சையுடைய பூதனையின் முலையை அமுது செய்த வாயையுடைய
அரங்கன் தன் — ஸ்ரீரங்கநாதன் விஷயத்தில்
உன்மத்தன் — பைத்தியம் பிடித்தவனாயிரா நின்றேன்.

* * * 'ஸ்ரீராமாயணம் என்று உபந்யஸிக்கிறார்கள்! ஸ்ரீ பாகவதம் என்று உபந்யஸிக்கிறார்கள்! பகவத்ஸேவை எங்கே கிடைக்கும்! பாகவதஸேவை எங்கே கிடைக்கும்!' என்று காதும் கண்ணும் நிலைகெடுத்து ஓடிக்களிக்கவேண்டுவது ஸ்வரூபமாயிருக்க, அஃதொழிந்து 'சோறு கொடுப்பது எங்கே? கூறை கிடைப்பது எங்கே?' என்று வாய்வெருவிக்கொண்டு பறக்கின்ற இப்பாவிகளோடு எனக்குப் பொருந்தாது. விரோதிகளைப் போக்கித் தன்னை அருள்கின்ற எம்பெருமான் குணங்களையே நினைத்து நைந்து உன்மத்தனாயினேன் நான் என்கிறார். (௪)

672 தீதில் நன்னெறி நிற்க அல்லாது செய் * நீதியாரொடும் கூடுவதில்லை யான் *
ஆதி ஆயன் அரங்கன் அந்தாமரை * பேதை மா மணவாளன் தன் பித்தனே. (௫)

தீது இல் நல் நெறி நிற்க — குற்றமற்ற நல்வழி இருக்கச் செய்தே (அவ்வழியில் போகாமல்)
அல்லாது செய் நீதியாரொடும் — கண்டபடிக்கு எதிர்த்தட்டானவற்றைச் செய்வதை நீதியாகக் கொண்டுள்ள பிராணிகளோடு
யான் கூடுவது இல்லை—
ஆதி — (உலகுக்கட்கு) முதல்வனும்
ஆயன் — ஸ்ரீகிருஷ்ணனாய் அவதரித்து ஸர்வஸுலபனும்
அம் தாமரை பேதை மா மணவாளன் — அழகிய தாமரைப்பூவில் அவதரித்த பிராட்டியின் வல்லபனுமான
அரங்கன் தன் — ஸ்ரீரங்கநாதன் திறத்தில்
பித்தன் — மோஹம் கொண்டிரா நின்றேன்.

* * * தேவதாந்தரங்களைப் பற்றுகை, தீநெறி; எம்பெருமானை ஸ்வயம் ப்ரயோஜனமாகப் பற்றுகை; நன்னெறி; ஐச்வர்யம் முதலிய க்ஷுத்ர புருஷார்த்தங்களை விரும்பி அவற்றுக்காக எம்பெருமானைப் பற்றுகை, தீமையோடு கூடிய நன்னெறி—என்று கண்டுகொள்க. அநந்யப்ரயோஜனமாக எம்பெருமானைப் பற்றுகையாகிற பரமஸத் மார்க்கத்தை விட்டிட்டு, ஸ்வரூப விருத்தமாக ஒழுகுகின்றவர்களோடு எனக்குப் பொருந்த மாட்டாதென்றாராயிற்று. ()

673 எம்பரத்தர் அல்லாரொடும் கூடலன் * உம்பர் வாழ்வை ஒன்றாகக் கருதலன் *
தம்பிரானமரர்க்கு அரங்க நகர் * எம்பிரானுக்கு எழுமையும் பித்தனே. (௬)

எம் பரத்தர் அல்லாரொடும் — என்னைப்போலே அநந்ய ப்ரயோஜனரல்லாதவர்களோடு
கூடலன் — (நான்) கூடமாட்டேன்;
உம்பர் வாழ்வை — தேவதைகளின் ஐச்வர்யம் முதலிய போகங்களையும்
ஒன்று ஆக — ஒரு புருஷார்த்தமாக
கருதலன் — எண்ணமாட்டேன்;
அமரர்க்கு — நித்யஸூரிகளுக்கு
தம்பிரான் — ஸ்வாமியாய்
அரங்க நகர் — கோயிலிலே எழுந்தருளியிருக்கிற
எம்பிரானுக்கு — பெரிய பெருமாள் விஷயத்தில்
எழுமையும் — எப்போதும்
பித்தன் — பித்தனாயிரா நின்றேன்.

* * * ஸம்ஸாரத்தில் வெறுப்பும் கைங்கர்யத்தில் விருப்பும் இல்லாமையில் ப்ரஹ்மாதிகளின் ஸம்பத்தையாகிலும் அதை நான் த்ருணமாகவே நினைப்பேன்; நித்யஸூரிகளெல்லாம் அநுபவிக்கும்போலே ஸம்ஸாரிகளும் இழவாமல் அநுபவிக்கும்படி கோயிலிலே வந்து ஸுலபமாகக் கண்வளர்ந்தருளுமவனுடைய இந்த சீர்மையை நினைத்து 'இது என்ன திறம்!' என்று மோஹிப்பதே எனக்குத் தொழிலாயிருக்குமென்கிறார். (௬)

674 எத்திறத்திலும் யாரொடுங்கூடும் * அச்சித்தந்தன்னைத் தவிர்த்தனன் செங்கண்மால் *
அத்தனே அரங்காவென்றழைக்கின்றேன் * பித்தனாயொழிந்தேன் எம்பிரானுக்கே. (எ)

செங்கண்மால்	புண்டரீகாக்ஷனான எம்பெருமான்	அத்தனே	ஸ்வாமியே
எத்திறத்திலும்	எந்த விஷயத்திலும்	அரங்கா	ஸ்ரீரங்கநாதனே!
யாரொடும்	கண்ட பேர்களோடே	என்று அழைக்கின்றேன்	என்று கூவாநின்றேன்;
கூடும் அச்சித்தந்தன்னை	சேர்ந்து கெட்டுப்போவதற்கு உருப்பான நெஞ்சை		
தவிர்த்தனன்	நீக்கியருளினான்; (ஆதலால்)		எம்பிரானுக்கே பித்தனாய் ஒழிந்தேன்.—

*** 'ஆழ்வீர்! அப்படிப்பட்ட பெருந்தன்மைக்கடியான ஸம்பத்து உமக்கு வந்தபடி என்?' என்று சிலர் கேட்க; இது நானே ஸம்பாதித்துக் கொண்டதல்ல; ஸர்வேச்வரனது அருளடியாகக் கிடைத்ததென்கிறார். 'ஒரு அனைத்துலகும் பேசிலும் ஸகல புருஷார்த்தங்களும் கொள்ளைகொள்ளையாகக் கிடைக்கும்' என்று ஒரு ஆப்தன் சொன்னபோதிலும் அப்போதும் அவர்களை நிருபாதிகமாகக் கருதி, 'ஸ்ரீரங்கநாதா! ஸ்ரீரங்கநாதா!' என்றே எப்போதும் வாய்வெருவிக் கொண்டிருக்கும்படி எம்பெருமான் எனக்கு அருள்புரிந்த பாக்கியம் மற்றைப் பேர்க்குக் கிடைக்குமோ என்கிறார். எம்பெருமான் என்னை ஒருதடவை குளிரக் கடாக்ஷித்த மாத்திரத்திலே இந்த பாக்கியம் வாய்த்தது என்பார் "செங்கண்மால்" என்கிறார். (எ)

675 பேயரேயெனக்கியாவரும் யானுமோர் பேயனே * எவர்க்கும் இது பேசியென்?
ஆயனே! அரங்காவென்றழைக்கின்றேன் * பேயனாயொழிந்தேன் எம்பிரானுக்கே. (அ)

யாவரும்	(ஸம்ஸாரிகள்) எல்லாரும்	இது	இவ்விஷயத்தை
எனக்கு	என் கணக்கில்	பேசி	(விரிவாகச்) சொல்லுவதனால்
பேயரே	பைத்தியக்காரர்கள் தான்,	என்	என்ன பிரயோஜனமுண்டு
யானும்	(அவர்களின் கணக்கில் இவ்வண்ணமே) நானும்	ஆயனே	ஸ்ரீக்ருஷ்ணனே!
		அரங்கா	ஸ்ரீரங்கநாதனே!
எவர்க்கும்	எவர்களுக்கும்	என்று அழைக்கின்றேன்	என்று (பகவந்நாமங்களைச் சொல்லிக்) கூவாநின்றேன்;
ஓர் பேயனே	ஒரு பைத்தியக்காரன் தான்;		எம்பிரானுக்கே பேயனாய் ஒழிந்தேன்.—

*** "திருமலையாழ்வாரைக் கோவணம் கட்டாத ஊரிலே கோவணம் கட்டினவனொருவன் பைத்தியக்காரன்போல் பரிஹஸிக்கத்தக்கவன்" என்ற பழமொழியின்படி—லோகவிருத்தமான நீர் பைத்தியக்காரர் என்று எல்லாராலும் இகழ்ச்சியடைய நேருமன்றோ! என்று ஆழ்வாரை நோக்கிச் சிலர் கூற, அவர்களுக்கு விடை கூறுகின்ற பாசுரமிது. (அ)

676 அங்கையாழி அரங்கனடியிணை * தங்குசிந்தைத் தனிப்பெரும்பித்தனாம் *
கொங்கர்கோன் குலசேகரன் சொன்னசொல் * இங்குவல்லவர்க்கு ஏதமொன்றில்லையே. (கூ)

அம் கை ஆழி	அழகிய திருக்கையிலே திருவாழியையுடைய புள்ள	குலசேகரன்	குலசேகராழ்வார்
		சொன்ன	அருளிச்செய்த
அரங்கன்	ஸ்ரீரங்கநாதனுடைய	சொல்	இப்பாசுரங்களை
அடி இணை	திருவடிகளில்	இங்கு	இவ்வுலகத்திலே
தங்கு சிந்தை	பொருந்திய மனமுடையவராய்	வல்லவர்க்கு	ஓதவல்லவர்களுக்கு
தனி பெரு பித்தன் ஆம்	லோக விலக்ஷணமான பெரிய பித்தராய்	ஏதம் ஒன்று இல்லை	(பகவத்விஷயத்திற்கு) ஒருவிதமான இடையூறும் உண்டாகமாட்டாது.
கொங்கர் கோன்	சேரதேசத்தவர்களுக்குத் தலைவரான		

அடிவரவு:—மெய் நூல் மாரன் உண்டி நீதி எம்பரத்தர் எத்திறம் பேயர் அங்கை ஊன்.

திருவேங்கட மலையில் நமக்குள்ள ஆதாரநிலையைத் தெரிவிப்பவராய்த் திருமலையோடு சம்பந்த முடையதொரு பிறப்பைத் தாம்வேண்டுகிறார் இத்திருமொழியில்.

677 ஊனேறுசெல்வத்து உடற்பிறவியான்வேண்டேன் *
ஆனேறேழ்வென்றான் அடிமைத்திறமல்லால் *
கூனேறுசங்கமிடத்தான்றன் வேங்கடத்து *
கோனேரிவாழும் குருகாய்ப்பிறப்பேனே. (க)

ஆன் ஏறு ஏழ் வென்றான்	(நப்பின்னைப் பிராட்டிக்காக) ஏழு எருதுகளை முடித்தவ னான எம்பெருமானுக்கு	கூன் ஏறு சங்கம்	(அன்றியும்.) வளைந்திருக்கிற ஸ்ரீபாஞ்சஜந்யத்தை
அடிமை திறம் அல்லால்	கைங்கரியம் செய்வதையே அன்றி வேறொன்றையும்	இடத்தான் தன்	இடத்திருக்கையிலேயுடைய எம்பெருமானுடைய
ஊன் ஏறு செல்வத்து உடல் பிறவி	(நாளுக்கு நாள்) மாம்சம் வளர்ந்து நடப்பதாகிற செல்வத்தையுடைய இம்மனித வுடம்பெடுத்துப் பிறத்தலை	வேங்கடத்து	திருவேங்கட மலையில்
		கோனேரி வாழும்	திருக்கோனேரி என்கிற ஸ்வாமி புஷ்கரிணியில் வாழ்கிற
யான் வேண்டேன்	(விவேகம் பெற்ற) நான் (இனி) விரும்பமாட்டேன்	குருகு ஆய் பிறப்பேன்	நாரைப்பறவையாகப் பிறக்கக் கடவேன்.

* * *—திருவேங்கடமலையில் வாழ்ச்சி கிடைக்கப்பெற்றால், விவேகமற்றதொரு திர்யக்ஜந்துவாகப் பிறப்பதும் அடியேனுக்குப் பரமோத்தேச்யமாகும்; அத்திருமலை வாழ்ச்சிக்கு விரோதியான இம்மானிட வுடற்பிறவி எனக்கு ஒருநாளும் வேண்டா என்கிறார். அடிமைத் திறமாவது—திருவடி திருவனந்தாழ்வான் இளையபெருமாள் முதலானவர்கள் போலப் பலபடியாலும் [illegible] அடிமைசெய்யும் வகை.

கோனேரி—ஸ்வாமி புஷ்கரிணி. இப்பெயர் [illegible] எம்பெருமான் [illegible] என்று பொருள்படும். அன்றி, எல்லாத் தீர்த்தங்களிலும் தலைமைபெற்ற தீர்த்தமென்றும் பொருளாகலாம். இந்த ஸ்வாமி புஷ்கரிணியின் சிறப்பு, வராஹபுராணம் முதலியவற்றில் பரக்கக் காணத்தக்கது. திருமலையின் சந்நிதிக்கு அருகில் உள்ள பிரதானமான திவ்யதீர்த்தம் இது.

“உடற்பிறவி யான் வேண்டேன்” என்று பிறவியை இகழ்ந்தவர்தாமே “குருகாய்ப் பிறப்பேனே” என்று பிறவியை விரும்புவதனால், அங்கே பிறப்பது பிறப்பன்று; அது ஸ்வரூபநிலையைச் சேர்த்துவைக்கும் [illegible] என்ற கருத்தை [illegible]. ஊன், ஆன், கோன் என்பவற்றில், ன்—சாரியை, குருகு என்ற சொல்—அன்னம் க்ரௌஞ்சம் என்ற பெரும்பறவைகளைக் குறிப்பதாகவும் பறவைப்பொதுப்பெயராகவும் வழங்கும்.

ஆனாதசெல்வத்து அரம்பையர்கள்தற்சூழ * வானாளும்செல்வமும் மண்ணரசும்யான்வேண்டேன் *
தேனார்பூஞ்சோலைத் திருவேங்கடச்சுனையில் * மீனாய்ப்பிறக்கும் விதியுடையேனாவேனே. (உ)

ஆனாத செல்வத்து	அழியாத (பெருமையுடைய) ஐச்வர்யத்தையுடைய	தேன் ஆர் பூ சோலை	தேன் மிக்க மலர்களுள்ள சோலைகளையுடைய
அரம்பையர்கள்	அப்ஸரஸ் ஸ்த்ரீகள்	திருவேங்கடம்	திருவேங்கட மலையிலிருக்கின்ற
தற் சூழ	தன்னைச் சூழ்ந்து நிற்க	சுனையில்	சுனைகளிலே
வான் ஆளும்	சுவர்க்கத்தை அரசாளுகின்ற	மீன் ஆய் பிறக்கும்	ஒரு மீனாய்ப் பிறக்கக்கூடிய
செல்வமும்	ஐச்வர்யத்தையும்	விதி	பாக்கியத்தை
மண் அரசும்	இப்பூமியைத் தனியே அரசாளும் ஆட்சியையும்	உடையேன் ஆவேனே	உடையவனாகக்கடவேன்.
யான் வேண்டேன்	(உலகத்தாரெல்லாம் விரும்பினாலும்) நான் விரும்பமாட் டேன்;		

ஆ. ஆ. ஆ.—இந்திரன் முதலிய தேவர் தேவர்களின் பதவிகளும் இவ்வுலகத்து அரசாட்சி முதலிய இரண்டும் ஒருவர்க்கு கிடைத்தாலும் வேண்டேன் என்று விலக்குகின்றார். அரம்பையர் கள்—ரம்பை முதலியோர். இரண்டாவதடியுள்ள செல்வத்திற்கும், இவை எனக்கு வலிய வந்தே கிடைத்தாலும் வேண்டா வென்பதும், இவற்றை யான் வேண்டாமைக்குக் காரணம் இவை கிடைப்பனவல்ல, இவற்றில் எனக்கு விருப்பமில்லாமையே என்பதும் தோன் றும். முன்னடியில் ஸ்வர்க்கத்தை சொல்லுகையால் இந்திரனுக்கும் கீழ்ப்பட்டவையாதலும், ஸ்வ ர்க்கமான ஆத்மாநந்தத்தை சொல்லுகையால் இவை அழியக்கூடியவையாதலும், துக்கமான வற்றை பந்தங்களின்று விடுவிக்கின்ற அங்கீகாரம் இல்லாமையால் இவை பந்தத்தை உண்டாக்கும் படுத்துதலில் பொன்விலங்கும் இரும்புவிலங்கும் போலத் தம்முள் ஒப்பவையே யாதலும் கருதத்தக்கன. தேனார்—வண்டுகள் ஆரவாரிக்கின்ற என்றுமாம். மீனா—மச்சம் இருத் தல் ஆகும்.

கீழ் "குருகாய்ப் பிறப்பேனே" என்றவர், அதற்கு இறகுகள் இருப்பதால் அது அத்திரு மலையை விட்டுப் பறந்து வேற்றிடத்திற்குச் சென்றிடக்கூடுமெனக் கருதி, அவ்வாறன்றி அத்திருமலையிலேயே நிரந்தர வாழ்ச்சி இருப்பதையுடைய மீனாய்ப் பிறப்பேனாகவேண்டுமென்று இப் பாட்டில் வேண்டுகின்றார். குருகாய்ப் பிறந்தபோது அதற்கு இரையாகின்ற மீனாய்ப் பிறந் தபோது இவர்க்கு வாசியில்லை; திருமலையில் ஏதேனும் ஒரு ஜன்மத்தையே அபேக்ஷிப்பவராத லால்: "எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனு மாவேனே" என்பர் மேலும். (உ.)

679 பின்னிட்ட சடையானும் பிரமனும் இந்திரனும் *
துன்னிட்டுப் புகலரிய வைகுந்த நீள்வாசல் *
மின்வட்டச் சுடராழி வேங்கடக்கோன் தானுமிழும் *
பொன்வட்டில் பிடித்துடனே புகப்பெறுவேன் ஆவேனே. (௩.)

பின்னிட்ட சடையானும்	பிரிந்துவிட்ட சடையையுடைய ருத்ரனும்	மின் வட்டம் சுடர் ஆழி	மின்னலின் ஒளியைத் தாழ்த்திப்போல சோதியையுடையதாய் விளங்கு கின்ற வட்டவடிவமான சக்ராயுதத்தையுடைய
பிரமனும்	சதுர்முகனும்	வேங்கடம் கோன் தான்	திருவேங்கடமுடையான்
இந்திரனும்	தேவேந்திரனும்	உமிழும்	வாய்க்கொப்புளிக்கின்ற
துன்னிட்டு	நெருங்கி	பொன் வட்டில்	தங்க வட்டிலை
புகல் அரிய	உள்ளே புகுவதற்கு அரிதாக அமைந்திருக்கின்ற	பிடித்து	கையிலேந்திக்கொண்டு
வைகுந்தம் நீள் வாசல்	பூலோக வைகுண்டமாகிய திரு மலையிலுள்ள திருக்கோயில் மின் நீண்ட திருவாசலிலே	உடனே புக பெறுவேன் ஆவேனே	அந்தரங்க பரிஜனங்களுடனே நானும் உள்ளே புகும் பாக் கியத்தைப் பெறக்கடவேன்.

* * *—எம்பெருமானுக்கு அந்தரங்க கைங்கரியம் செய்யப் பெறுவதுண்டானும் மநுஷ்ய ஜன்மமேயாகிலும் அமையும் என வேண்டுகின்றார். பிரமன் சிவன் இந்திரன் முதலிய தேவதைகள் திருவேங்கடமுடையானைச் சேவித்தலில் விருப்பத்தால் அங்கு வந்து அக்கூட்டத்திலேயே மிகுதியாகக் கூடியுள்ள அடியார்களின் பெருங்கூட்டத்தின் நடுவில் சிக்கி நெருக்குண்டு உள்ளேபுகமுடியாமல் தடுமாறப்பெற்ற அத்திருமலையின் கோயில்வாசலின் வழியே யான் அப்பெருமானுக்கு அந்தரங்க கிங்கரனும் அவன் வாய்நீருமிழும் பொற்கலாஞ்சியை ஏந்திக்கொண்டு செல்லுமவனின். "இவர் அந்தரங்க கைங்கரியபரர்" என்று அனைவரும் விலகி வழிவிட, அர்ச்சக பரிசாரகர்களுடனே யானும் தடையின்றி எளிதில் இனிது உள்ளே புக்கு கர்ப்பக்ருஹத்திற் சேர்ந்து அருகில் நின்று கைங்கரியம்பண்ணப் பெறுவேனாவேனென்று பிரார்த்திக்கின்றார்.

பின்னிட்ட—பின்னிய; இடு—துணைவினை. பின் இட்ட என்று பிரித்து, பின்னே தொங்கவிட்ட சடையையுடையவன் என்றலுமாம். இங்ஙனம் 'பின்னிட்ட' என்றதைச் சடைக்கு விசேஷணமாக்காமல் சடையானுக்கு விசேஷணமாக்கி, தன்னையான நான்முகன் முன்னேயாகப் பின்னே செல்கின்றவன் புத்திரனான ருத்ரன் என்று உரைத்தலு முண்டு. கீழ் "மீனாய்ப்பிறக்கும் விதியுடையேனாவேனே" என்றவர், மீனானது நீர்விட்டுப்பிரிந்தால் உயிர்தரிக்கவேண்டியதாயிருக்குமென்று ஒரு கைங்கரியபரனாய்ப் பிறக்கவேணுமென்று அபேக்ஷிக்கிறார். வட்டில்—இல்லை, படிக்கம். உடனே—சீக்கிரமாக என்றுமாம். 'வாசல் புகப்பெறுவேன்' என்று அந்வயம். (௩)

680 ஒண்பவளவேலை உலவுதண்பாற்கடலுள் *
கண்துயிலும்மாயோன் கழலிணைகள்காண்பதற்கு *
பண்பகரும்வண்டினங்கள் பண்பாடும்வேங்கடத்து *
செண்பகமாய்நிற்கும் திருவுடையேனாவேனே. (௪)

ஒண் பவளம் வேலை உலவு	ஒளியுள்ள பவழக்கொடிகளைக் கரையிலே கொண்டு கொழித்து (அலைகள்) உலவுகிற
தண் பாற்கடலுள்	குளிர்ந்த திருப்பாற்கடலிலே
கண் துயிலும்	யோக நித்திரை செய்தருளுகின்ற
மாயோன்	ஆச்சரிய சக்தியுக்தனான எம்பெருமானுடைய
கழல் இணைகள்	இரண்டு திருவடிகளை
காண்பதற்கு	சேவிக்கும்படியாக,
பண் பகரும் வண்டு இனங்கள்	இசையையே பேசுகிற வண்டுகளின் கூட்டங்கள்
பண் பாடும் வேங்கடத்து	பண்ணிசையை பாடப்பெற்ற திருமலையிலே
செண்பகம் ஆய் நிற்கும் திருவுடையேன் ஆவேனே	சண்பக மரமாய் நிற்கும் பாக்கியமுடையேனாகக் கடவேன்.

* * *—அழகியதொரு சிறப்புமேயுண்டு செண்பகத்திற்கு; திருவேங்கடமலையில் இருப்பு நெருங்கியதாக அங்கு நிற்பதொரு சண்பகமரமாகவாகிலும் நான் ஆகவேண்டுமென்று அபேக்ஷிக்கின்றார். "வானவர் வானவர்கோனொடுஞ் சிந்து பூமகிழும் திருவேங்கடம்" என்றபடி பரமபதத்திலுள்ளார் புஷ்பவர்ஷம் வர்ஷிக்கின்ற இடமாதலைப்பற்றிப் புஷ்பமண்டபமெனப்படுகின்ற திருமலையிலே எம்பெருமானுக்குப் புஷ்பகைங்கரியஞ்செய்வது விசேஷமாதலால் அக்கைங்கரியத்துக்கு உபயோகப்படுவதொரு மரமாகவே வேண்டினரென்க. பலவகைப் புஷ்பங்களுள் சண்பகமலர் எம்பெருமானது திருவுள்ளத்துக்கு மிகவும் உகப்பாதலை பெரியாழ்வார் பூச்சூட்டல் திருமொழியில் "தேனில்இனிய பிரானே! செண்பகப்பூச் சூட்டவாராய்" என்று இதனை முதலிற்கூறியதனாலும் உணர்க. மேற்பாட்டில் விரும்பின கைங்கரியம் கிடைத்தால் வட்டிலைக் கைவசப்படுத்த ஆசைதோன்றிச் சிறையிருக்க நேரிடும் என நினைத்து சண்பகமரமாய்ப் பிறக்கவேணுமென்று அபேக்ஷித்தபடி. (௪)

631 [illegible] *
[illegible] *
[illegible] *
[illegible] ([illegible])

[illegible]	[illegible]	[illegible]	[illegible]
[illegible]	[illegible]	[illegible]	[illegible]
[illegible]	[illegible]	[illegible]	[illegible]
[illegible]	[illegible]	[illegible]	[illegible]
[illegible]	[illegible]	[illegible]	[illegible]
[illegible]	[illegible]	[illegible]	[illegible]

[illegible]

[illegible] ([illegible])

632 [illegible] *
[illegible] *
[illegible] *
[illegible] ([illegible])

[illegible]	[illegible]	[illegible]	[illegible]
[illegible]	[illegible]	[illegible]	[illegible]
[illegible]	[illegible]	[illegible]	[illegible]
[illegible]	[illegible]	[illegible]	[illegible]
[illegible]	[illegible]	[illegible]	[illegible]

* * *—"தம்பகமாய் நிற்குந் தவமுடையேனாவேன்" என்றவர் இதற்கு மேலே வரமி(?)க், அரசாங்கத்தார், மலையிலுள்ள செடி கொடிகளை அடிக்கடி செதுக்குபவராதலால் நிலை பெற்று அவைகள் தம்பகத்தைக் கிள்ளியெறிந்திடக் கூடுமென்றும், அதனாலே மலையில் நிலைத்திருக்கக்கூடுமென்றும் நினைத்து, அங்ஙனன்றி என்றும் ஒருபடிப்பட இருக்கும்படி அத்திருமலையில் ஒரு கானாறாய்க் கடவேனென்று அபேக்ஷிக்கின்றார். [illegible] தேசாந்தரத்தில் தமக்கு எல்லாவகை விருப்பத்தை வெளியிட்டார். (க)

683 வானாளும்மாமதிபோல் வெண்குடைக்கீழ் * மன்னவர்தம்
கோனாகிவீற்றிருந்து கொண்டாடும்செல்வறியேன் *
தேனார்பூஞ்சோலைத் திருவேங்கடமலைமேல் *
கானாறாய்ப்பாயும் கருத்துடையேனாவேனே. (எ)

வான் ஆளும் மா மதி போல்	ஆகாயத்தைத் தனக்கு இடமாகக்கொண்டு விளங்குகின்ற பூர்ண சந்திரன் போன்ற	செல்வு	செல்வத்தை
		அறியேன்	(யான் ஒரு பொருளாக) மதிக்கமாட்டேன்;
வெண் குடைக்கீழ்	வெண்மையான கொற்றக் குடையின் கீழ்	தேன் ஆர் பூ சோலை திருவேங்கட மலை மேல்	தேன்மிக்க மலர்களுள்ள சோலைகளையுடைய திருமலையின் மேல்
மன்னவர் தம் கோன் ஆகி வீற்றிருந்து	ராஜாதி ராஜனாய்ப்பெருமை தோன்ற இருந்து	கான் ஆறு ஆய் பாயும்	ஒரு காட்டாறாய்ப்பெருகும்படியான
கொண்டாடும்	(அவ்வரசாட்சியைக்) கொண்டாடப் படுவதற்குக் காரணமான	கருத்து	அந்த மனோரதத்தை
		உடையேன் ஆவேன்	உடையவனாகக்கடவேன்.

* * *—இப்படிப்பட்டதும், பொற்குடமாக வேணுமென்று பாரித்தார்; இதற்கு மேலித்த மாமே, அதுதன்னிலும் ஓர் அருப்பத்தி தோன்றிற்று: அதாவது—புதிதாகத் தோட்டங்கள் நாட்டுபவர்கள் கொம்பனை: முதலியவற்றின் வசதியாய்ப் பல்லாறுகளாகப் பகுத்து மலை முதலியவிவிருந்து பெருகும் பெரும் பாணத்தை உடைத்துக் கொண்டு போகிற வழக்கமுண்டாதலால் அதுவும் ஏற்றதன்றென்று தோன்றிற்று. தோன்றவே, அங்ஙனன்றி, ஒருவராலும் பெயர்த்துக்கொண்டு போகக் கூடாததான [illegible] நெறியாய்க் கிடக்கவேணுமென்று அபேக்ஷிக்கிறார் இதில்.

684 பிறையேறுசடையானும் பிரமனுமிந்திரனும் *
முறையாயபெருவேள்விக் குறைமுடிப்பான்மறையானான் *
வெறியார்தண்சோலைத் திருவேங்கடமலைமேல் *
நெறியாய்க்கிடக்கும் நிலையுடையேனாவேனே. (அ)

பிறை ஏறு சடையானும்	இளஞ் சந்திரன் ஏறியிருக்கின்ற ஜடையையுடைய சிவனும்	மறை ஆனான்	வேதங்களிற் பரம்பொருளாகக் கூறப்படுபவனுமான எம்பெருமானுடைய
பிரமனும்	ப்ரஹ்மாவும்	வெறி ஆர் தண் சோலை	பரிமளம் மிக்க குளிர்ந்த சோலைகளையுடைய
இந்திரனும்	தேவேந்திரனும்		திரு வேங்கட மலை மேல்—
முறை ஆய	தம் தமது மேலாயனதக்குத் தக்கபடி செய்கின்ற	நெறி ஆய் கிடக்கும்	(போகிற) வழியாய்க் கிடக்கின்ற
பெரு வேள்வி	பெரிய யாகங்களின் பயனை	நிலை	நிலைமை
குறை முடிப்பான்	(அவர்களது) குறையைத் தீர்த்து அவர்கள் கோரிக்கையைத் தலைகட்டுவிப்பவனும்	உடையேன் ஆவேன்	உடையவனாகக்கடவேன்.

* * *—கீழ்ப்பாட்டில் "கானாறாய்ப் பாயும் கருத்துடையேனாவேனே" என்று பாரித்தவர் சற்று ஆராய்ந்ததில் அது தன்னிலும் ஓர் குறையுணர்ந்தார்; ஆறு எப்போதும் ப்ரவஹிக்கக்கூடியதல்ல; சில காலங்களில் வற்றிப்போம்; அப்போது திருமலை வாழ்ச்சி இழந்ததாம் என நினைத்தார். அங்ஙனமன்றி எப்போதும் ஒரு தன்மையாகத் திருவேங்கடமுடையானை ஸேவிக்கவருகின்ற பாகவதர்களின் ஸ்ரீபாததூளி படும்படி வழியாய்க்கிடக்கும் நிலைமை தமக்கு வாய்க்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கின்றார் இதில்.

குறைமுடிப்பான்—இது இரட்டுறமொழிதலாய், குறையைத் தீர்ப்பவன், (வேண்டு) கோளைப் பூர்த்திசெய்பவன் எனப் பொருள்தரும். அடியார் கருத்தையும் இஷ்டப்ராப்தியும் செய்பவன் என்கை. (௮)

685 செடியாயவல்வினைகள் தீர்க்குந்திருமாலே *
நெடியானேவேங்கடவா நின்கோயிலின்வாசல் *
அடியாரும்வானவரும் அரம்பையருங்கிடந்தியங்கும் *
படியாய்க்கிடந்து உன்பவளவாய்காண்பேனே. (௯)

செடி ஆய	செடிபோல் அடர்த்துள்ள
வல் வினைகள்	கொடிய கருமங்களை
தீர்க்கும்	(ஆச்ரிதர்க்குப்) போக்கடிக்குந் திற
திரு மாலே	ச்ரியப்பதியான பெருமானே!
நெடியானே	பெரியோனே!
வேங்கடவா	திருவேங்கடமுடையானே!
நின் கோயிலின் வாசல்	உனது ஸந்நிதியின் உள் வாசலிலே
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்து இயங்கும் படி ஆய் கிடந்து	பாகவதர்களும் மற்றைத்தேவர்களும் அப்ஸரஸ்ஸ்த்ரீகளும் இடைவிடாது ஸஞ்சரிக்கப்பெற்ற படிக்கல்லாய்ப் பொருந்தி
உன் பவளம் வாய் காண்பேன்	உனது பவளம்போன்ற திருவதரத்தைக் கண்டுகொண்டிருக்கக் கடவேன்.

* * *—கீழ்ப்பாட்டில் "நெறியாய்க்கிடக்கும் நிலையுடையேனாவேனே" என்று திருமலைக்கு வழியாகக் கடவேனுமென்று அபேக்ஷித்தவர் பிறகு ஆராய்ந்ததில் அது தன்னிலும் ஓர் குறை கண்டார்; வழியென்பது அவரவர்களுடைய சௌகரியத்துக்குத் தக்கபடி மாறுபடும்; கீழ்த்திருப்பதியிலிருந்து திருமலைக்குப் போகும்வழி மிக வருத்தமாயிருக்கிற தென்று யாத்ரிகர் சந்த்ரகிரி வழியாகப் போகக்கூடும்; முடித்திருக்கின்றதான் வழியென்று சொல்ல முடியாதாகையாலும், வழியானது கீழே கிடப்பதாகையாலும், வழியாக வேண்டாவென்று திரும்பவந்து காட்டும் எம்பெருமானது திருவருள் நோக்கம் படியுமாறு அவன் ஸந்நிதியிலே மெய்யடியாரோடு பிறரோடு வாசியற எல்லாரும் இடைவிடாது ஸஞ்சரிக்கும்படியான ஓர் அசேதனப்பொருளாகி, அதிலே உன் பவளவாய் காணும்படியானதொரு ஸ்தைர்யத்தையும் பெறக்கடவேனென்று தமது விசேஷமான விருப்பத்தை விண்ணப்பஞ்செய்கிறார் இதில். இப்பாசுரத்தை அடியொற்றியே விஷ்ணுவாலயங்களிற் கோயிலினுள் வாசற்படி 'குலசேகரப்படி' என்று இலக்கணமிட்டு வழங்கப்படும் என்பது ஸம்ப்ரதாயம். (௯)

686 உம்பருலகாண்டு ஒருகுடைக்கீழுருப்பசிதன் *
அம்பொற்கலையல்குல் பெற்றாலுமாதரியேன் *
செம்பவளவாயான் திருவேங்கடமென்னும் *
எம்பெருமான்பொன்மலைமேல் ஏதேனுமாவேனே. (௰)

உம்பர் உலகு	தேவலோகத்தின் செல்வம்
ஒரு குடை கீழ்	ஒரு கொற்றக் குடையின் கீழிலே
ஆண்டு	அரசாண்டு
உருப்பசி தன்	ஊர்வசியினுடைய
அம்	அழகிய
பொன் கலை அல் குல்	[illegible]

பெற்றாலும் ஆதரியேன்	அடையப் பெற்றாலும் (அதனை) விரும்பமாட்டேன்;	திருவேங்கடம் என்னும் பொன் மலைமேல்	திருவேங்கடமென்று பெயரையுடைய அழகிய திருமலையின் மேல்
செம் பவளம் வாயான்	சிவந்த பவழம்போன்ற வாயையுடையனும்	ஏதேனும் ஆவேன்	ஏதேனுமொரு பதார்த்தமாகப் பிறக்கக்கடவேன்.
எம்பெருமான்	எனது அப்பனுடைய		

* * *—இப்பாட்டுக் படியாய்க் கிடக்கவேணுமென்று ப்ரார்த்தித்தது எம்பெருமானுடைய பவளவாய் காண்பதற்காக; அப்படியுரைத்தும் கிடையாதொழியினு மொழியும்; ஏனெனில்; திருமலையில் ஸந்நிதிக்குள் ஏருக்கப்படியிருப்பது திருவேங்கட முடையானுடைய செல்வத்திற்குத் தகாது என்று மறைய ப்ரபுக்கள் வந்து அப்படியை ஸ்வர்ணமயமாக்கி ஆவரிக்கக்கூடும். அப்போது நாம் அப்பன் திருமுகமண்டல ஸேவையை இழந்தோமாவோம்; ஆனதால் படியாய்க் கிடப்பதும் பாங்கல்ல என்று அறுதியிட்டார். பின்பு எந்தப்பிறவியைப் ப்ரார்த்திக்கலா மென்று யோசித்தார்; இத் திருமலையிலுள்ள ஒவ்வொரு பிறப்பிலும் ஒவ்வொரு அநுபவத்தை தோன்றிக்கொண்டே யிருந்தது. கடைசியாக ஒரு பிறவியையும் நாமாக வேண்டிக்கொள்ள விரும்பாதவராய் "எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனு மாவேனே" என்கிறார். (௰)

687 மன்னியதண்சாரல் வடவேங்கடத்தான்றன் *
பொன்னியலுஞ்சேவடிகள் காண்பான்புரிந்திறைஞ்சி *
கொன்னவிலுங்கூர்வேல் குலசேகரன்சொன்ன *
பன்னியநூல்தமிழ்வல்லார் பாங்காயபத்தர்களே. (௧௧)

கொல் நவிலும்	(பகைவர்களைக்) கொல்லுதலை பயில்கிற	காண்பான்	ஸேவிப்பதற்கு
கூர் வேல்	கூர்மையான வேலாயுதத்தையுடைய	புரிந்து	ஆசைப்பட்டு
குலசேகரன்	குலசேகராழ்வார்	இறைஞ்சி	வணங்கி
மன்னிய தண் சாரல் வடவேங்கடத்தான் தன்	நிலைபெற்ற குளிர்ச்சிபொருந்திய சாரல்களையுடைய வடவேங்கட மலையில் எழுந்தருளியிருக்கிற பெருமானது	சொன்ன	அருளிச்செய்த
பொன் இயலும் சேவடிகள்	பொன்போற் சிறந்த சிவந்த திருவடிகளை	பன்னிய நூல் தமிழ்	ஆராய்ந்து அமைக்கப்பட்ட இலக்கணத்துக்கு இசைந்த தமிழ்ப்பாசுரங்களை
		வல்லார்	கற்று வல்லவர்
		பாங்கு ஆய பத்தர்கள்	(அப்பெருமான் திருவுள்ளத்துக்கு) இனிய பக்தர்களாவர்.

இத்திருமொழியை அடியொற்றி,

"நாடாக நிற்கு நெடுமாலுக்குத் தவச்சிறிய
பூடாகக் குழைத்த தெம்புதலை வழிப்படுமே
கேடாகப் பெறுமென்னிலன்னாள் ! தந்திபெறலாம்
வீடாகத் திருநெறிமால் வீற்றிருக்கும் வேங்கடத்தே." (௧௧)

என்று திருவேங்கடக் கலம்பகத்திற் கூறியது காண்க.

அடிவரவு—ஊன் ஆனாத மின் ஒண் கம்பம் மின் வான் செடி உம்பர் மன்னிய தரு.

ஸ்ரீமந்நாராயணனே யன்றித் தமக்கு வேறு சரணமில்லாமையை அநேக த்ருஷ்டாந்த பூர்வமாகத் திருவித்துவக் கோட்டம்மான் முன்னிலையில் விண்ணப்பஞ் செய்கிறார்.

688 தருதுயரந்தடாயேல் உன்சரணல்லால்சரணில்லை *
விரைகுழுவும்மலர்ப்பொழில்சூழ் வித்துவக்கோட்டம்மானே! *
அரிசினத்தாலீன்றதாய் அகற்றிடினும் * மற்றவள்தன்
அருள்நினைந்தேயழுங்குழவி அதுவேபோன்றிருந்தேனே. (க)

விரை குழுவும்	பரிமளம் மிகுந்த	ஈன்ற தாய்	பெற்ற தாயானவள்
மலர்	புஷ்பங்களையுடைய	அரி சினத்தால்	மிக்க கோபங்கொண்டு அதனால்
பொழில் சூழ்	சோலைகளாலே சூழப்பட்ட	அகற்றிடினும்	(தனது குழந்தையை) வெறுத்துத் தள்ளிவிடினும்
வித்துவக்கோடு	திருவித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கிற	மற்று	பின்பும்
அம்மானே	ஸ்வாமியே!	அவள் தன் அருள் நினைந்தே அழும்	அந்தத் தாயினுடைய கருணையையே கருதி அழுகின்ற
தரு துயரம்	(நீயே எனக்குத்) தந்த இத் துன்பத்தை	குழவி அதுவே	இளங்குழந்தையையே
தடாயேல்	நீயே நீக்கியிடா விட்டாலும்	போன்று இருந்தேன்	ஒத்திரா நின்றேன்.
உன் சரண் அல்லால் சரண் இல்லை	உனது திருவடிகளை யன்றி (எனக்கு) வேறு புகலில்லை		

* * * வித்துவக்கோடு என்பதற்கு—வித்வான்கள் கூடிய இடம் என்று காரணப் பொருள் கூறுவர். பிள்ளைப்பெருமாளையங்கார் நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில் "திரு விற்றுவக்கோடு சேர்த்தார் பிரான் திருவித்துவக் கோடுடையான்" என்றிருப்பதனால், வித்துவக் கோடு அன்று; விற்றுவக்கோடு என்பர் சிலர்: அவ்விடத்திலும் "திருவித்துவக்கோடு" என்றே பாடமென்பர் பெரியோர்: இவ்வண்ணம் எதுகையின்பம் குன்றாது இத்திருமொழியின் ஈற்றுப்பாசுரத்திலும் இவ்வண்ணமே பாடமாம். இத்திவ்யதேசம் மலைநாட்டில் "திருமிற்றக் கோடு" என வழங்கப் படுகின்றது. (க)

689 கண்டாரிகழ்வனவே காதலன்றான்செய்திடினும் *
கொண்டானையல்லால் அறியாக்குலமகள்போல் *
விண்டோய்மதிள்புடைசூழ் வித்துவக்கோட்டம்மா! * நீ
கொண்டாளாயாகிலும் உன்குரைகழலே கூறுவனே. (உ)

விண் தோய் மதிள்	ஆகாயத்தை அளாவிய மதிள்கள்	கொண்டானை அல்லால் அறியா	(தன்னை) மணஞ்செய்து கொண்டவனான அக்கணவனையே யன்றி வேறொருபுருஷனை விரும்பவறியாத
புடை சூழ்	எப்புறத்தும் சூழப்பெற்ற	குலம் மகள் போல்	உயர்ந்தகுலத்துப் பிறந்த கற்புடைய மகள்போல்
வித்துவக்கோடு அம்மா	திருவித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கிற ஸ்வாமியே!	நீ கொண்டு ஆளாய் ஆகிலும்	என்னை அடிமைகொண்டருளா விட்டாலும் நீ குறையும் தீர்க்கப்படாமல் உபேக்ஷித்தாயாகிலும்
காதலன் தான்	கணவனானவன்		
கண்டார் இகழ்வனவே செய்திடினும்	பார்ப்பவர்களெல்லாரும் இகழத்தக்க செயல்களையே செய்தாலும்	உன் குரை கழலே கூறுவன்	ஒலிக்கின்ற வீரக்கழலையுடைய உனது திருவடிகளையே சரணமாகக் கூறிக்கொள்வேன்.

690 மீன்நோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோட்டம்மா! * என்
பால்நோக்காயாகிலும் உன்பற்றல்லால் பற்றிலேன் *
தான்நோக்காது எத்துயரம் செய்திடினும் * தார்வேந்தன்
கோல்நோக்கி வாழும் குடிபோன்றிருந்தேனே. (௩)

மீன் நோக்கும்	மீன்களைக் கண்டு (தாம் வசிப்பதற்கு மிகவும் தகுதியான இடமென்று) ஆசையோடு பார்க்கிற [மீன்கள் மிக்க]	தார் வேந்தன்	(குடிகளைக் காப்பதற்கென்று) மாலையணிந்துள்ள அரசன்
நீள் வயல் சூழ் வித்துவக்கோடு	விசாலமான கழனிகள் சூழ்ந்த திருவித்துவக்கோட்டில் எழுந்தருளியுள்ள	தான் நோக்காது	(அந்த அரசனே) தான் கடாக்ஷித்துப் பாதுகாவாமல்
அம்மா	பெருமானே!	எத்துயரம் செய்திடினும்	எவ்வகைப்பட்ட துன்பங்களைச் செய்தாலும்
என் பால்	அடியேன் மீது	கோல் நோக்கி வாழும்	(அவனுடைய) செங்கோலையே எதிர்பார்த்து வாழ்கிற
நோக்காய் ஆகிலும்	(நீ) அருள் நோக்கம் செய்யாதிருந்தாலும்	குடி	பிரஜைகளை
உன் பற்று அல்லால் பற்று இலேன்	உன்னைச் சரணமாகப் பற்றுவதை விட்டு வேறொருவரைச் சரணம் புகமாட்டேன்;	போன்று இருந்தேன்	ஒத்திருக்கின்றேன்.

691
வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால் * மாளாத காதல் நோயாளன்போல் மாயத்தால் *
மீளாத்துயர் தரினும் வித்துவக்கோட்டம்மா! * நீ ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே. (௪)

வித்துவக்கோட்டு அம்மானே!—		மாயத்தால்	(உன்) மாயையினால்
வாளால் அறுத்து	(வைத்தியன்) கத்தியைக்கொண்டு அறுத்தும், ([illegible])	நீ மீளா துயர் தரினும்	நீ நீங்காத துன்பத்தை (எனக்கு) விளைத்தாலும்
சுடினும்	சூடுபோடுதலைச் செய்தாலும்	அடியேன்	உனது அடியவனான நான்
மருத்துவன் பால் மாளாத காதல்	அவ்வைத்தியனிடத்து நீங்காத அன்புடைய	ஆள் ஆ (க)	அடிமையை விரும்பியவனாக
நோயாளன் போல்—நோயாளியைப்போல்		உனது அருளே பார்ப்பன்	உன்னுடைய கருணையையே நோக்கியிராநின்றேன்.

* * * இவை எனக்கு [illegible] என்று நான் அறிந்த பின்பு, நீ எனக்கு எவ்வளவு துன்பங்களை இவ்விபூதியிலே தந்தருளினாலும் [illegible] நான் [illegible] பரமே [illegible] மேன்மேலும் அன்பு செய்து [illegible] உன்னை [illegible] என்பதை உபமானத்தால் விளக்கினர். (௪)

692 வெங்கண்திண்களிறடர்த்தாய் வித்துவக்கோட்டம்மானே! *
எங்குப்போய் உய்கேன் உன் இணையடியே அடையலல்லால் *
எங்கும்போய்க் கரைகாணாது எறிகடல்வாய் மீண்டேயும் *
வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே. (௫)

வெம் கண்	பயங்கரமான கண்களையுடைய	கடல் வாய்	கடலின் நடுவிலே
திண் களிறு	வலிய (குவலயாபீடமென்னும்) யானையை	எங்கும் போய் கரை காணாது	எங்கு [illegible] போய்ப் பார்த்தும் கரையைக் காணாமல்
அடர்த்தாய்	கொன்றவனே!	மீண்டு	திரும்பிவந்து
வித்துவக்கோட்டு அம்மானே!—;		ஏயும்	(தான் முன்பு) பொருந்திய
உன் இணை அடியே அடையல் அல்லால்	உனது உபய பாதங்களையே (நான்) சரணமடையுமதல்லால்	வங்கத்தின்	மரக்கலத்தினுடைய
எங்கு போய் உய்கேன்	வேறு யாரிடத்திற்போய் உஜ்ஜீவிப்பேன்?	கூம்பு ஏறும்	பாய்மரத்தின் மீது சேர்கிற
எறி	அலையெறிகிற	மா பறவை போன்றேன்	பெரியதொரு பக்ஷியை ஒத்திருக்கின்றேன்

693 செந்தழலேவந்து அழலைச்செய்திடினும் * செங்கமலம்
அந்தரம்சேர் வெங்கதிரோற்கல்லாலலராவால் *
வெந்துயர்வீட்டாவிடினும் விற்றுவக்கோட்டம்மா! * உன்
அந்தமில்சீர்க்கல்லால் அகம்குழையமாட்டேனே.

விற்றுவக்கோட்டு அம்மானே!—;		அலரா	(நெருப்புக்கு) மலரமாட்டா;
செந்தழலே வந்து	செந்நிறமுடைய நெருப்பு (தானாக) வந்து	வெம் துயர்	(அதுபோலே நீ) வெவ்விய துயரை (என்) பக்கலில்
அழலை செய்திடினும்	வெப்பத்தைச் செய்தாலும்	வீட்டா விடினும்	நீ தீராதொழிந்தாலும்
செங்கமலம்	செந்தாமரைகள்	உன் அந்தம் இல் சீர்க்கு அல்லால்	உனது எல்லையில்லாத கல்யாண குணங்களுக்கே யல்லாமல்
அந்தரம் சேர் வெங்கதிரோற்கு அல்லால்	ஆகாசத்தில் தோன்றுகிற வெம்மையான கிரணங்களையுடைய ஸூர்யனுக்கு மலருமே யல்லது,	அகம் குழைய மாட்டேன்	(வேறொன்றுக்கு என்) நெஞ்சு குழையமாட்டேன்.

694 எத்தனையும்வான்மறந்தகாலத்தும் பைங்கூழ்கள் *
மைத்தெழுந்தமாமுகிலே பார்த்திருக்கும்மற்றவைபோல் *
மெய்த்துயர்வீட்டாவிடினும் விற்றுவக்கோட்டம்மா! * என்
சித்தமிகவுன்பாலே வைப்பனடியேனே. (ஏ)

விற்றுவக்கோட்டு அம்மானே!—;		அவை போல்	அப்பயிர்கள் போல,
வான்	மேகமானது	மெய் துயர் வீட்டா விடினும்	சரீர ஸம்பந்தமடியாக வரும் துக்கங்களை நீ போக்காமல் உபேக்ஷித்தாலும்
எத்தனையும் மறந்த காலத்தும்	எவ்வளவு காலம் மழை பெய்யாமல் மறந்தொழிந்தாலும்		
பைங்கூழ்கள்	பசுமை தங்கிய பயிர்கள்	அடியேன்	உனக்கு அடிமைப்பட்ட நான்
மைத்து எழுந்த மா முகிலே பார்த்திருக்கும்	கருநிறங்கொண்டு கிளம்புகிற பெரிய மேகங்களையே பார்த்திருக்கும்;	என் சித்தம் உன் பாலே மிக வைப்பன்	என் மனத்தை உன் விஷயத்திலேயே மிகவும் செலுத்துவேன்.

695 தொக்கிலங்கியாறெல்லாம் பரந்தோடித்தொடுகடலே *
புக்கன்றிப்புறம்நிற்க மாட்டாதமற்றவைபோல் *
மிக்கிலங்குமுகில்நிறத்தாய் விற்றுவக்கோட்டம்மா! * உன்
புக்கிலங்குசீரல்லால் புக்கிலன்காண்புண்ணியனே! (அ)

மிக்கு இலங்கு முகில் நிறத்தாய்	மிகவும் விளங்குகிற மேகம்போன்ற வடிவழகையுடையவனே!	தொடு கடலே புக்கு அன்றி புறம் நிற்க மாட்டா	ஆழ்ந்த கடலிலே சென்று சேர்ந்தல்லது மற்றோரிடத்திலே புகுந்து நிற்கமாட்டா;
விற்றுவக்கோட்டு அம்மானே!—;		அவை போல்	அந்நதிகள் போல,
புண்ணியனே	புண்ய ஸ்வரூபனானவனே!	புக்கு இலங்கு	(என் நெஞ்சினுள்ளே) புகுந்து விளங்குகிற
தொக்கு இலங்கி யாறு எல்லாம்	(மழைநீரால்) திரண்டு விளங்குகிற நதிகளெல்லாம்	சீர் அல்லால்	(உனது) கல்யாணகுணங்களைத் தவிர (மற்றொன்றில்)
பரந்து ஓடி	(கண்டவிடமெங்கும்) பரவி ஓடி (முடிவில்)	புக்கிலன்	புகுந்திலேன்.

696 நின்னையேதான்வேண்டி நீள்செல்வம்வேண்டாதான்
தன்னையே * தான்வேண்டும் செல்வம்போல், மாயத்தால் *
மின்னையேசேர்திகிரி விற்றுவக்கோட்டம்மா! *
நின்னையேதான்வேண்டி நிற்பனடியேனே. (௯)

மின்னையே சேர் திகிரி	மின்னல் ஒளியையே கொண்ட சக்கராயுதத்தையுடைய
வித்துவக்கோட்டு அம்மா!—	
நின்னையே வேண்டி	உன்னையே விரும்பி
நீள் செல்வம் வேண்டாதான் தன்னையே	மிக்க ஸம்பத்தை விரும்பாதவனையே
தான் வேண்டும்	தானாகவே வந்துசேர விரும்புகிற
செல்வம் போல்	அந்த ஐச்வரியம்போல,
மாயத்தால்	(உன்) மாயையினால்
(நீ என்னை உபேக்ஷித்தாயாகிலும்)	
அடியேன்	உனது அடியவனான நான்
நின்னையே வேண்டி நிற்பன்	உன்னையே அடைய விரும்பி நிற்பேன்.

* * * பரமபுருஷன் எம்பெருமானிடத்திலே அன்பைச் செலுத்தி அதனால் ஐச்வர்யத்தை உபேக்ஷிக்கிறானோ, அவன் உபேக்ஷிக்க உபேக்ஷிக்க அவனை ஸம்பத்தைப் பயனும் அச்செல்வம் அவனை விடாது விரும்பி வலியத் தொடர்ந்து சேர்தல் இயல்பு. (அபேக்ஷிப்பவனுக்குக் கிடைப்பதொழிதலும், அபேக்ஷியாதவனுக்கு வலியவந்து கிடைத்தலும் பகவத் ஸங்கல்ப மஹிமையென்பது இங்கு அறியத்தக்கது) அதுபோலவே, நீ உன் உடைமையாகிய என்னை உபேக்ஷிக்க உபேக்ஷிக்க நான் உன்னையே விடாது நிற்பேன் என்றவாறு. அடியார்களுக்கு நேரும் துன்பங்களைப்போக்கி ரக்ஷிக்கக் காப்பதற்காகவே வையத் திருவாழியுடைய இங்கே வந்துள்ளாய் நீ என்பது மூன்றாமடியின் உட்கருத்து.

இப்பாட்டு விஷயத்தில் வேறாக ஸ்ரீகநுடைய கருத்து;—செல்வத்தை வெறுத்த எம்பெருமானையே வேண்டி நிற்பவனுக்கு அச்செல்வம் தானே வந்து சேர்தல் பகவத்கீதை "யோகக்ஷேமம் வஹாம்யஹம்" என்ற பகவத் வாக்யத்தினால் பொருந்தாததனால், இப்பாட்டின் அர்த்தம் கூறியுள்ளதை, முன்பு செங்கோல் ஐச்வர்யத்துக்காக உபாஸனை பண்ணி அதுபெறும் அதனை வெறுத்து எம்பெருமான் பக்கல் அன்பூண்ட ஒரு அதிகாரி விஷயமாகக் கொள்ளுதல் நலம் என்பதாம். செல்வம் என்பதற்கு 'மோக்ஷலக்ஷ்மீ' என்றுரைப்பாரும் உளர். (௯)

697 வித்துவக்கோட்டம்மா நீவேண்டாயேயாயிடினும் *
மற்றாரும்பற்றிலேனென்று அவனைத்தாள்நயந்த *
கொற்றவேல்தானைக் குலசேகரன் சொன்ன *
நற்றமிழ்ப்பத்தும்வல்லார் நண்ணார்நரகமே. (௰)

வித்துவக்கோட்டு அம்மா!—	
நீ வேண்டாயே ஆயிடினும்	நீ (என்னை) உபேக்ஷித்தாயாகிலும்
மற்று ஆரும் பற்றிலேன் என்று	'வேறு எவரையும் நான் சரணமடைய மாட்டேன்' என்று (அநந்யகதித்வத்தை வெளியிட்டு)
அவனை தாள் நயந்த	அவ்வெம்பெருமானது திருவடிகளையே ஆசைகொண்ட
கொற்றம் வேல் தானை குலசேகரன் சொன்ன	வெற்றியையுடைய வேலாயுதத்தையும் சேனையையுமுடையவரான குலசேகரர் அருளிச்செய்த
நல் தமிழ் பத்தும்	நல்ல தமிழ்ப்பாடல்கள் பத்தையும்
வல்லார்	ஓதவல்லவர்கள்
நரகம் நண்ணார்	(கொடிய பாவங்கள் செய்திருந்தாலும்) நரகத்திற் சேரமாட்டார்கள்.

அடிவரவு:—தருக் கண்டார் மீனுக்கு வாளால் வெங்கட்டின் செந்தழல் எத்தனை தொக்கு மின்னை வித்து ஏர்.

க. தருதுயரம். தாயினுடைய ஸ்தானத்தில் எம்பெருமானையும், குழந்தையினுடைய ஸ்தானத்தில் தம்மையும் வைத்துக் கூறியதனால் பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்குமுள்ள ஸம்பந்தம் தாய்க்கும் குழந்தைக்குமுள்ள உறவுமுறை போன்றதென விளங்கும்; அதாவது பிராணிகட்கெல்லாம் படைத்துக் காப்பவன் எம்பெருமானே என்பது.

உ. கண்டாரிகழ்வன. கணவன் ஸ்தானத்தில் எம்பெருமானையும் பத்னி ஸ்தானத்தில் தம்மையும் வைத்துக் கூறியதனால், பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கு முள்ள ஸம்பந்தம் கணவனுக்கும் மனைவிக்கு முள்ள தொடர்பு போன்றதெனத் தோன்றும்; அதாவது பரமாத்மாவினது தலைமையும் ஜீவாத்மாவினது அடிமையும், ஜீவாத்மா பரமாத்மாவுக்காக உரியதாயிருத்தலையும், ஜீவாத்மா பரமாத்மாவின் ஸம்ச்லேஷத்தால் இன்பத்தையும் விச்லேஷத்தால் துன்பத்தையும் அடைதலும், பரமாத்மாவையே ஜீவாத்மா காணவும் விரும்புதலும் அநுபவித்து ஆனந்தித்தலும் முதலியன.

ங. மீனோக்கு நீள்வயல். எம்பெருமானை அரசன் ஸ்தானத்திலும் தம்மைக் குடிகள் ஸ்தானத்திலும் வைத்துக் கூறியதனால், பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கு முள்ள ஸம்பந்தம் அரசனுக்கும் பிரஜைகளுக்கு முள்ள ஸம்பந்தம் போன்றதென விளங்கும். அதாவது—ரக்ஷ்ய ரக்ஷகபாவம்: அவன் காப்பவனாகவும் இவன் காக்கப்படுமவனாகவு மிருத்தல்.

ச. வாளாலறுத்து. வைத்தியன் ஸ்தானத்தில் எம்பெருமானையும் ரோகியின் ஸ்தானத்தில் தம்மையும் வைத்துக் கூறியதனால், பரமாத்மா ஜீவாத்மாவுக்கு நன்மைசெய்பவனேயென்பதும், ஜீவாத்மா பரமாத்மாவினிடத்து நம்பிக்கை கொள்ளவேண்டியவனென்பதும் தெளிவாம்.

ரு. வெங்கண் திண்களிறு. மரக்கலத்தின் ஸ்தானத்தில் எம்பெருமானையும் பறவையின் ஸ்தானத்தில் தம்மையும் வைத்துக் கூறியதனால், ஜீவாத்மாவுக்குப் பரமாத்மாவையின்றி அவலம்பமில்லையென்பதும் பரமாத்மா ஜீவாத்மாவுக்கு ஆதாரமாதலும் வெளியாம்.

சா. செந்தழலே வந்து. ஸூர்யன் ஸ்தானத்தில் எம்பெருமானையும் தாமரையின் ஸ்தானத்தில் தம்மையும் வைத்துக் கூறியதனால், பரமாத்மா இன்பத்திற்குரியவனென்பதும் ஜீவாத்மா இன்ப மநுபவிப்பவனென்பதும் விளங்கும். இதில், இரண்டாவது பாசுரத்திற் காட்டியது போன்ற காமுக காமினீ பாவம் தொனிக்கும்.

எ. எத்தனையும் வான்மறந்த. கார்மேகத்தின் ஸ்தானத்தில் எம்பெருமானையும் பயிரின் ஸ்தானத்தில் தம்மையும் வைத்துக் கூறியதனால், உலகத்து உயிர்கட்கெல்லாம் ஜீவனாதாரம் பரமாத்மாவே என்று அறியலாம்.

அ. தொக்கிலங்கியாறு. கடலின் ஸ்தானத்தில் எம்பெருமானையும் நதியின் ஸ்தானத்தில் தம்மையும் வைத்துக் கூறியதனால், பரமாத்மாவினது பெருமையும் ஜீவாத்மாவினது சிறுமையும், முடிவில் ஜீவாத்மா பரமாத்மாவை அடைதலும் புலனாம். இதிலும் காமுக காமினீ பாவம் தொனிக்கும்.

கூ. நின்னையே தான் வேண்டி. செல்வத்துக்கு உரியவனுடைய ஸ்தானத்தில் எம்பெருமானையும் செல்வத்தின் ஸ்தானத்தில் தம்மையும் வைத்துக் கூறியதனால், ஜீவாத்மா பரமாத்மாவின் உடைமை என்பது புலப்படும். [சேஷசேஷிபாவ ஸம்பந்தம்.]

௰. வித்துவக்கோட்டம்மா. இவ்வாறு ஆழ்வார் தமது குறைகளை எம்பெருமான் பக்கலிலே ஒருமுறைக்கு ஒன்பதுமுறை விண்ணப்பஞ் செய்ததனால் அவனுக்கு ஆழ்வாரிடம் உண்டான கருணையே பெருக்கு அவ்வாழ்வாரது அருளிச்செயல்களில் ஆழ்வாரையுஞ் செல்லுமென்பது இப்பாசுரத்தில் அமையும்.

ஐந்தாந்திருமொழி உரை முற்றிற்று.

பெருமாள்திருமொழி—ஏர்மலர்ப்பூங்குழல்.

பிரணய ரோஷத்தோடே கோபிகள் கண்ணபிரானை வெறுத்துரைத்த பாசுரம்.

698 ஏர்மலர்ப்பூங்குழலாயர்மாதர் எனைப்பலருள்ளவிவ்வூரில் * உன்றன்
மார்வுதழுவுதற்காசையின்மை அறிந்தறிந்தேயுன்றன்பொய்யைக்கேட்டு *
கூர்மழைபோற்பனிக்கூதலெய்திக் கூசிநடுங்கியமுனையாற்றில் *
வார்மணற்குன்றிற்புலரநின்றேன் வாசுதேவாவுன்வரவுபார்த்தே. (க)

வாசுதேவா	கண்ணபிரானே!		(அவர்கள் [illegible])
ஏர் மலர் பூ குழல் ஆயர் மாதர்	அழகிய புஷ்பங்களை அணிந்த [illegible] இடைப்பெண்கள்	கூர் மழை போல் பனிக்கூதல் எய்தி	மிக்க மழைபோலப் பெய்கிற பனியாலுண்டான குளிரிலே அகப்பட்டு
எனை பலர் உள்ள	எத்தனையோ பேர்களிருக்கும்	கூசி	(ஊர் பார்த்து விடுமென்று) கூச்சமடைந்து
இ ஊரில்	இந்தத் திருவாய்ப்பாடியில்	நடுங்கி	நடுக்கங்கொண்டு
உன்றன் மார்வு தழுவுதற்கு	உன்னுடைய மார்போடு அணைவதற்கு	யமுனை ஆற்றில்	யமுனாநதியில்
ஆசை இன்மை அறிந்து அறிந்தே	ஆசை யின்மையை நன்றாக அறிந்து வைத்தும்	வார் மணல் குன்றில்	பெரிய பெரிய மணற் குன்றிலே
உன்றன்	உன்னுடைய	உன் வரவு பார்த்து	உன் வரவை எதிர்பார்த்துக் கொண்டு
பொய்யை கேட்டு	பொய்யான வார்த்தைகளைக் கேட்டு	புலர நின்றேன்	பொழுது விடியுமளவும் (அங்கே யே) காத்து நின்றேன்.

* * * கண்ணபிரான் ஒரு பெண்பிள்ளையை நோக்கி 'நீ யமுனையாற்றின் மணற்குன்றிலே போய் நில், நான் அங்கே வருகிறேன்' என்று சொல்லிவிட, அப்படியே அவள் அங்கே போய் விடியுமளவும் நின்று அவன் வரக்காணாமல் வருத்தத்தோடு மீண்டுவந்து, மற்றொரு நாள் அவனைக் கண்டபோது ப்ரணய ரோஷத்தோடே சொல்லுகிற பாசுரமாயிருக்கிறது இப்பாட்டு. அப்படியாகவே உன் பொய்யைக்கேட்டு மோசம்போனேனே என்கிறாள். [வாசு தேவா [] [illegible] [illegible] [illegible] என்ற குறிப்பு. புலர்தல்—பொழுது விடிதல். ()

699 கெண்டையொண்கண்மடவாளொருத்தி கீழையகத்துத்தயிர்கடையக்
கண்டு * ஒல்லைநானுங்கடைவனென்று கள்ளவிழியைவிழித்துப்புக்கு *
வண்டமர்பூங்குழல்தாழ்ந்துலாவ வாண்முகம்வேர்ப்பச்செவ்வாய்துடிப்ப *
தண்டயிர்நீகடைந்திட்டவண்ணம் தாமோதரா! மெய்யறிவன்நானே. (உ)

தாமோதரா	கண்ணபிரானே!	ஒல்லை	சீக்கிரமாக (உன் [illegible])
கீழை அகத்து	(என் வீட்டுக்குக்) கிழக்கிலுள்ள வீட்டில்	நானும் கடைவன் என்று	[illegible] என்று (வாய் சொல்லி)
கெண்டை ஒண் கண்	கயல் போன்று அழகிய கண்களையுடையவளான		
மடவாள் ஒருத்தி	ஒரு பெண்ணானவள்	கள்ள விழியை விழித்து	திருட்டுப்பார்வை பார்த்து
தயிர் கடைய கண்டு	(தனியே) தயிர்கடையா நிற்பதைக் கண்டு ([illegible])	புக்கு	(அவளருகே) சென்று சேர்ந்த
		வண்டு அமர் பூ குழல்	வண்டுகள் படிந்த புஷ்பங்களை அணிந்த மயிர் முடியானது

தாழ்ந்து உலவ	அவிழ்ந்து அசையும்படியாகவும்	தண் தயிர்	குளிர்ந்த தயிரை
வாள் முகம் வேர்ப்ப	ஒளிபொருந்திய முகமானது வேர்க்கும்படியாகவும்	நீ கடைந்திட்ட வண்ணம்	நீ கடைந்தபடியை
செவ் வாய் துடிப்ப	சிவந்த அதரமானது துடிக்கும்படியாகவும்	தான் மெய் அறிவன்	நான் மெய்யே அறிவேன்.

* * * வேறொரு ஆய்ச்சியின் வார்த்தை இது. என் அகத்திற்குக் கீழ்ப்பக்கத்து அகத்திலிருப்பாளொரு பெண்பிள்ளையானவள் தனியேயிருந்து தயிர் கடையா நிற்கையில் அது கண்ட நீ "ஸஹாயமாகப் பெறுவேன்" என உரைத்து அவளருகில் ஓடிச்சென்று புகுந்து "அம்மா! நீ தனியாகத் தயிர்கடைந்தால் ஒருநாளும் வெண்ணெய் புறப்படமாட்டாது; நானும் ஒருதலைபற்றிக் கடைந்தால் தான் விரைவில் வெண்ணெய் திரளும்" என்று வாயாற் சொல்லி, உள்ளே வேறு நினைவு இருக்கும்படி தோன்றக் கள்ளவிழி விழித்து, மயிர்முடி அவிழ்ந்து அலையும்படியாகவும், தாமரையிலே முத்துப் படிந்தாற்போலே ஒளிபொருந்திய முகம் வேர்க்கும்படியாகவும், அதரம் துடிக்கும்படியாகவும் அவளோடேகூடி நீ தயிர்கடைந்த வகை எனக்குத் தெரியுமப்பா! என்கிறாள். 'இன்னமும் அங்கேயே தயிர்கடையப்போ; இங்கே உனக்கென்ன பணி?' என்ற ஊடல் உள்ளுறை. (உ)

700 கருமலர்க்கூந்தலொருத்திதன்னைக் கடைக்கணித்தாங்கேயொருத்திதன்பால் *
மருவிமனம்வைத்துமற்றொருத்திக்குரைத்து ஒருபேதைக்குப்பொய்குறித்து *
புரிகுழல்மங்கையொருத்திதன்னைப்புணர்தி அவளுக்கும்மெய்யனல்லை *
மருதிறுத்தாயுன்வளர்த்தியூடே வளர்கின்றதாலுன்றன்மாயைதானே. (௩)

மலர் கரு கூந்தல்	புஷ்பங்களை அணிந்துள்ள கறுத்த மயிர்முடியையுடையவளான	புரி குழல் மங்கை ஒருத்தி தன்னை	நுனி குழன்று சுருண்ட கூந்தலையுடையவளான ஒரு இளம் பெண்ணோடு
ஒருத்தி தன்னை	ஒரு பெண்பிள்ளையை	புணர்தி	கலவி செய்யாநின்றாய்;
கடைக் கணித்து	கடைக்கண்ணால் பார்த்து விட்டு	அவளுக்கும்	அந்தப் பெண்ணுக்கும்
ஆங்கே	அப்படியிருக்கச் செய்தே.	மெய்யன் அல்லை	பொய்யனாயிராநின்றாய்;
ஒருத்திதன் பால் மனம் மருவி வைத்து	வேறொரு பெண்பிள்ளையிடத்தில் மனதைப் பொருந்தச் செய்து. (அவளையும் விட்டு)	மருது இறுத்தாய்	இரட்டை மருதமரங்களை முறித்துத்தள்ளினவனே!
மற்ற ஒருத்திக்கு	வேறொரு பெண்ணினிடத்தில்	உன் வளர்த்தியூடே	நீ வளர்வதோடு கூடவே
உரைத்து	('உனக்குநான் அடியேன்') என்று சொல்லிவைத்து.	உன்தன் மாயை	உன்னுடைய கள்ளத்தனமும்
ஒரு பேதைக்கு	வேறொரு பெண்ணுக்கு	வளர்கின்றது	வளர்ந்து வாராநின்றது;
பொய் குறித்து	(சங்கேதத்துக்காகப்) பொய்யாகவே (ஒரு ஏகாந்தஸ்தலத்தைக்) குறிப்பிட்டுவைத்து. (ஆக இத்தனை பேரையும் ஏமாற்றி விட்டு)	ஆல்	அந்தோ!

* * * இங்கே "மருதிறுத்தாய்!" என விளித்ததனால், நீ பருவம் நிரம்புவதற்கு முன்னமே நீண்டமருதுகளைக் கொன்றவனாதலால் உன்னைக் கிட்ட நான் அஞ்சாநின்றேன் என்று குறிப்பிட்டவாறு தோன்றும். (௩)

701 தாய்முலைப்பாலிலமுதிருக்கத் தவழ்ந்து தளர்நடையிட்டுச்சென்று *
பேய்முலைவாய்வைத்துநஞ்சையுண்டு பித்தனென்றே பிறரேசநின்றாய் *
ஆய்மிகுகாதலோடியானிருப்ப யான்விடவந்த வென்றூதியோடே *
நீமிகுபோகத்தைநன்குகந்தாய் அதுவுமுன்கோரம்புக்கேற்குமன்றே. (௪)

[illegible]

702 மின்னொத்த நுண்ணிடையாளைக் கொண்டு வீங்கிருள்வாயென்றன் வீதியூடே *
பொன்னொத்த வாடை குக்கூடலிட்டுப் போகின்றபோது நான் கண்டுநின்றேன் *
கண்ணுற்றவளை நீ கண்ணாலிட்டுக் கைவிளிக்கின்றதும் கண்டேநின்றேன் *
என்னுக்கவளைவிட்டிங்கு வந்தாய் இன்னமங்கே நட நம்பி ! நீயே. (௫)

[illegible]

● ● ● [illegible] (௫)

703 மற்பொருதோளுடை வாசுதேவா வல்வினையேன் துயில்கொண்டவாறே *
இற்றையிரவிடை யேமத்தென்னை இன்னணைமேலிட்டகன்று நீபோய் *
அற்றையிரவுமோர் பிற்றைநாளும் அரிவையரோடு மணைந்துவந்தாய் *
எற்றுக்கு நீயென் மருங்கில்வந்தாய் எம்பெருமான் ! நீயெழுந்தருளே. (௬)

மல் பொரு தோள் உடை வாசுதேவா	மல்லரோடு போர்செய்த தோள் வலியுடைய கண்ணபிரானே!
வல்வினையேன்	மஹாபாவியான நான்
துயில் கொண்டவாறே	தூங்குவதற்கு ஆரம்பித்தவுடனே
இற்றை இரவு இடை ஏமத்து	அன்றிரவு நடுச்சாமத்திலே
இன் அணைமேல்	இனிய படுக்கையிலே
என்னை இட்டு	என்னைப் படுக்கவிட்டு
நீ அகன்று போய்	நீ விலகிப்போய்
அற்றை இரவும்	([illegible]) அன்றிரவும்
ஓர் பிற்றைநாளும்	அதற்கு மறுநாளும்
அரிவையரோடும்	(மற்றைப்) பெண்களோடும்
அணைந்து வந்தாய்	கலவிசெய்து வந்தாய்;
நீ	இப்படிப்பட்ட நீ,
என் மருங்கில் எற்றுக்கு வந்தாய்	என்னருகில் எதுக்காக வந்தாய்?
எம்பெருமான்	என் ஸ்வாமியே!
நீ எழுந்தருள்	நீ (அவர்களிடமே) போகக்கடவை.

*** வேறொரு பெண்மணியின் பேச்சு இது. மல்லர்களோடு யுத்தஞ்செய்யக் கற்றுப்போயன், நீ என்னோடும் சருக்காரமாதுபயம் பண்ணக் கற்றிலையோ! என்ற உபாலம்பம் தோன்ற "மற்பொரு தோளுடை வாசுதேவா!" என விளிக்கின்றனள். வல்வினையேன் = நீ என்னை நாத்திலையே விரும்பி மற்றையோரைக் கண்ணெடுத்துப் பாராமலிருப்பதற்குறுப்பான பாக்கியமற்ற நான், என்பது கருத்து. இரண்டாமடியில், "இற்றையிரவிடை" என்றே பாடம் வெளியிலும் "அற்றை யிரவிடை" என்ற பாடமே வியாக்கியானத்திற்கும் பொருட்சேர்த்திக்கும் தகும் என்பர் பெரியோர். (௬)

704 பையரவின்னணைப்பள்ளியினாய் பண்டையோமல்லோம்நாம் * நீயுகக்கும்
மையரியொண்கண்ணினாருமல்லோம் வைகியெஞ்சேரிவரவொழிநீ *
செய்யவுடையுந்திருமுகமும் செங்கனிவாயுங்குழலுங்கண்டு *
பொய்யொருநாள்பட்டதேயமையும் புள்ளுவம்பேசாதேபோகுநம்பீ ! (௭)

பை அரவு இன் அணை பள்ளியினாய்	படங்களையுடைய இனிய சேஷசயனத்திலே பள்ளிகொள்பவனே!
நம்பீ	பூர்ணனானவனே!
நாம்	நாங்கள்
பண்டையோம் அல்லோம்	உன் வலைப்பேச்சுகளிலே அகப்படுவதற்கு பழையபடி ஏமாந்தவர்களல்லோம்
நீ உகக்கும்	நீ விரும்பத்தக்கவர்களாய்
மை	மையணிந்து
அரி ஒண்	மான் போன்றுமே
கண்ணினாரும் அல்லோம்	கண்படைத்தவர்களான பெண்களும் அல்லோம்;
வைகி	காலவிளம்பஞ் செய்து
எம் சேரி	எமது அகத்துக்கு
வரவு ஒழி நீ	வருவதை இனி நீ விட்டுவிடு
செய்ய உடையும்	அழகிய பீதாம்பரத்தையும்
திருமுகமும்	திருமுகமண்டலத்தையும்
செம் கனி வாயும்	சிவந்த கோவைக்கனி போன்ற அதரத்தையும்
குழலும்	கூந்தல் முடியையும்
கண்டு	பார்த்து (அவற்றில் ஈடுபட்டு)
பொய்	உன் பொய்வார்த்தைகளில்
ஒரு நாள் பட்டதே அமையும்	ஒருநாள் பட்டபாடு போதுமே;
புள்ளுவம்	க்ருத்ரிமமான வார்த்தைகளை
பேசாதே	(மறுபடியும்) சொல்லாமல்
போகு	(உன் தேவிமார்களிடத்தே) போய்ச்சேர்.

*** வைகி என்றதன் கருத்தையாதெனின்;—உன்னிருப்பிடத்திற்கு மற்றும் எத்தனையோ பேர் வருகிறபடியாலே காலமொருவன் வந்தாலென்? என்னையேயன் போகச்சொல்லுகிறாய்?' என்று கண்ணபிரான் கேட்க; 'எல்லாரும் வரும்போதில் உன்னை நான் வரவேண்டாமென்று சொல்லவில்லை; இறக்கு அதிகாலை கண்டபடி அமைத்திலே வருவதைத் தான் மறுக்கிறேன்' என்கிறாள் என்க. பிறகு கண்ணபிரான் "மகளே! இதற்குமுன் சொன்ன வார்த்தைகளை இன்று புதிதாகச்சொல்லுகிறாயே! என்னை வெறுப்பாளிசெய்து விரைந்து விட்டாயே!" என்ன; உன் கள்ளச்செயல்களையும் க்ருத்ரிமவார்த்தைகளையும் முன்பு நம்பிப் பட்டதுபோதும்; இனி வேண்டா என்கிறாள். புள்ளுவம்-வஞ்சனை. (௭)

705 என்னை வருகவெனக் குறித்திட்டு இனமலர் முல்லையின் பந்தர் நீழல் *
மன்னி அவளைப் புணரப் புக்கு மற்றென்னைக் கண்டுழறா நெகிழ்ந்தாய் *
பொன்னிறவாடையைக் கையில் தாங்கிப் பொய்யச்சம் காட்டி நீ போதியேலும் *
இன்னமென் கையகத்தீங்கொருநாள் வருதியேலென் சினம் தீர்வன்நானே. (௮)

என்னை	என்னை	கையில் தாங்கி	கையிலே தாங்கிக்கொண்டு
வருக என	(இன்னவிடத்திற்கு) வா என்று	பொய்	பொய்யாக
குறித்திட்டு	சங்கேதம் பண்ணிவைத்து விட்டு	அச்சம் காட்டி	நீ என்னிடம் அஞ்சினதாக நான் பார்க்கும்படி செய்துகொண்டு
இனம் மலர் முல்லையின் பந்தர் நீழல்	நிறைந்த மலர்களையுடைய முல்லைப்பந்தலின் நிழலிலே	நீ போதி எனும்	நீ (என்கைக்கு அகப்படாமல்) நழுவிப்போன போதிலும்
மன்னி அவளை	(வெகுகாலமாய்ப்) பொருந்தி நின்ற ஒருத்தியை	இன்னம்	இனி
புணர புக்கு	கலவி செய்யப் போய்	ஈங்கு	இங்கே
மற்று என்னை கண்டு	பிறகு என்னைப் பார்த்து	என் கை அகத்து	என்னிடத்தில்
உழறு	[illegible]	ஒரு நாள் வருதியேல்	ஒருநாளாகிலும் வருவாயாகில்
நெகிழ்ந்தாய்	அப்பாலே நழுவினாய்;		(அப்போது)
பொன் நிறம் ஆடையை	பீதாம்பரத்தை	நான் என் சினம் தீர்வன்	நான் என் கோபத்தைத் தீர்த்துக் கொள்வேன்.

* * * [என்சினம் தீர்வன்நானே] என்கிறவிடத்தைக் கோயிலில் திருவத்யயனோத்ஸவத்தில் 'உப்பிந்த பிள்ளை' என்பரொரு அரையர் அபிநயிக்கும்போது, கையாலே அடிப்பதும் காலாலே துகைப்பதுமாய் அபிநயித்தார்; அதாவது—மறுபடியும் நீ என்கையில் அகப்படும் போது உன்னை நான் கையாலடித்தும் காலால் துகைத்தும் என் கோபத்தைத் தணித்துக் கொள்வேன் என்பதாகக் கருத்தையிட்டார். அப்போது கோஷ்டியிலெழுந்தருளியிருந்த எம்பார் இங்ஙனே அரையர் காட்டிய அபிநயத்தைக் கடாக்ஷித்து அரையர்க்கு ஈதென்ன போராதென்று திருவுள்ளம்பற்றி, 'கெடுவாய்! அப்படி அவன் செய்தானாகில் மகாபாபமாகிறது' என்றிருக்கிற கண்ணனுக்கு அது வருத்தமோ? கெட்டீரோ! இது அவனுக்கு அநாதரமே பாரும்; ஆகையால் அங்ஙனன்று கருத்து; முகம்கொடுக்காமல் முகத்தை மாறவைத்து என் கோபத்தைத் தணித்துக்கொள்வேன் என்றால் கருத்துத் தோன்ற, கையிட்டு முகத்தை மறைத்துத் திரும்பவைத்தருளிக் காட்டவேணுமென்று தாம் அவ்வாறு அபிநயித்துக்காட்டினார் என்று ப்ரஸித்தம். (௮)

706 மங்கலநல்வனமாலைமார்பில் இலங்க மயில்தழைப்பீலிசூடி *
பொங்கிளவாடை அரையில்சாத்திப் பூங்கொத்துக்காதில் புணரப்பெய்து *
கொங்குநறுங்குழலார்களோடு குழைந்துகுழலினிதூதிவந்தாய் *
எங்களுக்கேயொருநாள்வந்தூத உன்குழலின்னிசைபோதராதே. (௯)

மங்கலம்	மங்களகரமாய்	அரையில் சாத்தி	அரையிலே சாத்திக்கொண்டும்
நல்	விலக்ஷணமான	பூ கொத்து	பூங்கொத்துக்களை
வனமாலை	வனமாலையானது	காதில்	காதிலே
மார்பில்	மார்விலே	புணர பெய்து	மிகவும் பொருந்த அணிந்து கொண்டும்
இலங்க	பிரகாசிக்க,	கொங்கு நறு குழலார்களோடு	தேன்மணம் வீசுகின்ற கூந்தலையுடைய பெண்களோடு
மயில் தழைப்பீலி	மயிலிறகுகளை		
சூடி	சூடிக்கொண்டும்	குழைந்து	[illegible]
பொங்கு இள ஆடை	பளபளவென்ற மெல்லிய ஆடையை	குழல்	புல்லாங்குழலை

[illegible]	[illegible]	[illegible]	[illegible]
[illegible]	[illegible]	[illegible]	[illegible]
[illegible]	[illegible]	[illegible]	[illegible]

707 அல்லிமலர்த்திருமங்கைகேள்வன்றன்னை நயந்திளையவாய்ச்சியர்கள் *
எல்லிப்பொழுதினிலேமத்தூடி யெள்கியுரைத்தவுரையதனை *
கொல்லிநகர்க்கிறைகூடற்கோமான் குலசேகரனின்னிசையில்மேவி *
சொல்லியவின்றமிழ்மாலைபத்துஞ் சொல்லவல்லார்க்கில்லைதுன்பந்தானே. (௰)

இள ஆய்ச்சியர்கள்	இளமை தங்கிய இடைப்பெண்கள்	கூடல் கோமான்	மதுரைக்கு அரசனுமான
அல்லி மலர் திருமங்கை கேள்வன் தன்னை நயந்து	தாமரைப்பூவில் பிறந்த பிராட்டிக்குக் கொழுநனான கண்ணனை ஆசைப்பட்டு	குலசேகரன்	குலசேகராழ்வார்
எல்லிப் பொழுதினில்	இராத்திரிக் காலத்திலே	இன் இசையில் மேவி	இனிய பண்ணிலே பொருந்த
ஏமத்து	[illegible]	சொல்லிய	அருளிச்செய்த
ஊடி	பிணங்கி	இன் தமிழ்	பரமபோக்யமான தமிழ்ப்பாசுரங்களாலான
எள்கி	ஈடுபட்டு	மாலை	மாலையாகிய
உரைத்த	சொன்ன	பத்தும்	இப்பத்துப் பாசுரங்களையும்
உரை அதனை	பாசுரங்களை (உட்சொல்லை)	சொல்ல வல்லார்க்கு	ஓதவல்லவர்களுக்கு
கொல்லி நகர்க்கு இறை	கொல்லி என்னும் நகருக்குத் தலைவனும்	துன்பம் இல்லை	[illegible] துன்பமும் இல்லை.

அடிவரவு—ஏர் மெள்ள கரு தாம் மின் மற்பொரு வையாயனின் வண்ண மல்லல் அல்லி ஆலை. (௰)

ஸ்ரீ:

ஏழாந்திருமொழி—ஆலை நீள் கரும்பு.

கண்ணபிரானுடைய குழந்தைத் திருவிளையாடல்களை யசோதை கண்டு களித்தாற்போலத் தான் களிக்கப்பெறாமல் இழந்த தேவகியார் [illegible] கண்டபொழுது [illegible] பேசின பேச்சுக்களைச் சொல்லுகிறது இத்திருமொழி.

708 ஆலைநீள்கரும்பன்னவன்தாலோ அம்புயத்தடங்கண்ணினன்தாலோ *
வேலைநீர்நிறத்தன்னவன்தாலோ வேழப்போதகமன்னவன்தாலோ *
ஏலவார்குழலென்மகன்தாலோ என்றென்றுன்னையென்வாயிடைநிறைய *
தாலொலித்திடுந்திருவினையில்லாத் தாயரிற்கடையாயினதாயே. (௧)

ஆலை நீள் கரும்பு அன்னவன்	ஆலையிலிட்டு ஆட்டக்கூடிய நீண்ட கரும்பு போன்றவனே!	ஏல வார் குழல்	பரிமளம் மிக்கு நீண்ட திருக்குழலையுடைய
தாலோ	(உனக்குத்) தாலாட்டு	என் மகன்	என்மகனே
அம்புயம்	தாமரைப்பூ போன்ற	தாலோ	தாலேலோ!
தடம் கண்ணினன்	விசாலமான திருக்கண்களை யுடையவனே!	என்று என்று	இப்படி பலகாலும் சொல்லி
தாலோ	தாலேலோ!	உன்னை என் வாயிடை நிறைய	[illegible]
வேலை நீர் நிறத்து அன்னவன்	கடலின் நீர் நிறம் போன்ற நிறமுடையவனே!	தால் ஒலித்திடும் திருவினை இல்லா தாயரில்	[illegible]
தாலோ	தாலேலோ!	கடை ஆயின தாய்	கடைப்பட்ட தாயானேன் (என்கிறாள் தேவகி.)
வேழப் போதகம் அன்னவன்	யானைக்குட்டி போன்றவனே!		
தாலோ	தாலேலோ!		

* * *—பன்னிரண்டு மாதம் உன்னை வயிற்றிற் சுமந்து பெற்ற நான் உடனே திரு வாய்ப்பாடிக்குப் போக்கிவிட்டேனாதலால், உன்னைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுதல் முதலிய ஆனந்தானுபவங்களை யசோதை பெற்றாளே யன்றி நான் பெறுதொழிந்தேன், பாவியே னிழந் தேன், பிள்ளையைப் பெற்று ஆனந்தானுபவம் பண்ணப்பெறாத தாழ்ந்துபட்டவர்களான தாய் மாரில் அந்தோ! நான் கடைகெட்ட தாயாகிவிட்டேனே! என்று தேவகி தன் வயிற்றெரிச் சலைக் கண்ணபிரானை நோக்கிக் கூறுகின்றனள் என்க.

"ஆலைநீள் கரும்பன்னவன்" என்று தொடங்கி "ஏலவார் குழலென்மகன்" என்றளவு முன்ன ஐந்து விளிகளும் அன்னை விளி. குழந்தையைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டும் போது தாய்மார் முதலியோர் பாராட்டிச் சொல்லும் பாசுரம் இவை. ஆலையிலிட்டு ஆடத் தகுந்த கரும்பு என்றது—கனிந்து முற்றின ரஸம் நிரம்பிய கரும்பு என்றவாறு; அதுபோன்ற வனே! என்றது—"ரஸோவைஸ:" என்று உபநிஷத்தில் ஓதியுள்ளபடி—இன்சுவையே உரு வெடுத்து வந்தாற்போலுள்ளவனே! என்றபடி. தாலேலோ—தால்—நாக்கு; குழந்தைகளை உறங்கப் பண்ணுவதற்காகப் பெண்கள் நாவை அசைத்துச் சொல்லும் சொல். (க)

709 வடிக்கொளஞ்சனமெழுதுசெம்மலர்க்கண் மருவிமேலினிதொன்றினைநோக்கி *
முடக்கிச்சேவடிமலர்ச்சிறுகருந்தாள் பொலியுநீர்முகிற்குழவியேபோல *
அடக்கியாரச்செஞ்சிறுவிரலனைத்தும் அங்கையோடணைந்தானையிற்கிடந்த *
கிடக்கைகண்டிடப்பெற்றிலேனந்தோ கேசவாகெடுவேன்கெடுவேனே. (உ)

வடி கொள்	கூர்மையை யுடைத்தாய்	நீர் பொலியும்	(கருத்தரையும் பருவமாய்) நீர் மிகப்பெற்ற
அஞ்சனம் எழுது	மையிடப் பெற்றதாய்	முகில் குழவியே போல	மேகக்குட்டி போல.
செம் மலர்	செந்தாமரை மலரை யொத்ததான	செம் சிறு விரல் அனைத்தும்	அழகிய சிறுத்த திருவிரல்களெல்லாவற்றையும்
கண்	கண்களாலே	அம் கையோடு	உள்ளங்கையிலே
மேல் ஒன்றினை	மேற்கட்டியிலே தொங்கவிட்டிருக்கும் ஏதோ ஒருவஸ்துவை	அடக்கி ஆர	அடக்கும்படி
இனிது	இனிதாக	அணைந்து	முடக்கிப் பிடித்துக்கொண்டும்
மருவி நோக்கி	பொருந்தப் பார்த்துக்கொண்டும்;	ஆனையின் கிடந்த கிடக்கை	ஆனை கிடக்குமாபோலே பள்ளி கொண்டருளும்படியை
கரு தாள்	கறுத்தபுறத்தாளை யுடையதும்	கண்டிட பெற்றிலேன்	கண்டு அநுபவிக்கப் பெறாத பாவியானேன்;
மலர்	செந்தாமரை மலரையொத்ததும்	அந்தோ	ஐயோ!
சிறு	சிறுத்த	கேசவா	கண்ணபிரானே!
சே அடி	சிவந்த அடியையுடையது மான திருவடிகளை	கெடுவேன் கெடுவேன்	நன்று மநுபவிக்கப்பெறாத பெரும்பாவியானேன்.
முடக்கி	முடக்கிக்கொண்டும்		

* * * தாயாயிருந்து தாலாட்டும் பாக்கியத்தை மாத்திரமோபோ நானிழந்தது? நீ தொட்டிலிற் சாய்ந்திருக்குமழகை ஊர்ப்பெண்களெல்லாரும் திரண்டு வந்து கண்டு களித்துப் போனார்களே; அவர்களில் ஒருத்தியாயிருக்கவாவது நான் அவ்வழகைக் காணப்பெற்றேனோ? அக்கொடுமையன்றோ! ஐயோ! என்கிறாள். குழந்தைகள் தொட்டிலில் கிடக்கும்போது இருக் கக்கூடிய இயல்பைச் சொல்வன முன்னடிகளும். குழந்தைகள் தொட்டிலில் அண்ணாந்து பார்த்துக்கொண்டு கிடக்குமாதலால் வேறு விஷயமின்றி மேலே உற்றுநோக்குவதற்காகத் தொட்டிலின்மீது விசித்ரப்பட்டம் தொங்கவிட்டு வைப்பார்கள்; அதில் மிக அழகான ஒரு வஸ்துவை உற்றுநோக்கிக்கொண்டு களித்திருத்தல் குழந்தைகளின் இயல்பு; அதனைக்கூறுவது முதலடி. தொட்டிலில் கிடக்கும் விதம் சொல்லுகிறது மேல். மேன்புறம் கறுத்து உட்புறம்

சிவந்தன்ன திருவடிகளை மடக்கிக்கொண்டும், கைவிரல்களை மடக்கிக்கொண்டும், 'மொசைக் குட்டி கிடக்கிறதோ! ஆமைக்குட்டி கிடக்கிறதோ!' என்று வியக்கத்தக்கபடியாக நீ தொட்டிலில் சாய்ந்திருக்கும் போதை யழகை அநுபவிக்கப் பெறாது இழந்தேனே (௪.)

710 முந்தைநன்முறையன்புடைமகளிர் முறைமுறைதந்தம்குறங்கிடையிருத்தி *
எந்தையே! என்றன்குலப்பெருஞ்சுடரே எழுமுகில்கணத்தெழில்கவரேறே! *
உந்தையாவனென்றுரைப்பநின்செங்கேழ் விரல்களும் கடைக்கண்ணிணும்காட்ட *
நந்தன்பெற்றனன்நல்வினையில்லா நங்கள்கோன்வசுதேவன்பெற்றிலனே. (௫.)

அன்பு உடை	ப்ரீதியை யுடையவர்களான	உந்தை யாவன் என்று உரைப்ப	உன் தகப்பனார் யார்? (காட்டு) என்றவாறிலே
முந்தை நல் முறை மகளிர்	பரம்பரையாக வருகிற நல்ல உறவு முறையையுடைய பெண்கள்	நின்	உன்னுடைய
தம் தம் குறங்கிடை	தங்கள் தங்கள் துடைகளிலே	செம் கேழ் விரல்களும்	சிவந்து சிறந்த விரல்களும்
முறை முறை	க்ரமம் க்ரமமாக	கடை கண்ணிணும்	கடைக் கண்ணும்
இருத்தி	வைத்துக்கொண்டு	காட்ட	(இவனே என் தகப்பன் என்று) காட்ட, (அந்தப் பாக்யத்தை)
எந்தையே	"என் அப்பனே!	நந்தன் பெற்றனன்	நந்தகோபர் பெற்றார்;
என்றன் குலப் பெருஞ்சுடரே	எங்கள் குலத்துக்கும் பெருந்தொரு விளக்கானவனே!	நல் வினை இல்லா நங்கள் கோன்	பாக்யமில்லாதவர் என்று [illegible] யுடைய பர்த்தாவான
எழு முகில் கணத்து	([illegible]) மேலெழுகின்ற மேக ஸமூஹத்தினுடைய	வசுதேவன்	வஸுதேவர்
எழில் கவர்	அழகைக் கவர்ந்துகொண்ட	பெற்றிலன்	(நந்தகோபர் பெற்ற பாக்யத்தைப்) பெறவில்லை.
ஏறே	"காளைபோன்றவனே!" (என்றிப்படி பலவாறுஞ் சொல்லி)		

*** குழவியாயிருக்கும் ஒரு குழந்தை பிறந்தால் உறவினரெல்லாரும் வரிசை வரிசையாக வந்து குழந்தையை எடுத்துத் தம் தம் துடை மீது இட்டுக்கொண்டு, 'என் அப்பனே! என் குலவிளக்கே! என் கண்மணியே!' என்றிப்படி பலவாறும் புகழ்ந்து கூறி, 'என் செல்வமே! உன் தகப்பன் யார்? காட்டு பார்ப்போம்' என்று கேட்குமளவில் குழந்தை தன் விரலாலும் கடைக் கண்ணாலும் தன் தந்தையைக் காட்டுவது வழக்கம்; அவ்வாறு ஸ்ரீ க்ருஷ்ண பகவானைக் கேட்கும்போது, பெற்ற தகப்பனாகிய வஸுதேவரைக் காட்டவேண்டியது ப்ராப்தமாயிருக்கவும் பிறந்தவுடனே நந்தகோபர் மாளிகையிலேயே வளர்ந்து பற்றி அந்த நந்தகோபனை யன்றி வேறொருவரைத் தந்தையென்றறியாமையால் அவரையே தனக்குத் தந்தையாகக் காட்டினதாக வருகிறதென்றறிய வேணும், அந்தோ! பரமபாக்யசாலியான நந்தகோபர் கைப்பிடித்த பாக்யத்தாலே "இவன் என் தகப்பன்" என்று விரலாலும் கண்ணாலும் காட்டும்படியான அநுபவத்தை நந்தகோபன் பெற்றான்; பெரும் பாவியான என்னைக் கைப்பிடித்த கொடுமையாலே வஸுதேவன் இழந்தான்; என்று சொல்லி வயிறெரிகிறாள். (௫.)

711 களிநிலாவெழில்மதிப்புரைமுகமும் கண்ணனே! திண்கைமார்வும்திண்தோளும் *
தளிர்மலர்க்கருங்குழல்பிறையதுவும் தடங்கொள்தாமரைக்கண்களும்பொலிந்த *
இளமையின்பத்தையின்றென்றன்கண்ணால் பருகுவேற்கிவள்தாயெனநினைந்த *
அளவில்பிள்ளைமையின்பத்தையிழந்த பாவியேனெனதாவிநில்லாதே. (௬)

கண்ணனே	ஸ்ரீ க்ருஷ்ணனே!	எழில் மதி புரை முகமும்	பூர்ண சந்திரனை ஒத்த திருமுகமும்
களி நிலா	ஆனந்தத்தை விளைக்கும் நிலவையுடைய	திண் கை	திண்ணிய திருக்கைகளும்

மார்வும்	திருமார்பும்
நின் தோளும்	வலிமைபொருந்திய திருத்தோள்களும்
தாரின் மலர் கருகுழல்	தனிமையும் மலரையுமுடைத்தாய்க் கறுத்த திருக்குழற் கற்றையும்
பிறை அதுவும்	அஷ்டமி சந்திரன் போன்ற திருநெற்றியும்,
தடங் கேழ்	விசாலமான
தாமரை கண்களும்	தாமரைபோன்ற திருக்கண்களும் (ஆகிய இவை)
பொலிந்த இளமை இன்பத்தை	அழகுபெற்று விளங்கும்படியான யௌவனாவஸ்தையின் போக்யதையை
இன்று	இப்போது
என் தன் கண்ணினால்	என்னுடைய கண்ணாலே
பருகுவேற்கு	(நான்) அநுபவியாமலிருக்கும்
இவள் தாய் என நினைந்த	(இவள் என்னுடைய) தாய் என்று அபிமானிப்பதற்குத்தகுதியான
அருள்	தயைப்பருவத்தினுடைய
அரு இல் இன்பத்தை	அளவில்லாத ஆனந்தத்தை
இழந்த	அநுபவிக்கப்பெறாமல் இழந்த
பாவியேன் எனது	பாவியான என்னுடைய
ஆவி	உயிரானது
நில்லாது	தரித்து நிற்க வழியில்லையே.

** கண்ணபிரானே! செறிந்த கிரணங்களையுடைய பூர்ண சந்திரன் போன்ற திருமுகமும் நீண்டுயர்ந்த திருக்கைகளும் திருமார்பும் திருத்தோள்களும் திருக்குழலும் திருநெற்றியும் திருக்கண்களுமாகிய இவ்வவயவங்களின் சோபையானவை விளங்க நின்ற உனது யௌவன பருவத்தினழகை இப்போது நான் கண்ணாற் கண்டநுபவியாமலிருக்கின்றேன்; தாயாரொருத்தியைப்போன்றி வேறொருத்தியும் மறியாத இளம்பருவத்தை அநுபவிக்கப் பெரும்பேறுபெற்றேனே! என்று ஆதரவோடே என் நெஞ்சைக் கொள்ளைகொண்டிருப்பதனால் இப்போது அநுபவிக்கப் பெற்றது ஒரு பெருநாளைத் தோன்றாமல் கழிகிறதே என்றே புண்படுத்தா நின்றதென்கிறாள். (௫)

712 மருவுநின்திருநெற்றியிற்சுட்டியசைதர மணிவாயிடைமுத்தம்
தருதலும் * உன்றன் தாதையைப்போலும்வடிவுகண்டுகொண்டு உள்ளமுள்குளிர *
விரலைச்செஞ்சிறுவாயிடைச்சேர்த்து வெகுளியாய்நின்றுரைக்குமவ்வுரையும் *
திருவிலேனொன்றும்பெற்றிலேன் எல்லாம்தெய்வநங்கையசோதைபெற்றாளே. (௬)

நின் திரு நெற்றியில் மருவும் சுட்டி அசைதர	உன்னுடைய திருநெற்றியிலே பொருந்தியிருக்கிற சுட்டியானது அசையும்படி
மணி வாயிடை முத்தம் தருதலும்	அழகிய வாயினுண்டான முத்தத்தைக் கொடுப்ப தென்ன
உன் தன் தாதையை போலும்	உன்னுடைய தகப்பனாரைப் போன்ற
வடிவு	(உன்) வடிவழகை
கண்டுகொண்டு	(நான்) பார்த்து
உள்ளம் உள் குளிர	(என்) மனமானது உள்ளே குளிரும்படி
விரலை சேர்த்து	விரல்களை வைத்துக்கொண்டு
வெகுளியாய் நின்று உரைக்கும் அவ்வுரையும்	(நீ) சீற்றத்தோடே சொல்லுகிற மழலைச் சொற்களென்ன (ஆகிய இவற்றில்)
ஒன்றும்	ஒன்றையும்
திரு இலேன் பெற்றிலேன்	பாக்யமற்றவளான நான் அநுபவிக்கப் பெறவில்லை;
தெய்வம் நங்கை யசோதை	'தெய்வமாது' என்று சொல்லத்தக்கவளான யசோதைப் பிராட்டி
எல்லாம் பெற்றாளே	(அந்த பாலலீலைகளை) எல்லாவற்றையும் அநுபவிக்கப் பெற்றாளே.

செம் சிறு வாயிடை-சிவந்த சிறிய திருவாயிலே

** திருநெற்றியிலே கூடப்பிறந்தாற்போல அமர்ந்து விளங்கும் சுட்டியானது அசையும்படி நீ முத்தங்கொடுப்பதையும் இழந்தேன்; "நம் குழந்தையின் முகம் தகப்பனுடைய முகம்போலவே இருக்கிறது!" என்று சொல்லிக்கொண்டு உனது முகத்தைச் சந்தோஷமாகப் பார்த்து நிற்கும்போது, நீ விரல்களை வாயினுள்ளே வைத்துக்கொண்டு பரம்போக்யமாகச் சீற்றம் தோற்றச்சொல்லும் மழலைச் சொற்களையும் நான் கேட்கப்பெறாமல் இழந்தேன்; இழப்பதற்கு நானொருத்தி ஏற்பட்டாற்போலே அநுபவிப்பதற்கு யசோதைப் பிராட்டியென்பவளொருத்தி ஏற்பட்டாள், உன் லீலா ரஸங்களெல்லாவற்றையும் அவளே பெற்றனள் என்கிறாள். "முத்தம் தருதலும், உரைக்கும் அவ்வுரையும் ஒன்றும்

பெற்றிலேன்" என்று அந்வயம். வெகுளியாய் நின்று—சீதையாரென்று பேசுதல் குழந்தைகளின் இயல்பாம். யசோதை ஒருத்தி சேர்ந்தும் சேர்ந்ததே பாக்கியமெனவே கண்ண பிரானுடைய அதிமாநுஷ லீலைகளைக் கண்டு அநுபவிக்கப்பெற்றமை பற்றித் தெய்வநங்கை எனப்பட்டாள். (௨)

713 தண்ணந்தாமரைக்கண்ணனேகண்ணா தவழ்ந்தெழுந்துதளர்ந்ததோர்நடையால் *
மண்ணில்செம்பொடியாடிவந்து என்தன்மார்வில்மன்னிடப்பெற்றிலேனந்தோ! *
வண்ணச்செஞ்சிறுகைவிரலனைத்தும் வாரிவாய்க்கொண்டவடிசிலின்மிச்சல் *
உண்ணப்பெற்றிலேன் ஓ! கொடுவினையேன் என்னையென்செய்யப்பெற்றதெம்மோயே. (௩)

தண் அம் தாமரை கண்ணனே	குளிர்ந்த அழகிய தாமரை போன்ற திருக்கண்களை யுடையவனே	வண்ணம் செம் சிறு	அழகுபெற்றுச் சிவந்து சிறிதான
கண்ணா	கண்ணபிரானே!	கை விரல் அனைத்தும்	கைவிரல்களெல்லாவற்றாலும்
தவழ்ந்து	(நீ) தவழ்ந்துகொண்டு	வாரி	வாரிக்கொண்டு
எழுந்து	எழுந்திருந்து	வாய்க்கொண்ட	அமுது செய்த
தளர்ந்தது ஓர் நடையால்	தட்டுத்தடுமாறி நடப்பதான ஒரு நடையினால்	அடிசிலின்	ப்ரஸாதத்தினுடைய
செம் மண் பொடியில்	சிவந்த புழுதி மண்ணிலே	மிச்சில்	சேஷத்தை
ஆடி	விளையாடி	உண்ண பெற்றிலேன்	(நான்) உண்ணப் பெறவில்லை;
வந்து	(அக்கோலத்தோடே) வந்து	கொடு வினையேன்	(இவற்றையெல்லாம் நான் இழக்கும்படியான) மஹா பாபத்தைப் பண்ணினவேன்;
என் தன் மார்வில்	என்னுடைய மார்விலே	ஓ	ஐயோ!
மன்னிட பெற்றிலேன்	நீ அணையும்படியான பாக்கியத்தைப் பெற்றிலேன்;	எம் மோய்	என் தாயானவள்
அந்தோ	இந்த என்ன தௌர்ப்பாக்யமோ!	என்னை	என்னை
		என் செய்ய	எதுக்காக
		பெற்றது	பெற்றாளோ!

*** குளிர்ந்து அழகிய தாமரைப்பூப்போலே அலர்ந்த திருக்கண்களையுடைய கண்ணபிரானே! நீ செம்மண்ணிலே புழுதியளைந்து விளையாடும்போது தவழ்ந்து செல்வதனையும் தட்டுத் தடுமாறித் தளர்நடையின் றுவன்றிய மூன்றாவது நடப்பதனையும் புழுதி மண்ணை அளைந்த அக்கோலத்தோடே வந்து என் மார்பிலே கட்டிக்கொண்டு கிடக்கப்பெற்றிலேனே!; அழகிய திருவிரல்களாலும் ப்ரஸாதத்தை வாரி அமுது செய்யும்போது வாயது கையதாகவிருந்த ப்ரஸாதத்தையும் முன்னைப் பெற்றிலேனே!; ஆட்டின் கழுத்தில் முலை (அதர்) போலே என்னை என் தாய் வீணாகவேயன்றோ பெற்றொழிந்தாள். "செம்மண் பொடியில் தவழ்ந்து ஆடி, எழுந்து தளர்ந்ததோர் நடையால் வந்து என்றன் மார்வில் மன்னிடப் பெற்றிலேன்" என்று அந்வயித்துப் பொருள் கொள்ளுதல் சாலச்சிறக்கும். இப்பாட்டின் முன்னடிகட்கு

"மக்கள் மெய்தீண்டலுடற்கின்பம்" என்னுங் குறளையும், பின்னடிகட்கு
"அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள் சிறுகை யளாவிய கூழ்"

என்னுங் குறளையும் நோக்குக. (௩)

714 குழகனேயென்தன்கோமளப்பிள்ளாய் கோவிந்தாவென்குடங்கையில்மன்னி *
ஒழுகுபேரெழிலிளஞ்சிறுதளிர்போல் ஒருகையாலொருமுலைமுகம்நெருடா *
மழலைமென்னகையிடையிடையருளா வாயிலேமுலையிருக்கவென்முகத்தே *
எழில்கொள்நின்திருக்கண்ணிணைநோக்கந்தன்னையும் இழந்தேனிழந்தேனே. (௪)

குழகனே — எல்லாரோடும் கலக்கும் சீலமுடையவனே!
என் தன் கோமளப் பிள்ளாய் — என் வயிற்றில் பிறந்த அழகிய குழந்தாய்!
கோவிந்தா — கோவிந்தனே!
என் குடங்கையில் மன்னி — என்னுடைய குடங்கையிலே பொருந்தி யிருந்து
ஒழுகு பேர் எழில் — வெள்ளமிடுகின்ற மிக்க அழகையுடைத்தாயும்
இள சிறு தளிர் போல — மிகவும் இளையதான தளிர் போன்றதுமான
ஒரு கையால் — ஒரு திருக்கையாலே
ஒரு முலை முகம் — (என்னுடைய) ஒரு முலைக் காம்பை
நெருடா — நெருடிக்கொண்டு
முலை வாயிலே இருக்க — மற்றொரு முலையானது (உன்) வாயிலே இருக்க
இடை இடை — நடு நடுவே
என் முகத்தே — என் முகத்தை நோக்கி
மழலை மென் நகை அருளா — புன்சிரிப்பைச் செய்து கொண்டு
எழில் கொள் நின் திரு கண் இணை நோக்கம் தன்னையும் — அழகிய உன் இரண்டு கண்களாலும் பார்க்கிற பார்வையையும்
இழந்தேன் இழந்தேன் — நானோ இழந்தேனே!

"ஒரு முலையை வாய்மடுத்து ஒரு முலையை நெருடிக்கொண்டு, இரு முலையும் முறை முறையா யேங்கி யேங்கி யிருந்துணாயே" (பெரியாழ்வார் திருமொழி, ௨—௩—௩) என்று யசோதை கண்ணனின் சேஷ்டிதங்களைக் கண்டு அநுபவித்தாள் என்பதை அறிந்த தேவகி, அப்பாக்கியம் தனக்கு நேராமற் போனதைப்பற்றி வருந்துகின்றாள். நீ என் குடங்கையில் சாய்ந்துகொண்டு தளிரையொத்த (கையால்) ஒரு முலைக்காம்பை நெருடிக்கொண்டும் மற்றொரு முலையைத் திருப்பவளத்தில் வைத்துக்கொண்டும் புன்சிரிப்புடன் என் முகத்தைப் பார்க்கும் நோக்கத்தை அபாக்யையான இழந்தொழிந்தேனே! என்கிறாள்.

குழகன் —எல்லாரோடும் கலந்து பரிமாறுகையில் இயல்பை உடையவன். கோமளம் —ஸௌகுமார்யம். குடங்கை என்பதற்கு 'உள்ளங்கை' என்று சிலர் பொருள் கூறுவர்; அப்பொருள் கொண்டாலும் இவ்விடத்திற்கு அது பொருந்தாது; பெண்பிள்ளைகள் குழந்தைகட்கு முலை கொடுக்கும்போது தமது முழங்கையிலே குழந்தையை வைத்துக்கொண்டு முலை கொடுப்பது வழக்கமாதலால் இங்குக் குடங்கை என்பதற்கு 'முழங்கை' என்று பொருள் கொள்ளுதல் தகுதி; "கட்டுண்டபோது என் குடங்காலிருக்க வில்லாய்" இத்யாதி இடங்களில் குடங்கால் என்பதற்கு 'முழங்கால்' என்று பொருள் சொல்லவேண்டுமாதலால்; "குடங்கையில் மண்கொண்டளந்து" இத்யாதிகளில் 'உள்ளங்கை' என்ற பொருட்கு பாதகமில்லை யென்க. நெருடா, அருளா—செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; நெருடி, அருளி என்றபடி. (௮)

715 முழுதும்வெண்ணெயளைந்துதொட்டுண்ணும் முகிழிளஞ்சிறுத்தாமரைக்கையும் *
எழில்கொள்தாம்புகொண்டடிப்பதற்கு எள்குநிலையும்வெண்தயிர்தோய்ந்தசெவ்வாயும் *
அழுகையுமஞ்சிநோக்குமந்நோக்கும் அணிகொள்செஞ்சிறுவாய்நெளிப்பதுவும் *
தொழுகையுமிவைகண்டவசோதை தொல்லையின்பத்திறுதிகண்டாளே. (௯)

வெண்ணெய் முழுதும் அளைந்து — வெண்ணெயைக் குடத்திலுள்ள அளவும் (அளைந்திட்டு) அளைந்து
தொட்டு உண்ணும் — எடுத்து உண்கிற
முகிழ் இள சிறு தாமரை கையும் — மொட்டுக்களையும் தாமரையைப் போன்ற சிறிய திருக்கைகளும்
எழில் கொள் தாம்பு கொண்டு அடிப்பதற்கு — அழகிய தாம்பினால் அடிக்க (அதற்கு)
எள்கு நிலையும் — அஞ்சி நிற்கும் நிலையும்
வெண் தயிர் தோய்ந்த செவ்வாயும் — வெளுத்த தயிர் பூசிய சிவந்த வாயும்
அழுகையும் — அழுகையும்
அஞ்சி நோக்கும் அ நோக்கும் — பயந்து பார்க்கிற அப்பார்வையும்
அணி கொள் செம் சிறு வாய் நெளிப்பதுவும் — அழகிய சிவந்த சிறிய வாயை நெளிப்பதுவும்

தொழுகையும்	அஞ்சலி பண்ணுகையும் (ஆகிற)	அசோதை	யசோதைப்பிராட்டியானவள்
இவை	இவற்றையெல்லாம்	தொல்லை இன்பத்து	பரமானந்தத்தினுடைய
கண்ட	[illegible] அநுபவித்த	இறுதி	எல்லையை
		கண்டாள்	காணப்பெற்றாள்.

* * *—"தாரார் தடந்தோள்கள் உள்ளளவுங் கைநீட்டி, ஆராத வெண்ணெய் விழுங்கி" என்றபடி—வெண்ணெயிலுண்டான ஆதராதிசயத்தாலே கைமுழுதும் வெண்ணெய்க் குடத்திலே புகவிட்டு அளைகையால் "[illegible]" என்கிற சாமர்த்தியமான செய்நிலையும் அறியாதே அவிவேகத்தோற்றச் செய்த காரியங்களைக் காணப் பெறாதேன், என்கிறான் முதலடியில். "அடிப்பதற்கு" = அடிப்ப, அதற்கு எனப்பிரித்துரைத்தலுமாம்; தொகுத்தல்.

கண்ணன் தயிரைக் களவாடி உண்ணும்போது யசோதை கண்டு அடிக்கும் தாம்பு எடுத்தவாறே "தாமெடுத்த சிறுகோலுக்கு உளைந்தோடித், தயிருண்டவாய் துடைத்த மைந்தன்" என்றபடி அந்தத் தயிரை மறைப்பதாகத் துடைத்துக்கொள்ள ஆரம்பித்து வாய்க்கரையைச் சுற்றிலும் பூசிக்கொள்வன்; பிறகு யசோதையால் அடிபட்டு அழுவன், அஞ்சினாற்போல நோக்குவன், வாய் துடிக்கும்படி விக்கி விக்கி அழுவன், கடைசியாக அஞ்சலிபண்ணுவன்; ஆக இச்செயல்களையெல்லாம் கண்டு ஆநந்தத்தின் எல்லையிலே நிற்கும்படியான பாக்கியம் யசோதைக்குக் கிடைத்ததே! அவ்வின்பம் பெற்ற எனக்குக் கிடைக்காமற் போயிற்றே! என்று வருந்துகின்றான். [தொல்லையின்பத்திறுதி கண்டாளே.] "ஸ ஏகோ [illegible] [illegible] [illegible]" என்ற உபநிஷத்தின்படி—தொல்லையின்பம் என்றது எம்பெருமானுடைய கல்யாணகுணமே சொல்லிற்றாய், அபரிச்சிந்நனான அவனை யசோதை பரிச்சின்னமாக்கிக் கட்டினாளே! என்றுரைப்பது மொன்று. அழுகையும் தொழுகையும் பரிச்சின்னருடைய க்ருத்யமிறே. [பரிச்சின்னர்—ஜ்ஞான பட்டவர்.] (அ)

716 குன்றினால்குடைகவித்ததும் கோலக்குரவைகோத்ததும்குடமாட்டும் *
கன்றினால் விளவெறிந்ததும் காலால்காளியன்தலைமிதித்ததும்முதலா *
வென்றிசேர்பிள்ளைநல்விளையாட்டமனைத்திலும் அங்கென்னுள்ளமுள்குளிர *
ஒன்றுங்கண்டிடப்பெற்றிலேனடியேன் காணுமாறினியுண்டெனிலருளே. (௯)

குன்றினால் குடை கவித்ததும்	கோவர்த்தன மலையைக் குடையாகத் தூக்கி நின்றதும்	நல் பிள்ளை விளையாட்டம் அனைத்திலும்	விலக்ஷணமான பால்ய சேஷ்டிதங்களெல்லாவற்றிலும்
கோலம் குரவை கோத்ததும்	அழகாக ராஸக்ரீடை செய்ததும்	ஒன்றும்	ஒரு சேஷ்டிதத்தையும்
குடம் ஆட்டும்	குடக்கூத்தாடினதும்	என் உள்ளம் உள் குளிர	என் நெஞ்சு குளிரும்படி
கன்றினால் விள எறிந்ததும்	கன்றாய் நின்ற ஒரு அசுரனைக் கொண்டு (அசுராவேசமுடைய) விளங்கனியை உதிர்த்ததும்	அடியேன்	நான்
காலால் காளியன் தலை மிதித்ததும் முதலா	திருவடிகளாலே காளியநாகத்தின் தலையை மிதித்ததும் (ஆகிய இவை) முதலான	அங்கு கண்டிட பெற்றிலேன்	அச்சேஷ்டிதங்களை நீ செய்த இடத்தில் கண்ணாரக்கண்டு களிக்கப் பெற்றிலேன்;
		இனி	இப்போது
		காணும் ஆறு	(அவற்றை நான்) காணத்தக்க உபாயம்
		உண்டு எனில்	இருக்குமாகில்
வென்றி சேர	வெற்றி பொருந்திய	அருளே	கிருபைசெய்தருளவேணும்.

* * * உனது சேஷ்டிதங்களை யசோதைக்குக் காட்டினாற்போல் பாவியேன் கண்ணுக்கு நீ ஒன்றையும் காட்டவில்லை; நீ நடந்தவற்றையெல்லாம் எனக்காக மறுபடியும் ஒருதடவை செய்து காட்டக்கூடுமோ என் அப்பனே! என்கிறான். (௯)

717 வஞ்சமேவியநெஞ்சுடைப்பேய்ச்சி வரண்டுநார்நரம்பெழக் கரிந்துக *
நஞ்சமார்தருசுழிமுலையந்தோ சுவைத்துநீயருள்செய்துவளர்ந்தாய் *
கஞ்சன்நாள்கவர்கருமுகிலெந்தாய் கடைப்பட்டேன்வெறிதேமுலைசுமந்து *
தஞ்சமேலொன்றிலேனுய்ந்திருந்தேன் தக்கதேநல்லதாயைப்பெற்றாயே. (௰)

வஞ்சம் மேவிய நெஞ்சு உடை பேய்ச்சி — வஞ்சனை பொருந்திய நெஞ்சையுடையவளான பூதனையானவள்
வரண்டு — உடம்பு சோஷித்து
நார் எழ — (உடலிலுள்ள நரம்புகளெல்லாம்) வெளியில் தோற்றும்படி எழவும்
கரிந்து உக — கரிந்துபோய் சாம்பலாய் உதிரும்படியாகவும் (அவளுடைய)
நஞ்சம் ஆர்தரு சுழி முலை — விஷந்தீற்றிய கள்ள முலையை
நீ சுவைத்து — நீ ஆஸ்வாதனம் பண்ணியும்
அருள்செய்து — (என்மேல்) கிருபைபண்ணியே
வளர்ந்தாய் — உயிருடன் வளரப்பெற்றவனே
அந்தோ — ஆச்சர்யம்!
கஞ்சன் நாள் கவர் — கம்ஸனுடைய ஆயுளை அபஹரித்த
கரு முகில் எந்தாய் — காளமேகம் போன்ற ஸ்வாமியே!
முலை வெறிதே சுமந்து — (நான்) முலையை வீணாகச் சுமந்து
கடைப்பட்டேன் — கெட்டவளிலும் கடைகெட்டவளானேன்;
தஞ்சம் ஒன்று இலேன் — (உன்னையொழிய வேறு) புகலற்றிருக்கின்றேன்;
உய்ந்திருந்தேன் — (என் [illegible] முன்னிலைக் [illegible]) பிராணனைப் பிடித்துக்கொண்டு ஜீவிக்கின்றேன்;
தக்கது — உனக்குத் தகுதியான
நல்ல தாயை — நல்ல தாயாரை
பெற்றாய் — ஸம்பாதித்துக் கொண்டாய்.

*** [கடைப்பட்டேன் வெறிதே முலைசுமந்து.] முலை கொடுத்தபோது பாலுண்டு தாய் உன்னைப் பிள்ளையாகப் பெற்றமைத்தும் நீ வேறு முலையைத் தேடி ஓடினமையால் என் முலை பயனற்றொழிந்தமையாலே இம்முலை எனக்குப் பாரமும் போலே விளைய கமையாயிற் றென்றபடி. [தஞ்சமேல் இத்யாதி.] என் முன்னமே உயிர் துறந்திருக்க வேண்டுமாயினும் எப்போதாயினும் உன்னைக் காணப்பெறவேணு மென்னுமாசையால் பிராணனை வலிய பிடித்து வைத்துக்கொண்டிருக்கின்றேனென்று கருத்து. [தக்கதே இத்யாதி.] உனக்கு முலைப்பால் வேண்டும்போது என்னையும் விட்டுப் பூதனையைப் பற்றினையே] இதுவோ தகுதி என்றபடி. (௰)

718 மல்லைமாநகர்க்கிறையவன்தன்னை வான்செலுத்திவந்தீங்கணைமாயத்து *
எல்லையில்பிள்ளைசெய்வனகாணாத் தெய்வத்தேவகிபுலம்பியபுலம்பல *
கொல்லிகாவலன்மாலடிமுடிமேல் கோலமாங்குலசேகரன்சொன்ன *
நல்லிசைத்தமிழ்மாலைவல்லார்கள் நண்ணுவாரொல்லைநாரணனுலகே. (கக)

மல்லை மா நகர்க்கு — செல்வம் மிக்கிய பெரிய வட மதுரை நகர்க்கு
இறையவன் தன்னை — தலைவனாயிருந்த கம்ஸனை
வான் செலுத்தி — வீரஸ்வர்க்கத்திற்கு அனுப்பி
ஈங்கு வந்து அணை — (தேவகி ஸமீபமாகிய) இங்கே வந்து சேர்ந்த
பிள்ளை — கண்ணபிரானுடைய
மாயத்து எல்லை இல் செய்வன — அற்புதத்தில் எல்லையில்லாத சேஷ்டிதங்களை
காணா — (உடனிருந்து) காணப்பெறாத
தெய்வத் தேவகி — தெய்வத்தன்மை பொருந்திய தேவகியானவள்
புலம்பிய புலம்பல் — புலம்பிக்கொண்டு சொன்ன பாசுரங்களை
கொல்லி காவலன் — கொல்லி நகர்க்கு அரசரும்
மால் அடி முடி மேல் கோலம் ஆம் — ஸர்வேச்வரனுடைய திருவடிகளைத் தம் திருமுடிக்கு அலங்காரமாகவுடையவருமான
குலசேகரன் — குலசேகராழ்வார்
சொன்ன — அருளிச்செய்த
நல் இசை தமிழ் மாலை — நல்ல இசையையுடைய தமிழ் மொழியான சொல் மாலையை
வல்லார்கள் — ஓதவல்லவர்கள்
ஒல்லை — விரைவாக
நாரணன் உலகு — ஸ்ரீவைகுண்டத்தை
நண்ணுவார் — சேரப்பெறுவர்.

அடிவரவு:—ஆலை வடி முந்தை வனி மருவு தன்னம் குழகன் முழுது குன்று வஞ்சம் மல்லை மன்னு.

எட்டாந் திருமொழி—மன்னுபுகழ்.

ஸ்ரீ ராமாவதாரத்தில் கௌஸல்யை பெற்ற பேற்றைக்குறித்து, அவள் அவ்விராம பிரானைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுங் கூற்றாக இத்திருமொழி அருளிச்செய்கிறார். இவ்வநுபவம் இவர்க்குத் திருக்கண்ணபுரத்தெம்பெருமான் விஷயத்திலே செல்லுகிறது.

719 மன்னுபுகழ்க்கௌசலைதன் மணிவயிறுவாய்த்தவனே! *
தென்னிலங்கைக்கோன்முடிகள் சிந்துவித்தாய்செம்பொன்சேர் *
கன்னிநன்மாமதிள்புடைசூழ் கணபுரத்தென்கருமணியே! *
என்னுடையவின்னமுதே இராகவனே! தாலேலோ. (க)

மன்னு புகழ்	நிலைநின்ற புகழையுடைய	நல்	விலக்ஷணமாய்
கௌசலை தன்	கௌஸல்யையினுடைய	மா	பெரிதான
மணி வயிறு	அழகிய வயிற்றிலே	மதிள்	திருமதிளாலே
வாய்த்தவனே	பிள்ளையாகத் திருவவதரித்தவனே!	புடை சூழ்	எப்புறமும் சூழப்பட்ட
தென் இலங்கை கோன்	தென்னிலங்கைக்கு இறைவனான இராவணனுடைய	கணபுரத்து	திருக்கண்ணபுரத்திலெழுந்தருளியிருக்கிற
முடிகள்	பத்துத் தலைகளையும்	என் கரு மணியே	நீலரத்நம் போன்ற எம்பெருமானே!
சிந்துவித்தாய்	சிதறப் பண்ணினவனே!	என்னுடைய இன் அமுதே	எனக்கு போக்யமான அமுதமாயிருப்பவனே!
செம் பொன் சேர்	செவ்விய பொன்னாலே செய்யப்பட்டதாய்	இராகவனே!	ஸ்ரீராமனே!
கன்னி	அழிவில்லாததாய்	தாலேலோ	(உனக்குத்) தாலாட்டு.

* * *—இதில், முதலடியால் அவதாரமும், இரண்டாமடியால் அவதார ப்ரயோஜனமும் சொல்லப்பட்டன வென்க. கணபுரம்—கண்ணபுரம் என்பதன் தொகுத்தல்; திருக்கண்ணபுரம் என்னும் இத் திவ்யதேசம் சோழநாட்டுத் திருப்பதிகள் நாற்பதில் ஒன்று; இத்தலத்தில் சௌரிராஜப்பெருமாள் மிகவும் வரப்ரஸாதி என்பது ப்ரஸித்தம். நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகராழ்வார்-ஆகிய இவர்களால் மங்களாசாஸநஞ் செய்யப்பெற்ற சிறந்த திவ்யதேசம் இது. தாலேலோ—வளர்பிள்ளையைத் தொட்டிலிலே வளர்த்திப் பள்ளியுறப் பண்ணுகைக்காகச் சொல்லித் தாலாட்டுதல்; தால்—நாக்கு; தமிழ்த் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்றாகிய பிள்ளைத்தமிழில் இத்தாலாட்டை எட்டாம் பருவத்திற் கூறுவது வழக்கு. (க)

720 புண்டரிகமலரதன்மேல் புவனியெல்லாம்படைத்தவனே *
திண்டிறலாள்தாடகைதன் உரமுருவச்சிலைவளைத்தாய் *
கண்டவர்தம்மனம்வழங்கும் கணபுரத்தென்கருமணியே *
எண்டிசையுமாளுடையாய் இராகவனே! தாலேலோ. (உ)

புண்டரிகம் மலர் அதன் மேல்	(திருநாபியில் மலர்ந்த) தாமரைப் பூவின்மேல் (பிரமனைத் தோற்றுவித்து அவன் மூலமாக)	கண்டவர்	சேவித்தவர்கள்
புவனி எல்லாம் படைத்தவனே	உலகங்களெல்லாவற்றையும் சிருஷ்டித்தவனே!	தம் மனம் வழங்கும்	தங்கள் மனத்தைத் தாங்களே இசைந்து கொடுப்பதற்குக் காரணமான
திண் திறலாள் தாடகை தன்	திடமான பலத்தை யுடையவளான தாடகையினுடைய	கணபுரத்து என் கருமணியே—	
உரம் உருவ	மார்வைத் துளைக்கும்படியாக	எண் திசையும்	எட்டுத் திக்குகளிலுள்ளவர்களையும்
சிலை வளைத்தாய்	வில்லை வளைத்து அம்புவிட்டவனே!	ஆள் உடையாய்	அடிமை கொண்டருளுமவனே!
		இராகவனே! தாலேலோ—.	

721 கொங்குமலிகருங்குழலாள் கௌசலைதன்குலமதலாய் *
தங்குபெரும்புகழ்ச்சனகன் திருமருகா! தாசரதீ *
கங்கையிலும்தீர்த்தமலி கணபுரத்தென்கருமணியே *
எங்கள்குலத்தின்னமுதே இராகவனே! தாலேலோ. (உ)

கொங்கு மலி கரு குழலாள்	பரிமளம் மிகுந்த கறுத்த கூந்தலையுடையவளான
கௌசலை தன்	கௌஸல்யையினுடைய
குலம் மதலாய்	சிறந்த பிள்ளையானவனே!
தங்கு பெரு புகழ் சனகன்	பொருந்திய மஹாகீர்த்தியையுடைய ஜநக மஹாராஜனுக்கு
திரு மருகா	மாப்பிள்ளையானவனே!
தாசரதீ	சக்ரவர்த்தி திருமகனே!
கங்கையிலும்	கங்காநதியைக் காட்டிலும்
மலி தீர்த்தம்	சிறப்பு மிக்க தீர்த்தங்களையுடைய
கணபுரத்து	திருக்கண்ணபுரத்திலெழுந்தருளியிருக்கிற
என் கருமணியே—	
எங்கள் குலம்	எங்கள் ராஜவம்சத்துக்கு செல்வம்
இன் அமுதே	போக்யமான அம்ருதம் போன்றவனே!
இராகவனே! தாலேலோ—.	

எங்கள் குலத்து இன் அமுதே—ஸ்ரீராமன் ராஜவம்சத்திற் பிறந்தாற்போல இக்குலசேகராழ்வாரும் ராஜவம்சத்திற் பிறந்தவராதலால் இங்ஙனமருளிச் செய்தாரென்க. (உ)

722 தாமரைமேலயனவனைப் படைத்தவனே! * தயரதன்றன்
மாமதலாய்! மைதிலிதன்மணவாளா! * வண்டினங்கள்
காமரங்களிசைபாடும் கணபுரத்தென்கருமணியே *
ஏமருவுஞ்சிலைவலவா! இராகவனே! தாலேலோ. (௩)

தாமரைமேல்	(திருநாபிக்) கமலத்திலே
அயன் அவனை படைத்தவனே	பிரமனை உண்டாக்கினவனே!
தயரதன் தன் மா மதலாய்	தசரதனுடைய மூத்த குமாரனே!
மைதிலி தன் மணவாளா	ஸீதைக்கு வல்லபனே!
வண்டு இனங்கள்	வண்டுகளின் கூட்டங்கள்
காமரங்கள், இசைபாடும்	காமரமென்னும் இசையைப் பாடப்பெற்ற
கணபுரத்து	திருக்கண்ணபுரத்திலெழுந்தருளியிருக்கிற
என் கருமணியே—	
ஏ மருவும் சிலை வலவா	அம்புகள் பொருந்திய (ஸ்ரீசார்ங்கமென்னும்) வில்லில் வல்லவனே!
இராகவனே! தாலேலோ—.	

* * * "தாமரைமேல் அயனவனைப் படைத்தவனே!" என்று சொல்லி, "தயரதன்றன் மாமதலாய்!" என்று சொன்னவிது—எல்லாவற்றையும் ஸ்ருஷ்டிக்கும் பிரமனையே நீ இவ்வுலகில் ஒரு க்ஷிதிப்ரபுவான தசரதனைப் பிதாவாகக்கொண்டு 'அவனுடைய பிள்ளை' என்னும்படியாகப் பிறந்த அதிசயம் என்னே! என வியந்தவாறும்.

"ஏமருவுஞ்சிலை" ஏ—அம்புகளை, மருவும்—கூட்டுகின்ற, சிலை—வில், என்றும் பொருளாகலாம்: ஆயிரமும் தொடுக்கினும் எப்பொழுதும் கூட்டும் வில் என்பது கருத்து: வெகு சாதுரியமாய் அடக்கி ஆளத்தக்க வில்—என்றவாறு: இக்கருத்துத் தோன்றவே பெரியாழ்வாரும் "சார்ங்கமென்னும் வில் ஆண்டான் றன்னை" என்றருளிச் செய்தாரென்க. (௩)

723 பாராளும்படர்செல்வம் பரதநம்பிக்கேயருளி *
ஆராவன்பிளையவனோடு அருங்கானமடைந்தவனே! *
சீராளும்வரைமார்பா! திருக்கண்ணபுரத்தரசே! *
தாராளுநீண்முடி என்தாசரதீ! தாலேலோ. (௪)

பார் ஆளும் படர் செல்வம்	பூமி முழுவதையும் ஆட்சி புரிகையாகிற பெரிய ஐச்வர்யத்தை	அரு கானம் அடைந்தவனே	(புகுவதற்கு) அருமையான காட்டைக் குறித்து எழுந்தருளினவனே!
பரதன் நம்பிக்கே	ஸ்ரீ பரதாழ்வானுக்கே	சீர் ஆளும் வரை மார்பா	[illegible]
அருளி	கொடுத்து விட்டு	திருக்கண்ணபுரத்து அரசே!—	
ஆரா அன்பு இளையவனோடு	[illegible]	தார் ஆளும் நீள் முடி	[illegible]
		என் தாசரதீ! தாலேலோ—	

* * *—வனவாசஞ் செல்லும்போது இராமபிரான் இளையபெருமாளை நோக்கி, '[illegible] நான் போகிறேன்; நீ இங்கேயிருப்பாயாக' என்றபோது, அவர் [illegible] "ஆராவன்பிளையவனோடு" என்கிறது. [illegible] "[illegible]" [பெரிய திருமடல்] என்றும் [illegible]. (௫)

724 சுற்றமெல்லாம்பின்றொடரத் தொல்கானமடைந்தவனே! *
அற்றவர்கட்கருமருந்தே அயோத்திநகர்க்கதிபதியே! *
கற்றவர்கள்தாம்வாழும் கணபுரத்தென்கருமணியே! *
சிற்றவைதன்சொற்கொண்ட சீராமா! தாலேலோ. (௬)

சுற்றம் எல்லாம் பின் தொடர	எல்லா உறவினரும் பின்னே தொடர்ந்துவர,	கற்றவர்கள் தாம் வாழும் கண புரத்து	[illegible]
தொல் கானம் அடைந்தவனே	புராதனமான [illegible] அடைந்தவனே!	என் கரு மணியே	[illegible]
அற்றவர்கட்கு	[illegible]	சிற்றவை தன்	[illegible]
அரு மருந்தே	[illegible]	சொல் கொண்ட சீராமா	[illegible] ஸ்ரீ ராமனே!
அயோத்தி நகர்க்கு அதிபதியே	[illegible]	தாலேலோ—.	

* * * இராமன் காட்டுக் கெழுந்தருளுகையில் [illegible] ஸ்ரீராமாயணத்திற் காணும்; இங்கு, "சுற்றமெல்லாம் பின் தொடரத் தொல் கானமடைந்தவனே!" என்றருளிச்செய்தது [illegible] என்று எம்பெருமானார் [illegible] அருளிச்செய்தது—[illegible] அருளிச்செய்தபடி.

கற்றவர்கள்:—[illegible] [ஸ்ரீராமா—[illegible]] என்று [illegible] "[illegible]"

என்று உறுதிமொழி கூறிய இராமபிரான் அந்தப் பிரதிஜ்ஞையை நிறைவேற்றுதற்பொருட்டு தண்டகாரணியத்திற்குப் புறப்படுங்கால் பிராட்டி பெருமானை நோக்கி, 'ஆரியபுத்ர! தாபஸர்க்குத் தீமை அவலம்பித்துவந்து சேர்ந்தவிடத்தில் க்ஷத்ரியதர்மத்தினைப் பாராட்டக் கருதுவது உமக்குத் தகுதியன்று; உமது விஷயத்தில் ஒரு குற்றமுஞ் செய்யாத பிராணிகளை நீர் கொல்லமுயல்வது அநியாயமாகும்' என்று பணிவாக உணர்த்த; அது கேட்ட இராமபிரான், "ஸீதே! எனது பிராணனை விட்டாலும் விடுவேன்; லக்ஷ்மணனையும் உன்னையும் விட்டாலும் விடுவேன்; யாருக்காவது பிரதிஜ்ஞை செய்துகொடுத்து அதிலும் பிராமணர்களுக்குப் பிரதிஜ்ஞைசெய்து கொடுத்து அதைமாத்திரம் நிறைவேற்றாது விடமாட்டேன்; ரிஷிகள் தாமாக என்னிடம் வந்து முறையிடாமற் போனாலுங்கூட அவர்களை ரக்ஷிப்பது எனது கடமை; பிரதிஜ்ஞையும் பண்ணிக் கொடுத்துவிட்ட பின்னர் இனி நான் தவறக்கூடுமோ?" என்று சாரகர்ப்ப வார்த்தை சொல்லி அம்முனிவர்களைக் காத்தருளினமை கூறும் "அருமருந்தே!" என்னும் விளி. (௬)

725 ஆலினிலைப்பாலகனாய் அன்றுலகமுண்டவனே! *
வாலியைக்கொன்றரசு இளையவானரத்துக்களித்தவனே! *
காலின்மணிகரையலைக்கும் கணபுரத்தென்கருமணியே! *
ஆலிநகர்க்கதிபதியே அயோத்திமனே! தாலேலோ. (௭)

அன்று — முன்பு மஹாப்ரளயம் வந்தபோது
ஆலின் இலை — ஓர் ஆலந்தளிரிலே
பாலகன் ஆய் — இளங்குழந்தை வடிவங்கொண்டு
உலகம் உண்டவனே — லோகங்களையெல்லாம் திருவயிற்றில் வைத்துக் கொண்டவனே!
வாலியை கொன்று — வாலியைக் கொலைசெய்து
இளைய வானரத்துக்கு — அவனது தம்பியான வானரனுக்கு
அரசு அளித்தவனே — ராஜ்யத்தைக் கொடுத்தவனே!
காலின் மணி — கால்வாய்களிலுள்ள ரத்னங்களை
கரை அலைக்கும் — கரையிலே கொண்டு கொழிக்கப்பெற்ற
கணபுரத்து — திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளியிருக்கிற
என் கரு மணியே!—
ஆலி நகர்க்கு அதிபதியே — திருவாலி திருநகரிக்கு நிர்வாஹனே!
அயோத்தி மனே — அயோத்தி நகர்க்கு அரசனே
தாலேலோ—

"காலின்மணி கரையலைக்கும்" = உள்ளுக்கிடக்கிற ரத்னங்களைக் காற்றானது கரையிலே கொழிக்குமென்றபடி, அன்றி, கால் என்று கால்வாய்களைச் சொன்னதாய், கால்வாய்கள் தன்னகத்தே கொண்டுவந்து கரையிலே எறியுமென்றபடி. "ஆலிநகர்க் கதிபதியே" என்றவிடத்தில், "ஒரு வாலியைக்கொன்று ஒரு ஆலி நகரைத் தனதாக்கக்கொள்ளப்பெற்றதே!" என்று சாதூக்தி அருளிச் செய்வர் பெரியவாச்சான் பிள்ளை. (௭)

726 மலையதனாலணைகட்டி மதிளிலங்கையழித்தவனே! *
அலைகடலைக்கடைந்து அமரர்க்கமுதருளிச்செய்தவனே! *
கலைவலவர்தாம்வாழும் கணபுரத்தென் கருமணியே! *
சிலைவலவா! சேவகனே சீராமா! தாலேலோ. (௮)

மலை அதனால் அணை கட்டி — மலைகளைக்கொண்டு சேதுபந்தனம் பண்ணி
மதிள் இலங்கை அழித்தவனே — அரணையுடைத்தான லங்காபுரியைப் பாழ்படுத்தினவனே
அலை கடலை கடைந்து — அலையெறிகின்ற திருப்பாற்கடலைக் கடைந்து
அமரர்க்கு — தேவர்களுக்கு
அமுது — அம்ருதத்தை
அருளிச் செய்தவனே — கொடுத்தருளினவனே!
கலை வலவர் தாம் வாழும் கணபுரத்து — ஸகல சாஸ்த்ரங்களிலும் அறிவுடையவர்கள் வாழுமிடமான திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளியிருக்கிற
என் கரு மணியே!—;
சிலை வலவா — (ஸ்ரீ சார்ங்கமென்னும்) வில்லைச் செலுத்த வல்லவனே!
சேவகனே — வீரனே!
சீராமா! தாலேலோ—;

சேவகனே ! = சேவகம் என்று பராக்கிரமத்துக்குப் பெயராதலால், மறவீரனே ! என்றபடி. "இல்லையில்லை! சேவகனே !" என்ற சேர்த்தியால், சார்ங்கமும் கையுமாய் நின்ற படியான வீரப்பாடுடையவன் என்பது போதரும். (௯)

727 தளையவிழும்நறுங்குஞ்சித் தயரதன்தன்குலமதலாய் ! *
வளையவொருசிலையதனால் மதிளிலங்கையழித்தவனே ! *
களைகழுநீர்மருங்கலரும் கணபுரத்தென்கருமணியே ! *
இளையவர்கட்கருளுடையாய் இராகவனேதாலேலோ. (௧)

தளை அவிழும் நறுங்குஞ்சி	கட்டு அவிழும்படியான நறுமணமுடைய மயிர்முடியை யுடையவனும	மருங்கு அலரும் கணபுரத்து	அருகிலும் மலரப் பெற்ற திருக் கண்ணபுரத்தில் எழுந்தருளி யிருக்கிற
தயரதன் தன் குலம் மதலாய்	தசரத சக்கரவர்த்தியினுடைய சிறந்த திருக்குமாரனே!	என் கரு மணியே!—	
ஒரு சிலை வளைய	ஒப்பற்ற வில்லானது வளைய	இளையவர்கட்கு	இளையவர்கள் விஷயத்திலே
அதனால்	அந்த வில்லாலே	அருள் உடையாய்	கருணை பொருந்தியவனே!
மதிள் இலங்கை அழித்தவனே!—		இராகவனே! தாலேலோ—.	
களை கழுநீர்	களையாகப் பறிக்கப்பட்ட செங்கழுநீர்கள்		

* * *—இளையவர்கட்கு அருளுடையாய்! = வாலியை வதைத்து இளையவனான ஸுக்ரீவனுக்கு அருள்புரிந்தான்; இராவணனை வதைத்து இளையவனான விபீஷணனுக்கு அருள்புரிந்தான் என்கிற பெருமாளுக்கு ப்ரஸித்தி. அப்படிப்பட்டவர்களைப் பெற்றிருப்பவர்கள் திறத்தில் அருள் செய்பவன் என்றபடி. (௧)

728 தேவரையுமசுரரையும் திசைகளையும்படைத்தவனே ! *
யாவரும்வந்தடிவணங்க அரங்கநகர்த்துயின்றவனே ! *
காவிரிநன்னதிபாயும் கணபுரத்தென்கருமணியே ! *
ஏவரிவெஞ்சிலைவலவா இராகவனே ! தாலேலோ. (௰)

தேவரையும்	தேவர்களையும்	பாயும்	ப்ரவஹிக்கப்பெற்ற
அசுரரையும்	அசுரர்களையும்	கணபுரத்து	திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளியிருக்கிற
திசைகளையும்	திக்குகளையும் [அதாவது—எல்லா ப்ரதேசங்களையும்]	என் கரு மணியே!—	
படைத்தவனே	ஸ்ருஷ்டித்தவனே!	ஏ வரி வெம் சிலை வலவா	அம்புகள் தொடுக்கப் பெற்று அழகியதாய்ச் சத்ருக்களுக்குக் கொடிதா யிருக்கிற வில்லை ஆளவல்லவனே!
யாவரும் வந்து அடி வணங்க	எல்லாரும் வந்து திருவடிகளில் சேவிக்கும்படியாக	இராகவனே! தாலேலோ—.	
அரங்கம் நகர்	ஸ்ரீரங்கத்திலே		
துயின்றவனே	பள்ளி கொண்டிருப்பவனே!		
காவிரி நல் நதி	காவேரி யென்கிற சிறந்த நதி		

729 கன்னிநன்மாமதிள்புடைசூழ் கணபுரத்தென்காகுத்தன்
தன்னடிமேல் * தாலேலோவென்றுரைத்த தமிழ்மாலை *
கொன்னவிலும்வேல்வலவன் குடைக்குலசேகரன்சொன்ன
பன்னியநூல்பத்தும்வல்லார் பாங்காயபத்தர்களே. (௧௧)

என் காகுத்தன் தன் அடியேன்	என் வம்சத்திலுள்ள இராமபிரான் விஷயமாக
தாலேலோ என்று உரைத்த	(கௌஸல்யை) தாலாட்டுச் சொன்ன பாசுரங்களை. (உட்கொண்டு)
கோல் வளையும் வேல் வலவன் குடை குலசேகரன்	செங்கோலுடன் கூடின வேற்படையைச் செலுத்த வல்லவனும் குடையையுமுடைய [illegible]மான குலசேகராழ்வார்
கன்னி நன் மா மதிள் புடைசூழ் கணபுரத்து	காவலுடைமை சிறந்த அழகிய மதிள்கள் சுற்றிலும் சூழப் பெற்ற திருக்கண்ணபுரத்திலே
சொன்ன	அருளிச்செய்த
பன்னிய நூல் தமிழ் மாலை பத்தும்	பரம்பிய நூலாயுள்ள தமிழ்ப்பாமாலையான இப்பத்துப் பாசுரங்களையும்
வல்லார்	அதிகரிக்க வல்லவர்கள்
பாங்கு ஆய பத்தர்கள்	அமைந்த பக்திமான்களாகப் பெறுவர்.

௳ ௳ ௳—பாங்காய பத்தர்கள்=கௌஸல்யை இருந்தபடியாயிருந்து அநுபவித்தாற்போலவும், இவ்வாழ்வார் பக்தராயிருந்து அநுபவித்தாற்போலவும் பகவதநுபவத்தைப் பெறுவார்கள் என்க. (௧௧)

அடிவரவு—மன்னு புண்டரிக் கொங்கு தாமரை பாரி கற்றம் ஆலின் மலை தளிர் தேவர் கன்னி வன்றாள்.

ஒன்பதாந் திருமொழி—வன்றாளினிணை.

சக்கரவர்த்தி இராமனைப் பிரிந்தவளவிலே இரங்கிப் பேசின பேச்சுக்களின் வடிவமாக அருளிச் செய்வது, இத்திருமொழி.

730 வன்றாளினிணைவணங்கி வளநகரம்தொழுதேத்தமன்னனாவான்
நின்றாயை * அரியணைமேலிருந்தாயை நெடுங்கானம்படரப்போகு *
என்றாளெம்மிராமாவோ உனைப்பயந்தகைகேசிதன்சொற்கேட்டு *
நன்றாகநானிலத்தையாள்வித்தேன் நன்மகனேஉன்னைநானே. (௧)

எம் இராமாவோ	ஓ எமது இராமனே!
வளம் நகரம்	அழகிய அயோத்திமாநகரத்துப் பிரஜைகளெல்லாரும்
வன் தாளின் இணை வணங்கி தொழுது ஏத்த	(சரணமடைந்தவர்களின் எப்பொழுதும் விடமுடியாதவர்களுக்கும்) வலிமையையுடைய (உனது) இரண்டு திருவடிகளிலும் (விழுந்து) வணங்கித் [illegible]ழுந்து) கைகூப்பி நின்று துதிக்க
மன்னன் ஆவான் நின்றாயை	அரசனாய்ப் பட்டாபிஷேகஞ் செய்து கொள்ளுதற்கு விரைந்து நின்றவனும்
அரி அணை மேல் இருந்தாயை	சிம்மாசனத்தின் மீது வீற்றிருக்க விருந்தவனுமான உன்னை
நெடுங்கானம் படர போகு என்றாள்	'பெரிய காட்டிலே சென்று திரி (பதினான்கு வருஷம்) போ' என்று (கைகேயி) கூறினாள்;
நன் மகனே	நல்ல குமாரனே!
நான்	நான்
உனை பயந்த கைகேசி தன் சொல் கேட்டு	உன்னைப் பெற்ற மாதான கைகேயியின் வார்த்தையைக் கேட்டு
நன்றாக உன்னை நானிலத்தை ஆள்வித்தேன்	நன்றாக உன்னை இராஜ்யத்தை ஆளும்படி செய்தேன்.

௳ ௳ ௳ ‘‘நன்றாக உன்னை நானிலத்தை ஆள்வித்தேன்’’ என்றது—‘கல்லைக் கட்டிக் கடலுக்கு இறைத்தாய்’ என்பது போன்ற விபரீதலக்ஷணை. இப்படி நான் உன் பக்கல் பொறுக்கொண்ணாது செய்திட்டிருக்கும் நீ சிறிதும் குணம் குறைந்தாயில்லை; உன் குணம் போல்போல் மிக்கு விளங்கப்பெற்றாய்; எனவே குணக்கேடுடையனும் நீயோ நான் என்பான் ‘‘நன்மகனே!’’ என்று விளித்தான்: புத்திரலக்ஷணங்களைப் பூர்த்தியாகவுடையவன் என்றபடி; தன் சொல் தவறாது நடக்கும் மகனென்க. நற்றாய் இரக்கத்தை நன்கு விளக்கும். போகு—என்றாள்=போவென்றாள் என்று புணர்த்தக்கது. தெய்வசமனம் உயிர்வாக் குற்றியலுகரம்

[illegible]

731 [illegible]

[illegible]

732 [illegible]

[illegible]

* * * இன்றளவும் ராஜாத்மஜனான ஸுகுமாரமயமான மெத்தையிலே வாழுமே கிடந்து வளர்ந்த உனக்கு இனி * கொடுங்கதிரோன் துன்று வெயில்வறுத்த வெம்பரல்மேல் பதிக்க நேர்ந்ததே! இப்படிக்கொத்த கொடுமை! என்று அலுத்திரிக்கிறபடி. வல்வினையேன் என்றது:— "குடையுஞ்செருப்புங் கொடாதே தாமோதரனை நான், உடையுங்கடியனவூன்று வெம்பரற்களுடைக், கடிய வெங்கானிடைக் காலடிநோவக் கன்றின்பின், கொடியேனென்பிள்ளையைப் போக்கினேன் எல்லே பாவமே" என்றதுபோல, பெருமாளுடைய திருமேனி ஸௌகுமார்யத்தை நோக்காமல் வெவ்விய காட்டில் அனுப்பப் போகவிட்ட கொடுமையையுடைய தன்னைத்தானே வெறுத்துக் கூறியது. மனமுருக்கும் என்றவிடத்து, மனம் முருக்கும் என்றும் பதம்பிரிக்கலாம்; முருக்குதல்—அழித்தல். முருக்கு என்பதன் பிறவினை வியங்கு—உரித்தொல்; வியல் என்பதன் விகாரமுமாம். மிழல்—மிழல் என்பதன் ஈட்டம். (௨)

733 வாபோகுவாவின்னம்வந்தொருகால்கண்டுபோ மலராள்கூந்தல் *
வேய்போலுமெழில்தோளிதன்பொருட்டா விடையோன்றன்வில்லைச்செற்றாய் *
மாபோகுநெடுங்கானம்வல்வினையேன் மனமுருக்கும்மகனே! * இன்று
நீபோகவென்னெஞ்சம் இருபிளவாய்ப்போகாதேநிற்குமாறே. (௩)

வா	(சற்று இங்கே) வா;	விடையோன் தன் வில்லை	ரிஷபவாஹனனுடைய வில்லை
போகு	இனிச்செல்லலாய்;	செற்றாய்	முறித்தவனே!
வா	மறுபடியும் இங்குவா;	வல்வினையேன் மனம் உருக்கும் மகனே	மஹாபாபியான எனது மனத்தை உருகச் செய்கிற மைந்தனே!
இன்னம் வந்து ஒருகால் கண்டு போ	(போம்போது) இன்னமும் ஒருதரம் வந்து என்னைப் பார்த்து விட்டுப்போ;	இன்று	இப்போது
மலர் ஆள் கூந்தல்	புஷ்பங்கள் எப்போதும் தங்கியிருக்கிற மயிர்முடியையுடையவளும்	நீ	நீ
		மா போகு நெடுங் கானம் போக	மிருகங்கள் சஞ்சரிக்கிற பெரிய காட்டுக்குப்போக,
வேய்போலும் எழில் தோளி தன் பொருட்டு	மூங்கில்போன்ற அழகிய தோள்களையுடையவளுமான பிராட்டியை மணஞ்செய்து கொள்ளுதற்காக	என் நெஞ்சம்	எனது மனமானது
		இரு பிளவு ஆய் போகாதே நிற்கும் ஆறு ஏ	இரண்டு பிளவாகப் பிளந்து போகாமல் வலியதாய் நிற்கும் விதம் என்னே?

* * *—தசரதன் ஸ்ரீராமனை வநவாஸம் கழிப்பிட்டவுடனே கண்ணெதிரே ஸாமந்தர்களைவிட்டு வரும்படி அழைப்பிப்பன்; பின்பு அங்கிருந்தால் பின்னும் புகையும் கடைபழுதையும் எண்ணைக்கொண்டு 'போ' என்பன்; பின்னையும் கண்ணாறியப் போனவனே ஆற்றாமையால் 'வா' என்பன்; மீண்டும் வந்தவனோ 'இன்னம் போம்போது ஒருதரம் கண்டுபோ' என்பன்; இப்படி மனவிடத்தை அன்பினுடன் அவனது பிரிவை ஆற்றமாட்டாமையாலே மனக்கலக்கமுடையனாய்ப் பலமுறை 'வா' என்றும் 'போ' என்றும் மாறிமாறிச் சொல்லி வந்ததை சொன்னபடி. [மாபோகு] மா என்ற விலங்கின் பொதுப்பெயர், இங்கு யானையைக் குறிக்கும். "வா போகு வா இன்னம் வந்தொருகால் கண்டுபோ" என்பது—தசரதன் அறிவுகெட்டுப் புலம்புகிற சமயத்தில் வார்த்தைபாதனை அசக்தியாய் நிற்கின்றதென்ப. (௩)

734 பொருந்தார்கைவேல்நுதிபோல்பரல்பாய மெல்லடிக்கள்குருதிசோர *
விரும்பாதகான்விரும்பிவெயிலுறைப்ப வெம்பசிநோய்கூர * இன்று
பெரும்பாவியேன்மகனே! போகின்றாய் கேகயர்கோன்மகளாய்ப்பெற்ற *
அரும்பாவிசொற்கேட்டவருவினையேன் என்செய்கேனந்தோ யானே. (௪)

பொருந்தார் கை வேல் நுதி போல்	பகைவர்கள் கையிலேயிருக்கும் கூர்மையான வேலாயுதத்தின் நுனி போன்ற	பரல்	பருக்கைக் கற்கள்
		பாய	(காலில் தைத்து அழுத்தவும்

மெல் அடிகள் குருதி சோர	மென்மையான (உனது) பாதங்களிலிருந்து ரத்தம் பெருகவும்
வெயில் உறைப்ப	(மேலே) வெயில் உறைக்கவும்
வெம் பசி நோய் கூர	(வேண்டியவுணவு கிடையாமையால்) கொடிய பசியாகிய நோய் மிகவும்,
பெரும் பாவியேன் மகனே	மஹாபாவியான எனது மகனே!
இன்று	இப்பொழுது
விரும்பாத கான் விரும்பி போகின்றாய்	(ஒருவரும்) விரும்பாத காட்டை (உன்னைப் போகச் சொன்னவளின் சொற்படியே) விரும்பி (அவ்விடத்துக்குச்) செல்கிறாய்;
கேகயர்கோன் மகள் ஆய் பெற்ற அரும்பாவி	கேகயராஜன் பெற்ற மகளான கொடிய பாவியினுடைய
சொல் கேட்ட அருவினையேன் யான்	வார்த்தையைக் கேட்ட கொடுவினையேனான நான்
அந்தோ! என் செய்கேன்	ஐயோ! என்ன செய்வேன்!

* * *—எப்படிப்பட்ட கல்நெஞ்சினரும் செய்யமாட்டாத ஒருமஹா பாபத்தைச் செய்பவளான ஒரு பாபமூர்த்தியைக் கேகயராஜன் பெண்ணாய்ப் பெற்றான்; அவள் வார்த்தையிலே அகப்பட்டுக்கொண்டு நான் பரிஹாரமில்லாததொரு செயலைச் செய்துவிட்டேன்; இனி இதற்கு நான் செய்யக்கூடிய பரிஹாரம் ஒன்றுமில்லையே! என்று சக்கரவர்த்தி கூறுகிறபடி. மஹாபாவியான எனக்கு மகனாய்ப் பிறந்தமையாலன்றோ காடுபோனாய் நீ இவ்வளவு மஹா கஷ்டத்துக்குள்ளாக நேர்ந்தது என்பான் "பெரும்பாவியேன் மகனே!" என்கிறான். வெம்பசி நோய் கூர—[illegible] என்ற [illegible] செல்லவேண்டும். கேகயர்—கேகய தேசத்து அரசர்கள். (௭)

735 அம்மாவென் றுகந்தழைக்கு மார்வச்சொல் கேளாதே யணிசேர்மார்வம் *
என்னாரத் தடவழுந்தத் தழுவாதே முழுசாதே மோவாதுச்சி *
கைம்மாவின் நடையன்ன மென்னடையும் கமலம்போல் முகமும் காணாது *
எம்மானை என்மகனை இழந்திட்ட இழிதகையே னிருக்கின்றேனே. (௮)

அம்மா என்று உகந்து அழைக்கும்	'ஐயா!' என்று மகிழ்ந்துகொண்டு (மகன்) அழைக்கும்
ஆர்வம் சொல்	ப்ரீதி நிரம்பிய சொல்லை
கேளாதே	(நான்) கேட்கப் பெறாமலும்
அணி சேர் மார்வம்	ஆபரணங்கள் பொருந்திய (என் மகனது) மார்பு
என் ஆரத் தட அழுந்த	என் மார்பிலே அழுந்தும்படி
தழுவாதே	(என்னை அவன்) அணைத்துக்கொள்ளாமலும்
முழுசாதே	(அந்த ஆலிங்கன போகத்தில்) மூழ்காமலும்
உச்சி மோவாது	உச்சியை மோந்திடாமலும்
கைம்மாவின் நடை அன்ன மென்னடையும்	யானையினுடைய நடைபோன்ற (அழகிய அவனது) மென்மையான நடையின் அழகையும்
கமலம் போல் முகமும்	தாமரை மலர்போன்ற (அவனது) முகப்பொலிவையும்
காணாது	காணாமல்
எம்மானை என் மகனை இழந்திட்ட	ஸ்வாமியான என் மகனை (காட்டுக்குப்போகவிட்டு) இழந்துவிட்ட
இழி தகையேன்	இழிவான செயலைச் செய்தவனான நான்
இருக்கின்றேனே	இன்னமும் உயிரோடிருக்கின்றேனே!

* * * ஸ்ரீராமனைத் தான் 'ஐயா!' என்று அழைக்கும் மகனது இன்சொல்லைக் கேட்கப்பெறாமல் இறுகத்தழுவி நெஞ்சோடு சேர்க்கப்பெறாமல் செய்யும் ஆபரணங்கள் அணைந்து விளங்குகின்ற அவனது மார்பைத் தழுவிக்கொள்ளப் பெறாமலும், மூர்த்தாவக்ராணம் அருந்தப்பெறாமலும், உச்சிமோரப் பெறாமலும் நடையழகு காணப்பெறாமலும், முகாரவிந்தத்தை அநுபவிக்கப் பெறாமலும் என் கண்மணியைக் காட்டுக்குப்போக்கின படுபாவியான நான் அப்போதே சாவாமல் இன்னும் பிழைத்திருக்கவும் வேணுமோ! என்று பரிதபிக்கிறபடி. அம்மா என்னும் [illegible] அம்மாவென்று அழைத்தல், [illegible] "[illegible]" என்பது காண்க. ([illegible]) (௮)

736 பூமருவுநறுங்குஞ்சிபுன்சடையாப்புனைந்து பூந்துகில்சேரல்குல் *
காமரெழில்விழலுடுத்துக் கலனணியாதங்கங்களழகுமாறி *
ஏமருதோளென்புதல்வன் யானின்றுசெலத்தக்கவனந்தான்சேர்தல் *
தூமறையீர்இதுதகவோ?சுமந்திரனேவசிட்டனே சொல்லீரே. (அ)

தூ மறையீர்	நித்ய நிர்தோஷமான வேதத்தை ஓதியிருக்கிற பிராமணர்களே!	காமர் எழில் விழல் உடுத்து	காண்பவர்க்கு ஆசைப்படத்தக்க அழகிய விசுவாமித்ரத்தைச் சாத்தி
சுமந்திரனே	(ராஜ்யதந்த்ரத்தை நன்கறிந்து நடத்திப்போந்த மந்த்ரியே!	கலன் அணியாது	திருவாபரணங்களை அணியாமல்
வசிட்டனே	(ராஜ்யத்திற்கெல்லாம் உபதேசித்துப் போருகிற) வசிஷ்ட மஹர்ஷியே!	அங்கங்கள் அழகு மாறி	இப்படியாக பழுதுபட்டு மேல் திருவவயவங்களெல்லாம் உண்டான அழகு கெட்டு வேறுபட்டனவாக
(உங்களிடம் ஒரு விஷயம் கேட்கிறேன்)		ஏ மரு தோள் என் புதல்வன் தான்	ஆயுதங்களைத் தரிக்கின்ற தோள்களை உடையவனான எனது குமாரனானவன்
பூ மருவும் நறு குஞ்சி	புஷ்பங்களோடே கூடியிருப்பதால் மணம் கமழாநின்ற திருக்குழலை	யான் இன்று செலத்தக்க வனம் சேர்தல் இது	நான் இப்போது போகவேண்டிய காட்டுக்குத் தான் போவது
புன் சடை ஆ புனைந்து	விகாரமான ஜடையாகத் திரித்து	தகவோ	தகுதியானதோ!
பூ துகில் சேர் அல்குல்	நல்ல பட்டுப் பீதாம்பரங்கள் சாத்தவேண்டிய திருவரையிலே	நீர் சொல்லீர்	(தர்மஜ்ஞரான) நீங்களே (ஆராய்ந்து) சொல்லுங்கள்.

* * * நல்ல புஷ்பங்களைச் சூடிப் பரிமளம் வீசக்கடவதான திருக்குழலைச் சடையாகத் திரித்தும், நான் அநுபவிக்கவேண்டும் அரசாளவேண்டும் என்று அலங்கரித்து வைத்திருக்கும் பட்டுப் பீதாம்பரங்களில் ஒன்றைச் சாத்தக்கடவதான திருவரையில் விசுவாமித்ரத்தை முதலியன சாத்தியும், இயற்கையான அழகுக்கு மேலே செயற்கையழகுக்காக ஆபரணங்களைச் சாத்தவேண்டிய அவயவங்களில் அவற்றைச் சாத்திக்கொள்ளாமலும் ஆகிறோ! என் மைந்தன் காட்டுக்குச் சென்றானே! ஐயோ! இக்காடு இத்தகைய அழகனுக்குச் செல்லக் கூடியதோ! அநுபவிக்கவேண்டும் போகங்களை புசித்துப் பக்கிரூக்க நமக்கான [illegible] உடை [illegible] நான் இன்று போகக்கூடியதான காட்டிற்கு எனது மைந்தன் சென்றானே! இது என்ன அநியாயம்! தர்மங்களை அறிந்து அநுஷ்டித்தும் உபதேசித்தும் போருகிற மஹாநுபாவர்களே! இது நியாயந்தானோ? நீங்கள் சற்று ஆராய்ந்து சொல்லுங்கள்! என்கிறான்.

737 பொன்பெற்றாரெழில்வேதப்புதல்வனையும் தம்பியையும்பூவைபோலும் *
மின்பற்றாநுண்மருங்குல் மெல்லியலென்மருகியையும்வனத்திற்போக்கி *
நின்பற்றாநின்மகன்மேல்பழிவிளைத்திட்டு என்னையும்நீள்வானிற்போக்க *
என்பெற்றாய்கைகேசீ இருநிலத்தினிதாகவிருக்கின்றாயே. (கூ)

கைகேசீ	கைகேயியே	மின் பற்றா நுண் மருங்குல் மெல் இயல் என் மருகியையும்	மின்னலும் ஒப்பாகமாட்டாத நுண்ணிய இடையையும் மென்மையான தன்மையையு முடையவளுமான என் மருமகளாகிய ஸீதையையும்
பொன் பெற்றார் எழில் வேதம் புதல்வனையும்	கல்விச் செல்வத்தைப் பெற்றவர்களை உடைத்தியவனின் இம்மையிலும் அழகிய வேதங்களை ஓதியிருக்கிற மூத்த மகனான இராமனையும்	வனத்தில் போக்கி	காட்டுக்குப் போகச்செய்து
தம்பியையும்	(அவனது) தம்பியான லக்ஷ்ம[illegible]ணனையும்	நின் பற்றா நின் மகன் மேல் பழி விளைத்திட்டு	உனது அன்புக்கு இடமான உன் மகனான பரதன்மேல் பழி உண்டாம்படி செய்து
பூவை போலும்	(பேச்சின் இனிமையிற் கொஞ்சுகிற) கிளி போன்றவளும்		

மக்களையும் நின் காலில் போக்க	(புத்ரனிறைந்தால்) என்னேயும் இராமனையும் மேலுலகத்திற்கு அனுப்பியவளே	(இவ்வளவு செய்துவிட்டு நீ)	
		இருநிலத்தில்	பெரிய இவ்வுலகத்தில்
		இனிது ஆக	சுகமாக
என் பெற்றாய்	நீ என்ன பயனை அடைந்தாய்!	இருக்கின்றாயே	வாழுகின்றாயே.

* * *—"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு, மாடல்ல மற்றையவை" என்றபடி. கல்வி அழிவில்லாத சிறப்புடைய செல்வமாதலால் அக்கல்வியைப் பூர்ணமாகப் பெற்ற வசிஷ்டர் முதலிய உபாத்தியாயர்களைப் போன் பெற்றாள் என்றார். பரதன் அக்காட்டில்லாமல் மாதாமஹனைக் காணும்பொருட்டு மாமனுடைய கேகய தேசத்துக்குச் சென்றிருக்கையில் இங்குக் கைகேயி செய்த முயற்சி பரதனுக்குத் தெரியாததும் தெரிந்தவளவில் மிக்க வருத்தத்தைத் தருவதுமாகிறும் கைகேயி தன் மகனுக்காகச் செய்த முயற்சியில் அவள் மகனும் உடன்பட்டவனென்று உலகத்தார் சந்தேகித்து நிந்திப்பதற்கு இடங்கொடுத்ததால் "நின் மகன் மேல் பழி விளைத்திட்டு" எனப்பட்டது. உன் மகனுக்கு அநுகூலமாக நீ செய்த காரியம் அந்த உன் காதன்மகனுக்கே சகிக்கவொண்ணா பெரும்பழியை விளைத்துத் தீமையாய் முடிந்ததே! என்று எடுத்துக்காட்டியபடி. தசரதன் இங்ஙனம் தனக்கும் தன் அருமை மகனான இராமனுக்கும் பெருந்தீங்கு செய்த கைகேயியின் வயிற்றிற் பிறந்தவனென்ற காரணத்தாலே பரதனிடத்துங்கொண்ட உபேக்ஷையினும் அவனை நின்மகன் என்றான்.

மருவி-மகன் மனைவி, (இதன் ஆண்பால்-மருமகன்.) என் பெற்றாய்=இவ்வளவு கொடுமைகளை ஒருவகே செய்தற்கு நீ என்ன நிறைவைப் பெற்றாய்! எனினுமாம். [இருநிலத்தில் இனிதாக இருக்கின்றாயே.] "அம்மா! சாகாமலேயிருந்து, புத்ரர்களோடும் பர்த்தாவோடும் கூடியிருக்கையாய்த்து; உனக்குப் புத்ரனான பெருமாளைக் காட்டிலேபோக்கி என்னையும் சுவர்க்கத்திலே போக்குகையாலே ஸம்ஸாரமாகும் அழகிதாக அநுபவிக்கக்கடவையிறே" என்ற வியாக்கியானவாக்கிய காண்க. ஸ்ரீராமவிரஹத்தால் உலகமெல்லாம் வருந்திக்கிடக்கையில் நீ ஒருத்திமாத்திரம் மனமகிழ்ந்திருக்கின்றனையே, இது என்ன அழகு! என்க. (௫)

738 முன்னொருநாள்மழுவாளிசிலைவாங்கி அவன்தவத்தைமுற்றும்செற்றாய் *
உன்னையுமுன்னருமையையுமுன்மோயின்வருத்தமும் ஒன்றாகக்கொள்ளாது *
என்னையுமென்மெய்யுரையும்மெய்யாகக்கொண்டு வனம்புக்கவெந்தாய்! *
நின்னையேமகனாகப்பெறப்பெறுவேன் ஏழ்பிறப்பும்நெடுந்தோள்வேந்தே! (௬)

முன் ஒரு நாள்	முன்பு ஒரு காலத்தில்	என்னையும்	என்னையும்
மழு ஆளி சிலை வாங்கி	பரசுராமனிடத்திலிருந்து அவன் வில்லினை வாங்கி	என் மெய் உரையும்	எனது சத்யவாக்கையும்
அவன் தவத்தை முற்றும் செற்றாய்	அவனியற்றிய தபஸ்ஸின் பலனை முழுதும் (அம்பிற்கு இலக்காக்கி) அழித்திட்டவனே!	மெய் ஆக கொண்டு	பொருளாகக் கருதி
உன்னையும்	உன்னுடைய மென்மையையும்	வனம் புக்க எந்தாய்	காட்டுக்குச் சென்ற எமது ஸ்வாமியே!
உன் அருமையையும்	(நான் பெருந்தவஞ் செய்து) உன்னை அருமையாகப் பெற்ற தன்மையையும்	நெடுந்தோள் வேந்தே	பெரிய தோள்களையுடைய அரசனே!
உன் மோயின் வருத்தமும்	உனது பெற்ற தாயான கௌசல்யையின் (பிரிவில் தரிக்க வொண்ணாது) உண்டான வருத்தத்தையும்	ஏழ் பிறப்பும்	இனி அநேக ஜன்மங்கள் பிறக்கும் பிறந்த ஜன்மந்தோறும்
ஒன்று ஆக கொள்ளாது	ஒரு பொருளாகக் கொள்ளாமல்	நின்னையே மகன் ஆக பெற பெறுவேன்	நீ எனக்குப் பிள்ளையாய்ப் பிறக்கும்படி பேறுபெறக்கடவேன்.

* * *—மழு ஆளி=மழுவை (ஆயுதமாக) ஆள்பவன்; இ-கருத்தாப்பொருள் விகுதி. அன்றியே, மழு வாளி-மழுவாகிய ஆயுதத்தை யுடையவன்; இ-பெயர் விகுதி. மழு வாள்-இருபெயரொட்டுப் பண்புத்தொகை. மழு-கோடாலி.

என் ஐயனே! உன்மீது நான் வைத்திருக்கும் அன்பின் தன்மையை மெய்யாக அறியாமல் என்னை வெறுத்தவனைப் போலே நினைத்து அப்பிராமின் வாக்கியத்தைப் பரிபாலனம் பண்ணவேண்டுமென்றும், கேடுளாக ஸத்யமே சொல்லிவருகிற தந்தையை நாம் தோன்றி அஸத்யவாதியாக ஆக்கவொண்ணாதென்றும் என் ஸத்யத்தை ஸத்யமாக்க வேணுமென்றும் நெஞ்சிலே கொண்டு வனத்திற்புகுந்த என் அருமைமகனே! என்பது மூன்றாமடியின் கருத்து. தந்தை, மகனை எந்தாய் என்றது, அன்புபற்றிய வழுவமைதி. செற்றம்—செறு—பகுதி. (௯)

739 தேனகுமாமலர்க்கூந்தல் கௌசலையுஞ்சுமித்திரையுஞ்சிந்தைநோவ *
கூனுருவின்கொடுந்தொழுத்தைசொற்கேட்ட கொடியவள்தன்சொற்கொண்டு* இன்று
கானகமேமிகவிரும்பி நீதுறந்தவளநகரைத்துறந்து * நானும்
வானகமேமிகவிரும்பிப்போகின்றேன் மனுகுலத்தார்தங்கள்கோவே! (௰)

மனுகுலத்தார் தங்கள் கோவே	மனுகுலத்திற் பிறந்த அரசர்களிற் சிறந்தவனே!	கானகமே மிக விரும்பி இன்று நீ துறந்த	காட்டையே மிகவும் விரும்பி இப்பொழுது நீ கைவிட்ட
தேன் நகு மா மலர் கூந்தல்	தேனைப் புறப்பட விடுகிற சிறந்த மலர்களைச் சூடிய கூந்தலையுடைய	வளம் நகரை	(உன் பட்டாபிஷேகத்தின் பொருட்டு) அலங்கரிக்கப்பட்டிருக்கிற திருநகரத்தை
கௌசலையும்	கௌசல்யையும்	நானும் துறந்து	நானும் விட்டிட்டு
சுமித்திரையும்	ஸுமித்ரையும்	வானகமே மிக விரும்பி போகின்றேன்	மேலுலகத்தையே மிகவும் விரும்பி (அவ்விடத்திற்குச்) செல்லுகின்றேன்.
சிந்தை நோவ	மனம் வருந்த		
கூன் உருவின் கொடும் தொழுத்தை சொல் கேட்ட கொடியவள் தன் சொல் கொண்டு	வக்ரமான வடிவம் பெற்றவளும் கொடுந்தொழிலை உடையவளுமான தாதியின் வார்த்தையைக் கேட்ட கொடியவளான கைகேயியின் சொல்லை ஏற்றுக்கொண்டு		

* * *—மூன்று தாய்மார்களில் இரண்டுபேர் வருத்தம் ஒருத்தி மகிழ்வும் நீ அயோத்தியைத் துறந்து கானகஞ் சென்றமையாதலின், நானும் இவ்வயோத்தியைத் துறந்து மேலுலகை நோக்கிச் செல்லுகின்றேன் என்கிறான். கூனுருவின்—இன்—ஐந்தனுருபு, ஒப்புப்பொருள். கொடுமை—நிலைமையின்றி வளைவுடைமை; 'கொடுங்கோல்,' 'கொடுமரம்' என்ற இடங்களிற் காண்க. தொழுத்தை-தொழும்பன் என்பதன் பெண்பால். மநு-ஸூர்யனது குமாரன்; வைவஸ்வதமநு. (௰)

740 ஏரார்ந்தகருநெடுமாலிராமனாய் வனம்புக்கவதனுக்காற்றா *
தாரார்ந்ததடவரைத்தோள் தயரதன்தான் புலம்பியவப்புலம்பல்தன்னை *
கூரார்ந்தவேல்வலவன்கோழியர்கோன் குடைக்குலசேகரன்சொற்செய்த *
சீரார்ந்ததமிழ்மாலையிவைவல்லார் தீநெறிக்கண்செல்லார்தாமே. (௧௧)

ஏர் ஆர்ந்த	அழகு நிறைந்த	வேல் வலவன்	வேற்படையின் தொழிலில் வல்லவரும்
கரு	கரு நிறமுடைய	கோழியர் கோன்	உறையூரிலுள்ளார்க்குத் தலைவரும்
நெடு மால்	மஹா விஷ்ணு	குடை	கொற்றக்குடையை உடையவருமான
இராமன் ஆய்	ஸ்ரீ ராமனாகத் திருவவதரித்து	குலசேகரன்	குலசேகராழ்வார்
வனம் புக்க	காட்டுக்குச் சென்றதான	சொல் செய்த	அருளிச்செய்த
அதனுக்கு	அச்செயலை	சீர் ஆர்ந்த	சிறப்புமிக்க
ஆற்றா	பொறுக்கமாட்டாமல்	தமிழ் மாலை இவை	தமிழ்ப் பிரபந்தரூபமான இப்பத்துப் பாசுரங்களையும்
தார் ஆர்ந்த தட வரை தோள் தயரதன் புலம்பிய	வெற்றிமாலை பொருந்திய பெரிய மலைபோன்ற தோள்களையுடைய தசரத சக்கரவர்த்தி கதறின	வல்லார்	கற்கவல்லவர்கள்
அப்புலம்பல் தன்னை	அக்கதறுதலை,	தீ நெறிக்கண்	கொடியவழி யொன்றிலும்
கூர் ஆர்ந்த	கூர்மை மிக்க	செல்லார்	செல்லமாட்டார்கள்.

(தான், தாம்—அசைகள்)

அடிவரவு:—வன்றாள் வெவ்வாய் கொல்லை வாபோகு பொருந்தார் அம்மா பூப் பொன் மூன் தேன் ஏரார் அங்கண்.

ஸ்ரீராம சரித்திரத்தை ஸ்ரீ வால்மீகிபகவான் பேசியநுபவித்தாற்போலத் தாமும் பேசி அநுபவிக்கிறார்—இத்திருமொழியில். இத்திருமொழி ஸ்ரீராமாயண ஸங்க்ரஹமெனப்படும்.

741
அங்கணெடுமதிள்புடைசூழயோத்தியென்னும் அணிநகரத்துலகனைத்தும்விளக்குஞ்சோதி *
வெங்கதிரோன்குலத்துக்கோர்விளக்காய்த்தோன்றி விண்முழுதுமுயக்கொண்டவீரன்றன்னை *
செங்கணெடுங்கருமுகிலையிராமன்தன்னைத் தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் *
எங்கள்தனிமுதல்வனையெம்பெருமான்தன்னை என்றுகொலோகண்குளிரக்காணுநாளே. (க)

அம் கண் — அழகிய இடத்தையுடையதும்
நெடு மதிள் — உயர்ந்த மதிள்களினால்
புடை சூழ் — நாற்புறமும் சூழப்பட்டதும்
அயோத்தி என்னும் — 'அயோத்யா' என்று ப்ரஸித்தமான
அணி நகரத்து — அழகிய நகரத்திலே,
உலகு அனைத்தும் — உலகங்களையெல்லாம்
விளக்கும் சோதி — விளங்கச் செய்கிற தனது ஒளியை அமைத்தவனே,
வெம் கதிரோன் குலத்துக்கு — ஸூர்ய வம்சத்துக்கு (விளக்கமுண்டாம்படி)
ஓர் விளக்கு ஆய் தோன்றி — ஒப்பற்றதொரு விளக்குபோல (அதில்) வந்து அவதரித்து
விண் முழுதும் — தேவர்களெல்லாரையும்
உய்யக் கொண்ட — துன்பந்தீர்க்கும்படி செய்த
வீரன் தன்னை — மஹாவீரனும்,
செம் கண் — சிவந்த திருக்கண்களையுடைய
நெடு கரு முகிலை — பெரிய காளமேகம் போன்ற வடிவுடையவனும்
இராமன் தன்னை — ஸ்ரீராமனென்னும் திருநாமமுடையவனும்
தில்லை நகர் திருச் சித்ர கூடம் தன்னுள் — தில்லை நகரத்திலுள்ள திருச்சித்ரகூடத்தில் (எழுந்தருளியிருக்கிற)
எங்கள் தனி முதல்வனை — எமக்கு ஒப்பற்ற காரணமாயிருப்பவனும்
எம் பெருமான் தன்னை — எமக்குத் தலைவனுமான பரமனை
கண் குளிர காணும் நாள் — கண்கள் குளிரும்படி ஸேவிக்கும் நாள்
என்று கொல் ஓ — என்றைக்கோ!

742 வந்தெதிர்ந்ததாடகைதன்னுரத்தைக்கீறி வருகுருதிபொழிதரவன்கணையொன்றேவி *
மந்திரங்கொள்மறைமுனிவன்வேள்விகாத்து வல்லரக்கருயிருண்டமைந்தன்காண்மின் *
செந்தளிர்வாய்மலர்நகைசேர்செழுந்தண்சோலைத் தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் *
அந்தணர்களொருமூவாயிரவரேத்த அணிமணியாசனத்திருந்தவம்மான்தானே. (உ)

வந்து எதிர்ந்த தாடகை தன் உரத்தை கீறி — செருக்கி வந்து எதிரிட்ட தாடகையினுடைய மார்பைப் பிளந்து
வரு குருதி பொழிதர — ரத்தம் வெளிவந்து சொரியும்படி
வல் கணை ஒன்று ஏவி — வலிய ஒப்பற்றதோர் அம்பைச் செலுத்தி
மந்திரம் கொள் மறை முனிவன் வேள்வி காத்து — எல்லா மந்திரங்களையும் தம்மிடத்திலே கொண்ட வேதங்களின் வழியே விச்வாமித்ர மஹாமுனி செய்த யாகத்தைப் பாதுகாத்து
வல் அரக்கர் — (அந்த யாகத்துக்கு இடையூறு செய்த ஸுபாஹு முதலிய) வலிய ராக்ஷஸர்களுடைய
உயிர் உண்ட — உயிரைக் கொள்ளைகொண்ட
மைந்தன் — மிடுக்கையுடையவன் (யாரென்னில்,)
செம் தளிர் வாய் — சிவந்த தளிர்களின் நடுவே
மலர் — மலர்ந்த புஷ்பங்களையுடையதும்
நகை சேர் — (காண்பவர்) மகிழும்படியான அழகு பொருந்தினதும்
செழு — செழுமையை யுடையதுமான
தண் — குளிர்ந்த
சோலை — சோலைகளையுடைய
தில்லை நகர் திருச் சித்ரகூடம் தன்னுள்—;
அந்தணர்கள் ஒரு மூவாயிரவர் ஏத்த — ப்ராஹ்மணர் மூவாயிரம் பேர் (நின்று துதிக்க)
அணி மணி ஆசனத்து இருந்த — அழகிய ரத்னஸிம்ஹாஸனத்திலே வீற்றிருந்த
அம்மான் தானே — ஸர்வேச்வரனே யாவன்;
காண்மின் — அறியுங்கள்.

***—விச்வாமித்ர முனிவன் தனது வேள்வியைக் காக்கும்பொருட்டு தசரத சக்கரவர்த்தியிடம் அநுமதிபெற்று இராமபிரானை இளையபெருமாளுடன் அழைத்துக்கொண்டு போனபொழுது அம்முனிவனது ஆச்ரமத்திற்குச் செல்லும் வழியிடையே மிக்க செருக்குடன் வந்து எதிர்த்த தாடகையை ஸ்ரீராமன் முனிவனது கட்டளைப்படி பெண்ணென்று பாராமற் போர்செய்து கொன்றது மன்றி, பின்பு முனிவன் செய்த யாகத்தில் இடையூறுசெய்ய வந்த ஸுபாஹு முதலிய பல அரக்கர்களையுங் கொன்று மாரீசனை வாயவ்யாஸ்த்ரத்தினாற் கடலிலே தள்ளிவிட்டு யாகத்தை நிறைவேற்றுவித்தனன் என வரலாறு அறிக.

[அந்தணர்கள் ஒரு மூவாயிரவர்.] "[illegible] ஆயிரம், தில்லை மூவாயிரம்" என்ற ப்ரஸித்தி காண்க; "மூவாயிர நான்மறையாளர் நாளும் முறையால் வணங்க அணங்காயசோதி, தேவாதிதேவன் திகழ்கின்ற தில்லைத் திருச்சித்ரகூடஞ் சென்று சேர்மின்களே" என்றார் திருமங்கையாழ்வாரும். (அ)

749 செவ்வரிநற்கருநெடுங்கண்சீதைக்காகிச் சினவிடையோன்சிலையிறுத்துமழுவாளேந்தி *
வெவ்வரிநற்சிலைவாங்கிவென்றிகொண்டு வேல்வேந்தர்பகைதடிந்தவீரன்தன்னை *
தெவ்வரஞ்சுநெடும்புரிசையுயர்ந்தபாங்கர் தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் *
எவ்வருவெஞ்சிலைத்தடக்கையிராமன்றன்னை இறைஞ்சுவாரிணையடியேயிறைஞ்சினேனே.(கூ)

செவ்வரி நல் கரு நெடு கண்	(உத்தம ஸ்த்ரீலக்ஷணமான) சிவந்த ரேகைகள் படர்ந்த அழகிய கறுமையான நீண்ட கண்களையுடைய
சீதைக்கு ஆகி	ஸீதையை மணம்புரிதற் பொருட்டு
சினம் விடையோன்	கோபத்தையுடைய ரிஷபத்தை வாஹனமாக வுடையனான சிவபிரானுடைய
சிலை இறுத்து	வில்லை முறித்து (மீண்டு மிதிலையினின்று மீளும் வழியில்)
மழு வாள் ஏந்தி	பரசுவென்னும் ஆயுதத்தை ஏந்தியவனான பரசுராமனுடைய
வெம் வரி நல் சிலை	பயங்கரமான கட்டமைந்த சிறந்த வில்லை
வாங்கி	வளைத்துக்கொண்டு (வலிந்து)
வென்றி கொண்டு	(அவனை) வென்று
வேல் வேந்தர் பகை தடிந்த	(தான் அவதரித்த குல நிமித்தமாக) வேற்படையையுடைய க்ஷத்ரியர்களுக்குப் பகையைத் தீர்த்த
வீரன் தன்னை	மஹாவீரனை,—
தெவ்வர்	பகைவர்கள்
அஞ்சு	(கிட்டமாட்டாதிருந்தே, கடக்க வொண்ணாதென்று) அஞ்சும்படியான
நெடு புரிசை	உயர்ந்த மதிளையும்
உயர்ந்த பாங்கர்	சிறந்த (அட்டாலை போன்றவும்) மதிற்பக்கத் திடங்களையு முடைய
தில்லை நகர் திருச் சித்ரகூடம் தன்னுள்—	(எழுந்தருளியிருக்கிற)
எவ்வரு வெம் சிலை தட கை இராமன் தன்னை	(வேறொருவரால்) அடக்கியாளுதற்கு அரியதும் (பகைவர்க்கு) பயங்கரமுமான வில்லை ஏந்திய பெரிய கையையுடைய இராமபிரானை
இறைஞ்சுவார்	வணங்குகிற அடியார்களுடைய
இணை அடியே	இரண்டு திருவடிகளையே
இறைஞ்சினேன்	வணங்கினேன்.

***—[illegible] எவ்வரி, என்றே பாடங்கொள்ளுவர்; அப்பாடத்துக்கு எவ்வரி என்பது எவ்வரிவென்று விகாரப்பட்டதெனக்கொண்டு, எ—அம்பு தொடுப்பதற்கு உரிய வரி—நீண்ட என்று கண்டபடிப் பொருள்கொள்ளலாமாயினும், "வேறொருத்தரால் அடக்கியாள வொண்ணாதே காணவே ப்ரதிபக்ஷம் முடியும்படியான ஸ்ரீசார்ங்கம்" என்ற வியாக்யானத்திற்கு அப்பாடம் சேராது. எவ்வரு என்றே பாடமே சிறக்கும். எவ்வு என்பது [illegible] தனை நோக்கி 'எவ்வரு' எனக் குறுக்கலும் விரித்தலுமாகிய விகாரங்களை யடைந்தது. எவ்வுதல், அடக்கியாளுதல்; (முதனிலைத் தொழிற்பெயர்.) அரு—அன்றது; எனவே, அடக்கியாள முடியாத என்றதாயிற்று. [இறைஞ்சுவார் இணையடியே இறைஞ்சினேனே.] இராமனுக்கு அடியவனான பரதனுக்கு அடிமை பூண்டொழுகின சத்ருக்நன் போலப் பாகவத நிஷ்டனாக வேண்டுமென அவாவுகின்றார்.(கூ)

744 தொத்தலர்பூஞ்சுரிகுழல்கைகேசிசொல்லால் தொன்னகரந்துறந்து துறைக்கங்கைதன்னை *
பத்தியுடைக்குகன்கடத்தவனம்போய்ப்புக்குப் பரதனுக்குப்பாதுகமுமரசுமீந்து *
சித்திரகூடத்திருந்தான்றன்னை யின்றுதில்லைநகர்த்திருச்சித்திரகூடந்தன்னுள் *
எத்தனையுங்கண்குளிரக்காணப்பெற்ற இருநிலத்தார்க்கிமையவர்நேரொவ்வார்தாமே. (௫)

[illegible]

[illegible]

745 வலிவணக்குவரைநெடுந்தோள்விராதைக்கொன்று வண்டமிழ்மாமுனிகொடுத்தவரிவில்வாங்கி *
கலைவணக்குநோக்கரக்கிமூக்கைநீக்கிக் கரனோடுதூடணன்தன்னுயிரைவாங்கி *
சிலைவணக்கிமான்மறியவெய்தான்றன்னைத் தில்லைநகர்த்திருச்சித்திரகூடந்தன்னுள் *
தலைவணக்கிக்கைகூப்பியேத்தவல்லார் திரிதலால்தவமுடைத்துத்தரணிதானே. (௬)

[illegible]

* * *—இராமபிரான் பரசுராமனிடமிருந்து வில்லையும் அம்பையும் பெற்று அவனை வென்றபோது அங்குவந்து தன்னைக் கொண்டாடிய தேவர்களுள் வருணனிடத்திலே அவ்வில்லைக் கொடுத்து அதனை நன்றாகப் பாதுகாத்துவைத்திருந்து உரிய சமயத்தில் தன்னிடம் கொணர்ந்து கொடுக்கும்படி சொல்ல, அவ்வண்ணமே அதனை வாங்கிச்சென்று நன்கு பாதுகாத்து வைத்திருந்த வருணன் பின்பு ஸ்ரீராமன் வனவாஸம்புக்குத் தண்டகாரணியத்தில் அகஸ்தியாச்ரமத்திற்கு எழுந்தருளினபொழுது அதனை அம்பறாத்தூணியுடனும் வாளுடனும் அம்முனிவர் தர, பெருமான் பெற்றுக் கொண்டான் என்பது இங்கு அறியத்தக்கது.

சூர்ப்பணகையை அங்கபங்கஞ் செய்தது இளைய பெருமாளின் செய்கையாயினும் அதனைப் பெருமாள் மேல் ஏற்றிச் சொன்னது, இராமனது கருத்துக்கு ஏற்ப அவன் கட்டளையிட்டபடி இவன் செய்தனனாதலின் ப்ரயோஜக கர்த்தாவின் வியாபாரம்பற்றி யென்க. அன்றியும் "[illegible]" என்றபடி இராமபிரானுக்கு லக்ஷ்மணன் வலத்திருக்கை யெனப்படுதலால் அக்கையால் செய்கிற லக்ஷ்மணனுடைய செயலை இராமன்மேல் ஏற்றிச் சொல்லுதல் தகுதியே. சூர்ப்பணகை ராமலக்ஷ்மணர்களிடம் வரும்போது அழகிய வடிவமெடுத்து வந்தவளாதலால் "[illegible] நோக்கரசி" என்றார். "மானின் விழிபெற்று மயில் வந்ததென வந்தாள்" என்றார் கம்பரும். இங்கே மூக்கு என்றது—மற்றும் அறுபட்ட அவயவங்களுக்கும் உபலக்ஷணம்.

746 தனமருவு வைதேவி பிரியலுற்றுத் தளர்வெய்திச் சடாயுவை வைகுந்தத்தேற்றி *
வனமருவு கவியரசன் காதல்கொண்டு வாலியைக்கொன்று இலங்கைநகர் அரக்கர்கோமான் *
சினமடங்க மாருதியால் சுடுவித்தானைத் தில்லைநகர்த் திருச்சித்ரகூடந்தன்னுள் *
இனிதமர்ந்த அம்மானை இராமன்தன்னை ஏத்துவாரிணையடியே ஏத்தினேனே. (௫)

தனம் மருவு	(தான் விரும்புஞ்) செல்வமாய்ப் பொருந்திய
வைதேவி பிரியல் உற்று	சீதாபிராட்டி பிரியப்பெற்று
தளர்வு எய்தி	(அதனால்) வருத்தமடைந்து
சடாயுவை	ஜடாயுவென்னும் கழுகரசை
வைகுந்தத்து ஏற்றி	பரமபதத்திற் செலுத்தி
வனம் மருவு	(வாலிக்கு அஞ்சிக்) காட்டில் மறைந்து வசிக்கிற
கவி அரசன்	வானரராஜனான ஸுக்ரீவனுடைய
காதல் கொண்டு	ஸ்நேஹஞ் செய்துகொண்டு
வாலியை கொன்று	(அவனது விருப்பத்தின்படி அவன் தமையனான) வாலியை வதைத்து.
இலங்கை நகர்	இலங்கையிலுள்ள
அரக்கர் கோமான் சினம் அடங்க	(அரக்கர் தலைவனாகிய) ராவணனுடைய [redacted] செருக்கு ஒழியும்படி
மாருதியால் சுடுவித்தானை	அநுமானைக் கொண்டு எரிப்பித்தவனும்
தில்லை நகர் திருச் சித்ரகூடம் தன்னுள்—	
இனிது அமர்ந்த	இனிமையாய் எழுந்தருளியிருக்கிற
அம்மானை	ஸர்வேச்வரனான
இராமன் தன்னை	ஸ்ரீராமபிரானை
ஏத்துவார்	துதிக்கின்ற அடியார்களுடைய
இணை அடியே	உபயபாதங்களையே
ஏத்தினேன்	துதிக்கும் தன்மையேன் (யான்.)

* * —"தனமருவு வைதேவி" என்றவிடத்து, தனம் என்பதை ஜநக மென்ற வட சொல்லின் விகாரமாகக்கொண்டு வேறுவகையாகவும் பொருள் கூறுதலாமாயினும் "[illegible] ஸ்ரீ" என்றபடி பெருமாளுக்கு தனமென்ற வடசொல் விகாரம். (௫)

747 குரைகடலை அடலம்பால் மறுகவெய்து குலைகட்டி மறுகரையை அதனாலேறி *
எரிநெடுவேல் அரக்கரொடும் இலங்கைவேந்தன் இன்னுயிர்கொண்டு அவன்தம்பிக்கு அரசுமீந்து *
திருமகளோடு இனிதமர்ந்த செல்வன்தன்னைத் தில்லைநகர்த் திருச்சித்ரகூடந்தன்னுள் *
அரசமர்ந்தான் அடிசூடும் அரசையல்லால் அரசாகவெண்ணேன் மற்றரசுதானே. (௬)

குரை கடலை — கோஷிக்கின்ற கடலை
அடல் அம்பால் — தீக்ஷ்ணமான அம்பைக் கொண்டு
மறுக எய்து — கலங்கும்படி எய்யத் தொடங்கி,
குலை கட்டி — (அதில்) அணைகட்டி
அதனால் — அந்த அணைவழியாக
மறு கரையை ஏறி — (கடல் கடந்து) அக்கரை சேர்ந்து
எரி நெடு வேல் அரக்கரொடும் — (சத்ருக்களை) எரிக்கின்ற நீண்ட வேற்படையையுடைய இராக்ஷஸர்களும்
இலங்கை வேந்தன் — இலங்கைக்கு அரசனான இராவணனும் ஆகிய இவர்களுடைய
இன் உயிர் கொண்டு — இனிய உயிரைக் கவர்ந்து [கொன்று]
அவன் தம்பிக்கு — அவ்விராவணனது தம்பியான விபீஷணனுக்கு
அரசும் ஈந்து — ராஜ்யத்தைக் கொடுத்து
திருமகளோடு — லக்ஷ்மியின் அவதாரமான பிராட்டியுடனே
இனிது அமர்ந்த — இனிமையாகச் சேர்ந்த
செல்வன் தன்னை — எல்லாவகைச் செல்வங்களுமுடையவனும்
தில்லை நகர் திருச் சித்ரகூடம் தன்னுள்—;
அரசு அமர்ந்தான் — தனது மேன்மை தோன்ற எழுந்தருளியிருப்பவனுமான இராமபிரானது
அடி சூடும் — திருவடிகளைத் தலைமேற் கொள்ளுதலாகிற
அரசை அல்லால் — அரசாட்சியைப்பெற விரும்புவேனேயன்றி
மற்று அரசு — அதற்கு மாறான ஸ்வாதந்திரியப் பாராட்டுகிற அரசாட்சியை
அரசு ஆக எண்ணேன் — ஒரு பொருளாக மதிக்கமாட்டேன்.

* * உ—இப்படி ஸாது பரித்ராணமும் துஷ்ட நிக்ரஹமும் செய்தருளி உலகத்தை உய்வித்தருளிய இராமபிரானது திருவடிகளைச் சிரோபூஷணமாகக் கொள்வதே தமக்குப் பெருந்த ஸாம்ராஜ்யமென்பதை இப்பாட்டால் வெளியிட்டார். (அ)

748 அம்பொனெடுமணிமாடவயோத்தியெய்தி அரசெய்தியகத்தியன்வாய்த்தான்முன்கொன்றான்
தன் * பெருந்தொல்கதைகேட்டுமிதிலைச்செல்வி உலகுய்யத்திருவயிறுவாய்த்தமக்கள் *
செம்பவளத்திரள்வாய்த்தன்சரிதைகேட்டான் தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் *
எம்பெருமான்தன்சரிதைசெவியால்கண்ணால்பருகுவோம் இன்னமுதம்மதியோமன்றே. (கூ)

அம் நெடு பொன் மணி மாடம் — அழகிய உயர்ந்த பொன்னினாலும் இரத்தினங்களாலும் அமைக்கப்பட்ட உப்பரிகை வீடுகளையுடைய
அயோத்தி — அயோத்யா நகரத்துக்கு
எய்தி — மீண்டுவந்து
அரசு எய்தி — அரசாட்சியை அடைந்து
தான் முன் கொன்றான் தன் — தன்னால் முன்பு கொல்லப்பட்டவனான இராவணனுடைய
பெரு தொல் கதை — பெரிய பூர்வ வ்ருத்தாந்தங்களை யெல்லாம்
அகத்தியன் வாய் கேட்டு — அகஸ்திய மஹாமுனிவன் வாயாற் சொல்லக்கேட்டு,
மிதிலை செல்வி — மிதிலா நகரத்தில் தோன்றிய பிராட்டி
உலகு உய்ய — உலகமுழுவதும் வாழும்படி
திருவயிறு வாய்த்த — பெற்ற
மக்கள் — தன் பிள்ளைகளான குசலவர்களுடைய
செம் பவளம் திரள் வாய் — சிவந்த பவழத்துண்டு போன்ற வாயினால்
தன் சரிதை — தனது சரித்திரமான ஸ்ரீராமாயணத்தை
கேட்டான் — கேட்டருளினவனுமான
தில்லை நகர் திருச் சித்ரகூடம் தன்னுள்—;
(எழுந்தருளியிருக்கிற)
எம்பெருமான் தன் — எமது தலைவனுடைய
சரிதை — சரித்திரத்தை
செவியால் கண்ணால் பருகுவோம் — காதினால்கேட்டு (அப்பெருமானைக்) கண்ணாலும் ஸேவிக்கப் பெறுவோமாயின்;
(அதுவேயன்றி,)
இன் அமுதம் — இனிய தேவாம்ருதத்தையும்
மதியோம் — ஒரு பொருளாக நன்கு மதிக்க மாட்டோம்
அன்றே — அல்லவா? (ஈற்றசை, தேற்றமுமாம்.)

* * *—ஆராவமுதமாகவுள்ள எம்பெருமானுடைய ஸேவையின் மிக்க இனிமைக்கும், அங்ஙனமேயுள்ள அப்பிரானுடைய சரித்திரத்தின் மிக்க இனிமைக்கும் தேவாம்ருதத்தின் இனிமை சிறிதும் ஈடாகாதென்னும் கருத்தால், இன்னமுதம் மதியோம் என்கிறார். "இன்னமுதமதியோ மொன்றே" என்றும் பாடமுண்டாம்: அமுதம்—அமுதத்தை, ஒன்று—ஒரு பொருளாக, மதியோம் என்றபடி.

குலசேகரர் இராமாயண ப்ரவசனஞ்செய்து அதனும் உகைந்தது கன்னெஞ்சிமில் உட்ந்த தும், இராமபிரான்காலத்திற்குப்பின் அப்பெருமான்போலவே நீதி முறை தவறாது உலகைக் இனிது ஆளுதலும் தோன்ற "உகரும்பத் திருவயிறு வாய்த்த மக்கள்" என்றார்.

749 செறிதவச்சம்புகன்தன்னைச்சென்றுகொன்று செழுமறையோனுயிர்மீட்டுத்தவத்தோனீந்த *
நிறைமணிப்பூணணியுங்கொண்டிலவணன்தன்னைத் தம்பியால்வானேற்றிமுனிவன்வேண்ட *
திறல்விளங்குமிலக்குமனைப்பிரிந்தான்தன்னைத் தில்லைநகர்த்திருச்சித்திரகூடந்தன்னுள் *
உறைவானைமறவாதவுள்ளந்தன்னையுடையோம் மற்றுறுதுயரமடையோமன்றே. (௯

செறி தவம் — மிக்க தபஸ்ஸையுடையவனான
சம்புகன் தன்னை — (சூத்ரஜாதியனான) சம்புகனை
சென்று கொன்று — (அவனிருக்கு மிடந்தேடிச்) சென்று கொன்று
செழு மறையோன் உயிர் மீட்டு — சிறந்த ப்ராஹ்மண குமாரனுடைய உயிரை மீட்டுக் கொடுத்து,
தவத்தோன் ஈந்த — அகஸ்தியமாமுனிவன் கொடுத்த
நிறை மணி பூண் அணியும் கொண்டு — பெருவிலையுள்ள ரத்ந மயமான ஆபரணத்தையும் சாத்தியருளி
இலவணன் தன்னை — லவணாஸுரனை
தம்பியால் — சத்ருக்நனைக்கொண்டு
வான் ஏற்றி — வீரஸ்வர்க்கத்திற் குடியேற்றுவித்து
முனிவன் வேண்ட — துர்வாஸமுனிவனது சாபத்தால்
திறல் விளங்கும் இலக்குமனை பிரிந்தான் தன்னை — பராக்கிரமம் விளங்கப் பெற்ற லக்ஷ்மணனைத் துறந்தவனும்

தில்லை நகர் திருச் சித்ரகூடம் தன்னுள்—,

உறைவானை — நித்யவாஸம் பண்ணுமிறைவனுமான இராமபிரானை
மறவாத உள்ளம் தன்னை உடையோம் — மறவாமல் எப்பொழுதும் நினைக்கிற மனத்தையுடையோம்
மற்று உறு துயரம் அடையோம் — இனி (எம்பெருமானை அநுபவிக்கப் பெற்றிலோமென்று) வருந்துன்பத்தை அடையமாட்டோம்.

(அன்று, சடை சற்றனை.)

* * *—தன்னை அக்காலத்திற் காணப்பெறாத குறைநீரப் பிற்காலத்தார் காணும்படி தில்லைத் திருச்சித்திரகூடத்தில் அப்படிப்பட்ட திவ்விய மங்கள விக்ரஹத்தோடு நித்யவாஸம் செய்தருளாநின்ற எம்பெருமானை இறையும்மறவாது எப்பொழுதும் நினைப்போமாகில், 'அக்காலத்தில் எம்பெருமானை அநுபவிக்கப் பெற்றிலோமே' என்றவருந் துன்பத்தை அடையமாட்டோம் என்றவாறு. (௯)

750 அன்றுசராசரங்களைவைகுந்தத்தேற்றி அடலரவப்பகையேறியசுரர்தம்மை
வென்று * இலங்குமணிநெடுந்தோள்நான்குந்தோன்ற விண்முழுதுமெதிர்வரத்தன்தாமம்மேவி *
சென்றினிதுவீற்றிருந்தவம்மான்தன்னைத் தில்லைநகர்த்திருச்சித்திரகூடந்தன்னுள் *
என்றும்நின்றானவனிவனென்றேத்தி நாளுமிறைஞ்சுமினோவெப்பொழுதுந்தொண்டீர்களே. (௰)

அன்று — (தன்னுடைச்சோதிக்கு எழுந்தருளுகிற) அக்காலத்தில்
சர அசரங்களை — (அயோத்யாபுரியிலுள்ள) ஜங்கமமும் ஸ்தாவரமுமான எல்லாவுயிர்களையும்
வைகுந்தத்து ஏற்றி — பரமபதத்துக்குப் போகச் செய்து,
அடல் அரவம் பகை ஏறி — வலிமையையுடைய பாம்புகளுக்குப் பகைவனான கருடன் மேல் ஏறிக்கொண்டு
அசுரர் தம்மை வென்று — அசுரர்களை ஜயித்து
இலங்கும் மணி நெடு தோள் நான்கும் தோன்ற — (ரத்நாபரணத்தையுடைய) விளங்கப் பெற்ற அழகிய நீண்ட (தனது) திருக்கைகள் நான்கும் விளங்க
விண் முழுதும் எதிர் வர — பரமபதத்திலுள்ளாரெல்லாரும் எதிர்கொண்டு உபசரிக்கும்படி
தன் தாமம் மேவி சென்று — தமது ஸ்தாநமான அப்பரமபதத்திலே போய்ப்புக்கு
இனிது வீற்றிருந்த — (தன் மேன்மையெல்லாம் தோன்றும்படி) இனிமையாகத் (திவ்யஸிம்ஹாஸநத்தில்) எழுந்தருளியிருந்த

அம்மான் தன்னை	ஸர்வேச்வரனை	தொண்டீர் நீர்	அவனுக்கு அடியவர்களான நீங்கள்
தில்லை நகர் திரு சித்ரகூடம் தன்னுள் என்றும் நின்றான் அவன் இவன் என்று ஏத்தி	(அந்த இருப்பில் ஒன்றும் குறையாமல் அவ்வாறே) தில்லைச் சித்ரகூடத்தில் எக்காலும் (ஸேவை தந்து) நித்யவாஸம் பண்ணுகிற அப்பெருமான் இவ் ஸ்ரீராமபிரானே யென்று நினைத்து	நாளும் எப்பொழுதும்	தினந்தோறும் எப்பொழுதும்
		இறைஞ்சுமின்	வணங்கி உஜ்ஜீவியுங்கள். (ஏ—இசைநிறை.)

* * *—இவ்வாறு பெருமானை விட்டுப் பிரிந்திருக்கமாட்டாமல் மிகவும் க்லேசமடைந்த இராமபிரான் ராஜ்யத்தைவிட்டு எழுந்தருளத் தொடங்கியபோது அயோத்யா நகரத்து உயிர்களெல்லாம் பெருமானைச் சரணமடைந்து 'தேவரீர் எங்குச் சென்றாலும் அடியோங்களையும் கூடவே அழைத்துக்கொண்டு செல்லவேண்டும்' என்று பிரார்த்திக்க, ஸ்ரீராமன் அவர்களுடைய பக்திப்ரகர்ஷத்தைக்கண்டு 'அப்படியே ஆகட்டும்' என்று அருளிச்செய்து, அனைவரையும் தம்மைப் பின்தொடர்ந்து வரும்படி பணித்தருளிப் ப்ரயாணப்பட்டார். அப்பொழுது அயோத்தியிலிருந்த பசுக்களேயன்றி விலங்கு பறவை முதலிய அஃறிணை உயிர்களும் அமைந்து பெருமான்பின் சென்றன. இவ்வண்ணம் யாவரும் புடைசூழ ஸ்ரீராமன் ஸரயூநதியில் இறங்கித் தன்னடிச்சோதிக்கு எழுந்தருளும்போது தம்மிடத்து இடையறாத அன்புகொண்டு பின்பற்றிச் சரயுவில் மூழ்கி உடம்பைத் துறந்த எல்லாவுயிர்கட்கும் ப்ரஹ்மலோகத்துக்கு மேற்பட்டதாய்ப் பரமபதம்போலவே அப்ராக்ருதமாயிருக்கிற மேம்பாடுள்ள ஸாந்தாநிகமென்னும் உலகத்தை அளித்தனர். ஸ்ரீராமபிரான் பரமபதத்துக்குச் சென்றபோது, சங்க சக்கரங்களைத் தரிக்கிற மேற்புறத் தோளிரண்டும் தோன்றப் பெற்றமை விளங்க, "அசுரர் தம்மை வென்றிலங்கு மணிநெடுந்தோள் நான்குந் தோன்ற" என்றார்; இந்த அடைமொழியை வீற்றிருந்த என்பதனோடாவது சித்ரகூடந்தன்னுள் நின்றான் என்பதனோடாவது இயைத்தலும் ஏற்கும். அடலரவப் பகையேறி என்றதை, தன்தாமம்மேவி என்றதனோடும், அசுரர் தம்மை வென்று என்றதனோடும் இயைக்கத்தக்கது. (௰)

751 தில்லைநகர்த் திருச்சித்ரகூடந்தன்னுள் திறல்விளங்கு மாருதியோடமர்ந்தான் தன்னை *
எல்லையில்சீர்த் தயரதன்தன் மகனாய்த் தோன்றிற்றது முதலாத் தன்னுலகம்புக்கதீறா *
கொல்லியலும் படைத்தானைக் கொற்றவொள்வாள் கோழியர்கோன் குடைக்குலசேகரன் சொற்செய்த *
நல்லியலின் தமிழ்மாலை பத்தும் வல்லார் நலந்திகழ் நாரணனடிக்கீழ் நண்ணுவாரே. (௧௧)

தில்லை நகர் திரு சித்ரகூடம் தன்னுள்—		கொல் இயலும் படை தானை கொற்றம் ஒள் வாள் கோழியர் கோன் குடை குலசேகரன் சொல் செய்த	(பகைவர்களைக்) கொல்லுதல் பொருந்திய ஆயுதங்களையுடைய சேனையையும் வெற்றியையும் ஒளியையுமுடைய வாளையுமுடையவரும் உறையூரிலுள்ளார்க்குத் தலைவரும் வெண் கொற்றக்குடையையுடையவருமான குலசேகராழ்வார் அருளிச்செய்த
திறல் விளங்கும்	பல பராக்கிரமம் விளங்கப் பெற்ற	நல் இயல்	சிறந்த இயற்றமிழுக்கு அமைந்து இசைந்த
மாருதியோடு	அநுமானுடனே	இன் தமிழ் மாலை பத்தும்	இனிய தமிழ்ப் ப்ரபந்த ரூபமான இப்பத்துப் பாசுரங்களையும்
அமர்ந்தான் தன்னை	நித்யவாஸம் பண்ணுகிற எம்பெருமானைக்குறித்து	வல்லார்	கற்று வல்லவர்கள்
எல்லை இல் சீர் தயரதன் தன் மகன் ஆய் தோன்றிற்று அது முதல் ஆ தன் உலகம் புக்கது ஈறு ஆ	அளவில்லாத புகழையுடைய தசரதச்சக்ரவர்த்தியின் குமாரனாய்ப் பிறந்தது முதல் பரமபதம் புக்கது இறுதியாக (ஸ்ரீராமாயணத்தை முழுவதையும் ஸங்க்ரஹமாக அமைத்து)	நலம் திகழ்	பரமபதத்தில் விளங்குகிற
		நாரணன்	ஸ்ரீமந் நாராயணனுடைய
		அடி கீழ் நண்ணுவார்	திருவடிகளிற் சேரப் பெறுவார்கள்.

* * *—இவ்விதத் திருச்சித்ரகூடத் தெம்பெருமான் விஷயமாக ஸ்ரீகுலசேகராழ்வார் அருளிச்செய்த பரமபோக்யமான இத்திருமொழியை ஓதவல்லவர்கள் எம்பெருமானருளாற் பரமபதமடைவரென்று பயனுரைத்துத் தலைக்கட்டியருளாயிற்று. பால்யத்தில் ப்ரஹ்மா அளித்த வரத்தினால் சிரஞ்ஜீவியானவரும், [illegible] [அதிமாநுஷ்ஸ்தவம்.]

என்றபடி—ஸ்ரீராமகதை உலகத்திலுள்ளளவும் நாம் ஜீவித்திருக்குமாறு ஸ்ரீராமனிடம் வரம்வேண்டிப் பெற்றவருமான திருவடி, இராமபிரான் தன்னைச் சோதிக்கு எழுந்தருளிய பொழுது அவனைவிட்டுப் பிரியமாட்டாது மனமிரங்க, அந்த உத்தம பக்த சிகாமணியைத் தானும் விடமாட்டாமல் ஸ்ரீராமன் அவருடனே சித்ரகூடத்தில் வந்து வீற்றிருக்கின்றனனாம்.

அடிவரவு:—அங்கண் வந்து செவ்வரி தொத்து வலி தனமு [illegible] அம்பொன் செறி அன்று தில்லை பூவிரை

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்.

பெருமாள்கோயில் ப்ரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர் இயற்றிய,
பெருமாள் திருமொழி உரை
முற்றுப்பெற்றது.